பக்கங்கள்: 20

விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 வள்ளுவர் ஆண்டு 2049 பங்குனி 14 புதன்கிழமை 28.03.2018 கதிர் 143

இனி இது ரகசியம் அல்ல!

Seasoned Politician என்பார்கள். அதிகம் அனுபவம் வாய்ந்த அரசியல்வாதி ஒருவரைத்தான் அப்படி அழைப்பதுண்டு.

நேற்று ஓர் அரசியல்வாதியுடன் பேசினேன். இந்தச்சொல்தான் எனக்கு நினைவுக்கு வந்தது.

பக்கம் 03

# ஈ.பி.டி.பி. ஆதரவை நாடியிருப்பின் கொள்கைகள் கைவிடப்பட்டனவா?

## கூட்டமைப்பிடம் விக்கி நேரடிக் கேள்வி



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மார்ச் 28

"உள்ளூராட்சிச் சபைகளில் ஆட்சி அமைப்பதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஈ.பி.டி.பியின் ஆதரவைப் பெற்றுக் கொண்டிருந்தால், சுயலாபத்துக்காகக் கூட்டமைப்பு கொள்கையைக் கைவிட்டுவிட்டது என்றே அர்த்தம்".

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன்.

யாழ். கந்தர்மடம் அரசடி வீதியில் அமைந்துள்ள 'தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின்' அலுவலகம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக வடக்கு முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் பக்கம் 18

## ஈ.பி.டி.பி. செய்த ஊழல்களை விசாரிக்கட்டும் ஆர்னோல்ட்

### கோருகிறார் வடக்கு முதல்வர்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மார்ச் 28

யாழ்ப்பாணம் மாநகர சபை நிர்வாகத்தில் கடந்த காலங்களில் ஈ.பி.டி.பி செய்த ஊழல்கள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் தெரிவாகியுள்ள மாநகர சபை முதல்வர் விரிவான விசாரணைகளை மேற் பக்கம் 18

## கொடிகாமத்தில் நேற்று வெடிகுண்டுகள் மீட்பு!



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மார்ச் 28

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வெடிகுண்டுகள் நேற்று மீட்கப்பட்டுள்ளதாகக் கொடிகாமம் பொலிஸார் பக்கம் 18

## ஈ.பி.டி.பியுடன் நாங்கள் கூட்டுச்சேரவே இல்லை!

### கூறுகிறார் மாவை எம்.பி.

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மார்ச் 28

ஈ.பி.டி.பியை ஒருகாலத்திலும் நான் விமர்சிக்கவும் இல்லை. அவர்கள் ஒட்டுக் குழுவினர் என்றவார்த்தைகளை நான் ஒருபோதும் பக்கம் 03

## ரணிலைக் கவிழ்க்க ஆதரவு கொடோம்!



கொழும்பு, மார்ச் 28

இப்போது உள்ள நல்லாட்சி அரசை வீழ்த்த வேண்டிய அவசியம் எமக்கு இல்லை. அதனால் பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எம்மால் ஆதரவளிக்க முடியாது என அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பக்கம் 18

## தமிழ்த் தேசியப் பசுமை இயக்க பணிமனையை திறந்தார் விக்கி



யாழ்ப்பாணம், மார்ச் 28

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைமைப் பணிமனை முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரனால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பக்கம் 18

### பருத்தித்துறை, வல்வெட்டித்துறை நகர சபைகளிலும் ஆட்சியைப் பிடித்து

## ஈ.பி.டி.பியின் பேராதரவுடன் கோலோச்சும் கூட்டமைப்பு!







(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மார்ச் 28

ஈ.பி.டி.பி. மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகியவற்றின் பேராதரவுடன் பருத்தித்துறை, வல்வெட்டித்துறை நகர சபைகளின் நேற்றுத் தலைமையைக் கைப்பற்றியது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

பக்கம் 18

## மே 7ஆம் திகதியே தொழிலாளர் தினம்



கொழும்பு, மார்ச் 28

உலகத் தொழிலாளர் தினமான மேதினக் கூட்டங்களை மே 7ஆம் திகதி பக்கம் 18

## சுதாகரனுக்குப் பொதுமன்னிப்பு; வடமாகாண அரசும் கோரிக்கை

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மார்ச் 28

அரசியல் கைதியான ஆனந்தசுதாகரனுக்குப் பொது மன்னிப்பளித்து விடுதலைசெய்யவேண்டுமென வலியுறுத்தி வடக்கு மாகாண சபையின் அமைச்சர்கள், உறுப்பினர் பக்கம் 18

## தொண்டராசிரியர்களுக்கு மே 5 இற்கு முன்னர் தீர்வு!

### வடக்கு அவைத் தலைவர் உறுதி

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மார்ச் 28

வடக்கு மாகாணத் தொண்டர் ஆசிரியர்களுக்கு மே மாதம் 5ஆம் திகதிக்குள் மாகாண சபை தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் எனத் தெரிவித்த வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம், அவர்கள் தமது போராட்டத்தைக் கைவிட வேண்டுமென்றும் கோரிக்கை பக்கம் 18

## படைச் சிப்பாயிடம் துப்பாக்கி பறிப்பு!

### முல்லைத்தீவில் துணிகரம்

முல்லைத்தீவு, மார்ச் 28

முல்லைத்தீவு – ஆண்டாங்குளம் காட்டுப் பகுதியில் கடமையில் இருந்த இராணுவச் சிப்பாய் ஒருவரிடம் இருந்து ஏகே-47 துப்பாக்கி ஒன்றை அடையாளம் தெரியாத நபர் ஒருவர் பறித்துச் சென்றுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பக்கம் 18

## தொண்டர் ஆசிரியர்களால் வடமாகாண சபை முற்றுகை

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மார்ச் 28

வடக்கு மாகாண சபை மற்றும் முதலமைச்சர் அலுவலகங்களை முற்றுகையிட்டு மாகாணத் தொண்டராசிரியர்கள் நேற்றுப் பக்கம் 18

### அரசியல் கைதியின் விடுதலையை வலியுறுத்தி

# முல்லைத்தீவில் கையெழுத்து சேகரிப்பு

முல்லைத்தீவு , மார்ச் 28

அரசியல் கைதியான ஆனந்த சுதாகரனை நிபந்தனையற்ற பொது மன்னிப்பில் ஜனாதிபதி விடுதலை செய்ய வேண்டும்எனக்கோரிமுல்லைத்தீவு மாவட்டத்தில் வள்ளுவர் புரம், தேராவில் போன்ற பிரதேசங்களில் நேற்றுமுன்தினம் கையெழுத்து சேகரிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

மாணிக்கபுரம் இளங்கோபுரம் மற்றும் அதனை அண்டிய பகுதி இளைஞர்களும் மூங்கிலாறு பகுதி மகளிர் அமைப்புக் களும் இணைந்து இந்த கையெழுத்து சேகரிப்புநடவடிக்கையை முன்னெடுத்தனர்.





இந்த நிலையில், புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குத் தெரிவான உறுப்பினர் ஊடாக ஜனாதிபதியிடம் கையளிப்பதற்காக ஏற்பாடுகளும் இதன் போது மேற்கொள்ளப்பட்டன.

கடந்த 2008 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு மகஸின் சிறைச்சாலையில்தடுத்து வைக்கப்பட்ட பின்னர் கடந்த வருடம் ஆயுள்தண்டனை விதிக்கப்பட்ட அரசியல்கைதியான சச்சிதானந்தம் ஆனந்தசுதாகரனின் மனைவி ஆனந்த சுதாகர் யோகராணி கடந்த 15 ஆம் திகதி சுகவீனம் காரணமாக உயிரிழந்தார்.

இவரின் இறுதிக் கிரியைகள் கிளிநொச்சி, மருதநகர் கிராமத்தில் இடம்பெற்றபோது மனைவியின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொள்வதற்காக பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் மூன்று மணி நேரமே கால அவகாசம் வழங்கப்பட்டு மனைவியின் மரணச்சடங்கில் கலந்து கொண்ட பின் மீண்டும் பொலிஸாரால் சிறைச் சாலை வாகனத்தில் அழைத்துச் செல்லப்பட்டார்.

இதன்போது தந்தை சிறைச்சாலை வாகனத்தில் ஏறியபோது அவரது மகளும் தந்தையுடன் சிறைச் சாலை வாகனத்தில் ஏறிய சம்பவம் அனைவரது மனதையும் நெகிழ வைத்துள்ளது.

நீதிமன்றின் ஊடாக 97 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட அரசியல் கைதியான ஆனந்தசுதாகருக்கு மகனும் மகளும் என இரு பிள்ளைகள் உள்ளனர்.

தந்தை கடந்த 2008 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்ட பின்னர் தாயின் அரவணைப்பில் வாழ்ந்த இரண்டு பிள்ளைகளும் தற்போது தந்தையையும் தாயையும் இழந்த நிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனவே, இவரை நிபந்தனையற்ற பொது மன்னிப்பில் ஜனாதிபதி விடுதலை செய்யுமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இதற்கமையவே இந்த கையெழுத்து சேகரிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (சு-8)

## முல்லை. மரப்பாலத்தை புனரமைக்கக் கோரிக்கை

முல்லைத்தீவு, மார்ச் 28

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மாணிக்கபுரம் கிராமத்தில் இருந்து பாரதி வித்தியாலயத்துக்குச் செல்லும் வீதியில் காணப்படும் மரப் பாலத்தை புனரமைத்து தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



யுத்தத்திற்கு முன்னரும் யுத்தம் முடிவடைந்து மீள்குடியேறிய பின்னரும் இன்றுவரையும் இந்தப் பாலம் இதுவரை புனரமைப்பின்றி காணப்படுவதால் பாடசாலை மாணவர்கள் முதல் அனைவரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மழைகாலத்தில் இந்த வீதிவழியாக செல்லமுடியாது எனவும் வேறுபாதைகள் ஊடாகவே செல்ல வேண்டியுள்ளது என்றும் மக்கள் தெரிவித்துள்ளனர். எனவே, இந்தப் பாலத்தை உரியமுறையில் புனரமைத்து பாடசாலை மாணவர்கள், மக்களின் போக்குவரத்துக்கு உதவுமாறு கோரப்படுகிறது.

## காணாமலாக்கப்பட்ட உறவுகளைத் தேடி 385 ஆவது நாளாக தொடரும் போராட்டம்

முல்லைத்தீவு, மார்ச் 28

முல்லைத்தீவு மாவட்டத்தில் காணாமலாக்கப்பட்ட தமது பிள்ளைகளைத் தேடி கடந்த வருடம் மார்ச் மாதம் 08 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக கூடாரம் அமைத்து ஆரம்பித்த கவனவீர்ப்பு போராட்டம் நேற்று 385 ஆவது நாளைக் கடந்து தொடர்கிறது.





வடக்கு, கிழக்கு தமிழர் தாயக பகுதிகளில் கடந்த காலத்தில் வெள்ளை வான்களில் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட யுத்த காலப் பகுதியில் யுத்தப்பிரதேசங்களில் காணாமற்போன மற்றும் யுத்தம் முடிவடைந்து இராணுவத்திடம் கையளித்து காணாமல் ஆக்கப் பட்ட உறவுகளைதம்மிடம் ஒப்படைக் குமாறு கோரி கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் ஒரு வருடங்களை தாண்டி காணாமற்போன உறவுகளின் போராட்டம் இடம்பெறுகின்றது.

இந்த நிலையில், அண்மையில் யாழ்ப்பாணம் வந்த ஜனாதிபதி கூட போராட்டத்தில் ஈடுபட்ட மக்களைச் சந்திக்காது சென்றமை மேலும் மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் தமது பிள்ளைகள் எங்கே? அவர்களுக்கு என்ன நடந்தது? என்ற முடிவு கிடைக்கும் வரை போராட்டம் தொடருமென மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை அரசுதமக்குஎந்தத் தீர்வையும் தராது மன்னிப்பையும் சர்வதேச விசாரணையே தமக்கான தீர்வாக அமையும் என மக்கள் தெரிவிக்கின்றனர்.

(சு-8)

## கொள்ளையர் அட்டகாசம்; கிளிநொச்சி மக்கள் பீதியில்!

முல்லைத்தீவு, மார்ச் 28

சமீப காலமாக கிளிநொச்சி பகுதிகளில் உள்ள கோயில்கள், வர்த்தக நிலையங்கள் வீடுகள் எனப் பல இடங்களில் கொள்ளைச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

அந்த வகையில் நேற்று அதிகாலை 2 மணியளவில் பன்னங்கண்டி பகுதியில் உள்ள வீடுகளில் புகுந்த கொள்ளையர்கள் வாள் மற்றும் கத்தி முனையில் கொள்ளையில் ஈடுபட்டுள்ளனர்.





அந்தப் பகுதிக்குச் சென்ற கொள்ளையர்கள் வீட்டின் உரிமையாளரை அழைத்து அவரைக் கத்திமுனையில் வைத்துக்கொண்டு கொள்ளையில் ஈடுபட்டுள்ளனர்.

அந்தச் சந்தர்ப்பத்தில் அயல் வீடுகளிலிருந்து சத்தங்கள் எழுப்பியதையடுத்து கொள்ளையர்கள் தப்பிச்செல்ல முயன்றுள்ளனர். அயலவர்கள் விரட்டிச் சென்று உந்துருளியை பிடித்தபோது அவர்கள் கொண்டுவந்த ஆயுதங்களான வாள்கள், கூரிய கத்திகள் மற்றும் உந்துருளியையும் விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இது தொடர்பாக பன்னங்கண்டி மக்கள் பொலிஸாருக்கு அறிவித்த போது பல மணி நேரம் கழித்தே அந்தப் பகுதிக்கு பொலிஸார் வருகை தந்தமையால் கிராம மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். சம்பவ இடத்துக்கு வருகை தந்த பொலிஸார் கொள்ளையர்கள் விட்டுச் சென்ற தடயப் பொருள்களை கொண்டு சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## முதலீட்டாளர் எதிர்கொள்ளும் வணிக நெருக்கடிகளை குறைப்பது தொடர்பில் தீர்வு

தெற்காசிய பிராந்திய முதலீட்டாளர்களும், வர்த்தகர்களும் வணிக முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதில் எழும் நெருக்கடிகளைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும்என்றுபிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற சார்க் நாடுகளுக்கான வணிக சம்மேளனத்தின் தலைமைப் பதவியை இலங்கைக்கு கையளிக்கும் நிகழ்வில் பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதில் தொடர்ந்து கருத்து வெளியிட்ட பிரதமர், இலங்கை இன்று சகல நாடுகளுடனும் இருதரப்பு வர்த்தக உறவுகளைப் பேணுவதாக சுட்டிக் காட்டினார்.

## மற்றொரு இலங்கை ராணுவக்குழு லெபனானின் சமாதானப் பணிக்கு

லெபனான் ஐக்கியநாடுகள் சபையின் சமாதானப் பணிகளில் ஈடுபடுவதற்காக லெபனானுக்கு மேலும் ஓர் இராணுவக்குழு செல்வதற்கு தயாராக இருக்கிறது என இலங்கை இராணுவம் தெரிவித்துள்ளது.

இலங்கை இராணுவம் 2004 ஆம் ஆண்டிலிருந்து இதுவரையில் ஐக்கியநாடுகள் சபையின் சமாதானப் பணிகளுக்காகபடையினரை அனுப்பி வருகின்றது. லெபனான், தென்சூடான், மாலி தென்னாபிரிக்கா, மேற்கிந்தியத் தீவுப்பகுதிகளிலுள்ள நாடுகளிலும் இலங்கை இராணுவத்தினர் இவ்வாறானசமாதானப்பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்தவகையில், லெபனானில் சமாதானப்பணிகளில் ஈடுபடுவதற்காக 150 பேர் செல்லவுள்ளனர். 49 இராணுவத்தினர் இந்தப் பணிகளுக்காக ஏற்கனவே சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir



# ஜெனீவா மாநாட்டில் சரா







நாடாளுமன்றங்களின்ஒன்றியத்தின் 138ஆவது வருடாந்த மாநாடு சுவிற்சர்லாந்து நாட்டின் ஜெனீவா நகரில் நடைபெற்று வருகின்றது.

கடந்த 24ஆம் திகதி ஆரம்பமான இந்த மாநாடு இன்று 28ஆம் திகதி வரையும் தொடர்கின்றது.

இலங்கை நாடாளுமன்றத்தின் சபாநாயகர் கரு ஜெயசூரிய தலைமையில் இலங்கையில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு இந்த மாநாட்டில் கலந்து கொண்டுள்ளது. நீடித்து நிலைக்கக்கூடிய அபிவிருத்தியை அடைவதற்கு நிலையான அமைதியை ஒரு வாகனமாக்கிக் கொள்வது, சட்டத்துக்குப் புறம்பான குடியேற்றங் களால் உலகு எதிர்கொள்ளும்சவாலில்நாடாளுமன்றங்களின் பங்களிப்பைப் பலப்படுத்துவது போன்ற நோக்கங்களுக்காக இந்த ஒன்றியம் பணியாற்றி வருகின்றது.

138 ஆவதுமாநாட்டில்நேற்று நிலையான அபிவிருத்தி இலக்குகள் என்பது தொடர்பான குழு நிலை விவாதம் நடைபெற்றது. விவாதத்தை முன்னகர்த்திய 5 பேர் குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனும் ஒருவராக இருந்தார். சேர்பிய நாடாளுமன்ற உறுப்பினர் மிலோர்ட் மிஜாடோவிக், ஆர்ஜென்ரீனா நாட்டு செனட்டர் லுசிலா கிறசெல், லிசொதோ செனட்டர் பீட் லிசாஓனா பீட் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையைச் சேர்ந்த நாடியா இஸ்நர் ஆகியோரும் இந்தக்குழுவின் ஏனைய உறுப்பினர்களாக இருந்தனர். நிலைத்தன்மை மற்றும் நெகிழ்திறன் கொண்ட சமூகத்தை நோக்கிய மாற்றம் என்கிற தலைப்பில் நேற்றைய விவாதம் இடம்பெற்றது.

# தொண்டர் ஆசிரியர் நியமனம்; ஈ.பி.டி.பி. தரப்பில் விளக்கம்

வடமாகாண தொண்டர் ஆசிரியர்களது முற்றுகைக்குள் இருந்து வடமாகாண சபை உறுப்பினர்கள் அனைவரும் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியால் விடுவிக்கப்பட்டுள்ளனர் என அக்கட்சி விடுத்த செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

நிரந்த நியமனத்தை வழங்குமாறும், நிரந்தரமாக்கலுக்கான நேர்முகத் தேர்வுத் திகதியை உறுதிப்படுத்தி தெரிவிக்குமாறும் கோரி நேற்று போராட்டத்தை மேற்கொண்ட தொண்டராசிரியர்கள் திடீரென வடமாகாண சபையை முற்றுகையிட்டமையுடன் சபை உறுப்பினர்கள் எவரையும் வெளியேற விடாது தடுத்து மறியற் போராட்டத்தையும் மேற்கொண்டனர்.

பிற்பகல் 1 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட இந்த முற்றுகைப் போராட்டம் மாலை 5 மணி வரை நீடித்துள்ளது.

இந்தப் போராட்டம் சமரசத்திற்கு கொண்டுவரப்படாமையை அடுத்து, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட நிர்வாகச் செயலாளரும் மாகாண சபை உறுப்பினருமான வை. தவநாதன் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவுடன் தொடர்புகொண்டு நிலைமையை தெரிவித்தார். செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் மற்றும் கல்வி அமைச்சின் செயலாளர் ஆகியோருடன் தொடர்பு கொண்டு பேச்சுக்களை மேற்கொண்டமையை அடுத்து இந்த விடயத்திற்கு தீர்வு காண இணக்கம் காணப்பட்டது.

இதன் பிரகாரம் ஏற்கனவே தெரிவுசெய்யப்பட்ட 182 தொண்டராசிரியர்களுக்குமான நிரந்தர நியமனம் இன்று வழங்கப்படவுள்ள நிலையில், ஏனையோருக்கான நேர்முகத் தேர்வுக்குரிய திகதி அத்தினத்தன்றே அறிவிக்கப்படும் என கல்வி அமைச்சர் மற்றும் செயலாளர் ஆகியோர் தெரிவித்தமையை அடுத்து மாகாணசபை உறுப்பினர்கள் வெளியேற அனுமதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# உதயமாகிறது உல்லாசப் பயண சங்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 28

'வடமாகாண உல்லாசப் பயணச் சங்கம்' என்ற அமைப்பின் ஆரம்ப வைபவம் இன்று மாலை 5.30 மணிக்கு யாழ்ப்பாணம், ஆசீர்வாதம் ஒழுங்கையில் உள்ள கிறீன் கிறாஸ் ஹோட்டலில் நடைபெறும்.

வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (உ)

# மாளிகாவத்தையில் நேற்றிரவு இளைஞர் சுட்டுக்கொலை

கொழும்பு – மாளிகாவத்தைப் பகுதியில் நேற்று இரவு 8.30 மணியளவில் துப்பாக்கிச்சூட்டு சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது. இந்த துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் ஒருவர் பலியாகியுள்ளார் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். இனந்தெரியாத நபரொருவரால் இந்த துப்பாக்கிச்சூட்டு சம்பவம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். துப்பாக்கிச்சூட்டில் 25 வயது மதிக்கத்தக்க இளைஞர் ஒருவரே உயிரிழந்துள்ளார்.

நீதிவான் விசாரணைகள் மேற்கொள்ளப்படும் வரை சடலம் அந்த இடத்திலேயே வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் மாளிகாவத்தை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## ஈ.பி.டி.பியுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேசியதுமில்லை. ஈ.பி.டி.பியுடன் நாங்கள் கூட்டுச் சேரவும் இல்லை.

– இவ்வாறு தெரிவித்திருக்கிறார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குப் பெரும்பான்மை இல்லாத உள்ளூராட்சிச் சபைகளில் ஈ.பி.டி.பியின் ஆதரவுடன் கூட்டமைப்பு ஆட்சி அதிகாரத் தைக் கைப்பற்றி வருகிறது.

கடந்த காலங்களில் ஈ.பி.டி.பியை விமர்சித்தும், அவர்களை ஒட்டுக் குழுவென்று சொல்லியும் வந்த நீங்கள், இப்போது அவர்களுடன் சேர்ந்து ஆட்சிமையத்து வருவதால் அதிருப்தி ஏற்பட்டுள்ளதே என ஊடகவியியலாளர்கள் மாவை சேனாதிராசாவிடம் கேள்வி எழுப்பினர். இதற்குப் பதிலளித்தபோதே மாவை மேற்கண்டவாறு கூறினார்.

கேள்வி எழுப்பிய ஊடகவியலாளரிடம், நீங்கள் சொன்ன ஓட்டுக் குழு என்ற வார்த்தைகளை நான் ஒரு காலமும் பேசவில்லை. ஆயினும் வேறு யாராவது பேசியிருக்கலாம் என்று கூறினார் மாவை.

அவ்வாறாயின், உங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் யாராயினும் பேசியிருக்கின்றனரா என அவரிடம் கேட்டபோது, அதைப்பற்றி நான் பதிலளிக்க வேண்டியதில்லை – என்றார் மாவை.

ஈ.பி.டி.பியுடன் நீங்கள் தற்போது கூட்டுச் சேர்ந்திருக்கின்றீர்கள்தானே என அவரிடம் கேட்டபோது, நாங்கள் ஈ.பி.டி.பியுடன் கூட்டுச் சேரவில்லை – என்றார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தத் தேர்தல் முறை வந்து மிகவும் ஒரு தவறான விளைவை ஏற்படுத்தியிருக்கின்றது. இதில் 60 வீதம் வட்டாரத்திலும் 40 வீதம் விகிதாசாரத்திலும் என்று சட்டம் சொன்னாலும், 60 வீதம் விகிதாசாரத்தில் இருந்து தெரிவு செய்யப்படுகின்ற தவறான நடைமுறை இதில் கடைப்பிடிக்கப்பட்டிருக்கின்றது.

இந்த உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் 56 சபைகளில் கூட்டமைப்பு போட்டியிட்டது. இதில் 40 சபைகளில் தனிப் பெரும்பான்மை கொண்ட கட்சியாகக் கூட்டமைப்பு அறிவிக்கப்பட்டிருக்கின்றது. நாங்கள் அதை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டோம். ஆனாலும், அதிலும் சில பின்னடைவுகள் எங்களுக்கு இருக்கத்தான் செய்கின்றன.

இந்தத் தேர்தல் முறையிலும் சரி நடைமுறையிலும் சரி பெரும்பான்மைதத்துவத்தை நாங்கள் பெற்றாலும், எதிர்காலத்தில் அந்தச் சபை நிர்வாகத்தைச் சரியான முறையில் நடத்துவதற்கு எல்லோருக்கும் நாங்கள் ஓர் அழைப்பை விட்டிருந்தோம். அதாவது இங்கு எந்தெந்த இடங்களில் எந்தக் கட்சி கூடிய பெரும்பான்மையைப் பெற்றதோ அந்தந்த இடங்களில் அவர்கள் ஆட்சிமையப்பதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டுமென்று பகிரங்கமாகக் கேட்டிருந்தோம்.

இந்தச் சபைகளுக்குப் பொறுப்பாக வரும் மாநகர முதல்வர், நகர சபைத் தலைவர்கள், பிரதேச சபைத் தலைவர்களை ஆதரிக்க வேண்டுமென அனைவரிடமும் நாங்கள் பகிரங்கமாக அழைப்பு விட்டிருந்தோம். அதற்கமையப் பொது அமைப்புக்கள், நிறுவனங்களைச்சேர்ந்தவர்கள் எங்களை ஒன்றுபட்டுச் செயற்படுமாறும் கேட்டிருந்தார்கள்.

அவ்வாறு கட்சிகள் ஒன்றுபட்டுச் செயற்பட்டுச் சபைத் தலைவர்களைத் தெரிவு செய்ய வேண்டுமெனப் பல கட்சிகளுடன் பொது அமைப்புக்கள் பேசியிருக்கின்றார்கள். அந்த வகையில் நானும் சிலருடன் பேசவேண்டுமென்ற சந்தர்ப்பத்தில் அந்த விருப்பம் இருந்தபடியால் டக்ளஸ் தேவானந்தாவைத் தொடர்பு கொண்டு பேசியிருந்தேன்.

இதன்போது உள்ளூராட்சிச் சபைகளில் யார் அந்த இடங்களில் பெரும்பான்மையைப் பெற்றிருந்தாலும் அந்த இடத்தில்மற்றையவர்கள் ஆதரவைக் கொடுத்துச் சபைகளை நடத்துவது என்றுதான் எங்களது கொள்கையைச் சொல்லியிருக்கின்றோம். அதுதான் எதிர்காலத்தில் நன்மையை ஏற்படுத்துமென்று டக்ளஸ் தேவானந்தாவிடமும் சொன்னோம். அதுதான் தற்போது நடைபெற்றது. அதற்காக நாங்கள் கூட்டுச் சேர்ந்ததாக இல்லை – என்றார். (ஐ-7)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளூராட்சி சபைகளில் நிர்வாகத்தை அமைப்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஈ.பி.டி.பியிடம் மண்டியிட்டது என செய்தி வெளியிட்டோம். கூட்டமைப்பின் பேச்சாளர் அதை மறுத்தார்.

*"ஈ.பி.டி.பியுடன் பேச்சு ஒன்றும் நடக்கவில்லை. எங்கள் கோட்பாட்டை – நிலைப்பாட்டை – ஏற்கனவே பகிரங்கமாக அறிவித்திருந்தோம். தன்னோடு நாங்கள் பேசவில்லை என்ற ஆதங்கத்தை டக்ளஸ் ஊடகங்கள் மூலம் தெரியப்படுத்தியிருந்தார். ஆனபடியால் கட்சித் தலைவர் என்ற முறையில் மாவை சேனாதிராசா அவருடன் பேசினார். இதன்போது ஆதரவு தருமாறு நாம் கேட்கவில்லை."* – என்று சுமந்திரன் நேற்றுமுன்தினம் கூறியிருந்தார்.

இதை வைத்துக் கொண்டு, இந்த விடயத்துக்கு ஒரு முடிவு கட்டவேண்டும் என்று நினைத்துக் கொழும்பில் இருக்கும் ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு ஒரு தொலைபேசி அழைப்பு எடுத்தேன்.

ஏதோ உண்மையை வெளிக்கொண்டு வருவது என்றாலும் அதற்குப் பெயர் 'சிண்டு முடிதல் தான்!'. பத்திரிகையாளர்களின் பரவணி வேலைதான் அது. ஆனால், அதனை முந்திக் கொண்டு பதில் தந்தார் அரசியல் அனுபவசாலியான டக்ளஸ்.

என்னுடைய miss call பார்த்து அவர் அழைப்பு எடுத்தார்.

*"ஹலோ...!"* – என்று அவர் அழைத்ததும் எனது கேள்வி சடாரெனப் பாய்ந்தது.

*"கூட்டமைப்புத் தலைவர்கள் உங்களிடம் ஆதரவு கேட்டார்களா? இல்லையா? ஒரு வரியில் முதலில் பதில் தாருங்கள்!"* – என்று செய்தியாளர் இறுமாப்போடு வினாத் தொடுத்தேன்.

பதில் தராமல் *"ஹா...ஹ் ஹா...!"* என்று சிரித்தார்.

*"நீங்கள் ஏன் இந்தக் கேள்வியைக் கேட்கின்றீர்கள் என்று எனக்குத் தெரியும். அதனால் நான் பதில் தரப்போவதில்லை...!"* – என்றார் அவர். எனினும் பிறகு விளங்கப் படுத்தினார்.

*"கூட்டமைப்பினர் மறுத்தமை பற்றிய செய்தி உங்கள் பத்திரிகை உட்பட யாழ். பத்திரிகைகளில் வெளிவந்தமை பற்றி நான் அறிந்தேன். இது குறித்து எங்கள் ஆள்கள் கூட்டமைப்புத் தலைவர்களுடன் பேசினார்கள். 'பத்திரிகைகள் இப்படித்தான் போடும். அதைப் பொருட்படுத்தாதீர்கள்!'– என்று பதில் சொல்லியிருக்கின்றார்கள். ஆகவே, அந்த மட்டத்துடன் விடயத்தை விட்டுவிடுவதே பொருத்தமானது. நடக்கின்ற விடயங்களைப் பார்த்து எமது மக்களே புரிந்து கொள்வார்கள். ஏட்டிக்குப் போட்டி அறிக்கை, பதில் என்று கொடுத்து, இன்றைய தேவை நிலையைக் குழப்ப நாம் விரும்பவில்லை. எது சரியோ அதைச் செய்கிறோம். யாழ். மாநகர சபை விடயத்தில் சிறு தவறு நேர்ந்துவிட்டது. அவ்வளவே. அது ஏனைய இடங்களில் மீள நிகழாமையை உறுதிப் படுத்த விரும்புகிறேன். காரைநகர், நெடுந்தீவு, வேலணை போன்ற பிரதேச சபைகள் விடயத்தில் எங்கள் அணுகுமுறை சற்று வித்தியாசமாக இருக்கும் என்பதை அவர்களுக்கு ஏற்கனவே கோடி காட்டிவிட்டோம். பத்திரிகைகள் ஊடாக அறிக்கைப் போர், ஏட்டிக்குப் போட்டி, பதிலடி மற்றும் செய்திச் சமர் நடத்தி இந்த விடயத்தில் எதுவும் கிட்டப்போவதில்லை. அரசியல் லாபம் வரப்போவதுமில்லை. ஆகவே இதைக் கிளறாமல் விட்டு விடுங்களேன்...!"* – என்று ஒரு மூத்த செய்தியாளனிடம் விடுக்கும் கோரிக்கையாக அதனை முன்வைத்தார்.

ஆனாலும் அதை உங்களிடம் பகிர்ந்து, ஒரு சிறு சிண்டு முடியும் வேலையையாவது செய்யாதுவிட்டால் என் தலை வெடித்து விடும் போல் இருந்தது. அதனால் அவர் பிரசுரத்துக்கு என்று கருதாமல் உரிமையுடன் பேசிய வாசகங்களையும் இங்கு பகிர்ந்து கொண்டுள்ளேன். அவர் இதைப் பொருட் படுத்தாமல் விடுவாராக!

எது, எப்படி என்றாலும் தமக்குச் சாதகமாகக் கனிந்து வரும் சூழலை – தவிசாளர், உதவித் தவிசாளர் தெரிவுகள் நடைபெறும் அடுத்த மூன்று வாரங்களுக்காவது – குழப்பாமல் இருக்க வேண்டும் என்று கருதிச் செயற்பட வேண்டிய கூட்டமைப்புத் தலைவர்கள், அதைக் கவனிக்காமல், 'குசும்பு' அறிக்கைகளை விடுக்க –

மறுபுறம் உள்ளூராட்சி சபைகள் எப்படியேனும் யோக்கியதையாக இயங்க வேண்டியமை மக்களின் அவசர – அவசிய – கட்டாயத் தேவை எனக் கருதி, அதற்கு வழி செய்யும் விதத்தில், அரசியல் பதிலடிப் போக்கை கைவிட்டு செயற்படும் டக்ளஸ் தேவானந்தா ஒரு Seasoned அரசியல்வாதிதான்!

-மின்னல்-

## நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## கோட்டாபயவை அழைக்கும் புதுடில்லி

*"இந்திய அதிகாரிகள் எம்முடன் பேசுவதில்லை. அதுதான் பெரும் பிரச்சினையாக உள்ளது.*

*"எமது ஆட்சிக் காலத்தில் எதிர்க்கட்சியினரை இராஜதந்திரிகள் சந்திப்பதற்கான அரசியல் இடைவெளி இருந்தது. ஆனால், தற்போது இலங்கையில் உள்ள இந்தியத் தூதுவர் கூட எம்மைச் சந்திப்பதற்குத் தயங்குகின்றார். இது ஏன் என்பது எமக்குப் புரியவில்லை."*

- இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் இலங்கையின் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளரும், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரருமான கோட்டாபய ராஜபக்ஷ.

அதுவும் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' செய்தித்தாளுக்கு - இந்தியப் பத்திரிகைக்கு - வழங்கிய செவ்வி ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

அந்த நாளிதழுக்கு வழங்கப்பட்ட செவ்வியில் அவர் இப்படித் தெரிவித்தாரா அல்லது இப்படி ஒரு கருத்தை இந்தச் சந்தர்ப்பத்தில் வெளிக்கொணர்வதற்காக அந்தப் பேட்டி விசேடமாக இந்தியத் தரப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டு, பிரசுரிக்கப்பட்டதா என்ற கேள்வி எழுவது, நியாயமானதாகத் தோன்றுகின்றது.

அண்மையில் 'காலைக்கதிர்' நாளிதழ் தனித்துவமாக - விசேட - செய்தி ஒன்றைப் பிரசுரித்திருந்தது. அந்தச் செய்தியின் பின்புலத்தில் இந்தப் பேட்டியின் பிரசுரத்தை நோக்குகின்றபோது இத்தகைய சந்தேகம் - கேள்வி - எழுவது தவிர்க்க முடியாததாகின்றது.

"கோட்டாவுடன் பேச விரும்புகின்றது டில்லி" என்ற தலைப்பில் கடந்த 17 ஆம் திகதி அந்தச் செய்தி வெளியாகியிருந்தது.

கோட்டாபய ராஜபக்ஷ இன்று அரசியல்வாதியல்லர். முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் என்பது மட்டுமே அவருக்கு உள்ள தகுதி நிலைமை, அந்த வகையில் முன்னாள் அரசு அதிகாரி மட்டுமே அவர்.

அவரைப் புதுடில்லி அரசுத் தலைமை நேரடியாக அழைத்துப் பேச விரும்புகின்றது என்ற தகவல் இராஜதந்திர ரீதியில் குழப்பங்களை - அதிருப்திகளை - ஏற்படுத்தும் என்பது இந்தச் செய்தி பிரசுரமான காலத்திலேயே இராஜதந்திர வட்டாரங்களில் அரசல் புரசலாகப் பேசப்பட்டது.

கோட்டாபய ராஜபக்ஷ இன்றைய நிலைவரை, வெறும் முன்னாள் அரச அதிகாரி மட்டுமே. அவர் முழுநேர அரசியலுக்குக் கூட இன்னும் வரவில்லை. ஓய்வு பெற்ற அரசு அலுவலர் ஒருவரை அடுத்த நாட்டுத் தலைமை ஏன் அழைத்துப் பேச வேண்டும், அதில் என்ன நியாயம் உண்டு என்ற கேள்வி எழுப்பப்படாமல் இல்லை.

அதைச் சமாளிக்கக் கூடிய விதத்தில் ஒரு செவ்வி, இந்தியத் தரப்பு ஊடகம் ஒன்றின் மூலமே இப்போது விதைக்கப்பட்டிருக்கின்றது.

*"எங்களுடைய (மஹிந்த ராஜபக்ஷவின்) ஆட்சிக் காலத்தில் எதிர்க்கட்சியினரையும் இராஜதந்திர வட்டாரங்கள் சந்தித்துப் பேசக் கூடியதாக இருந்தது. இப்போது அது இல்லை. இந்தியத் தூதுவரே எங்களை அழைத்துப் பேச பின்னடிக்கின்றார்."* - என்று கோட்டாபய ராஜபக்ஷவைக் கொண்டே, குறை கூற வைத்து, அதை பகிரங்கப்படுத்தியாயிற்று.

இனி என்ன? கோட்டாபய ராஜபக்ஷவைப் புதுடில்லிக்கு கூப்பிட்டுபேசி வியூகம் வகுத்து, அரசியல் காய்நகர்த்தினாலும், இனிமேல் யாரும் குறை கூற முடியாது.

'தங்களுடன் பேசுவதில்லை என்று கோட்டாபய ராஜபக்ஷ போன்றோர் குறை கூறினர். அதனால்தான் அவரைக் கூப்பிட்டு பேசுகிறோம். இதில் வேறு அர்த்தம், கற்பிதம் செய்வதற்கு இடமேதுமில்லை.' - என்று இந்தியத் தரப்பும் விளக்கம் கூறக் கூடிய சூழலை இந்தப் பேட்டி தந்து நிற்கின்றது.

சரி, இந்தப் பேட்டிக்கு அப்பால் இந்த வேளையில் கோட்டாபய ராஜபக்ஷவை அழைத்துப் புதுடில்லி பேச விழைகின்றது என்றால் அதன் பின்புலத்தில் புதைந்து கிடக்கும் சூட்சுமம் தான் என்ன?

2015 ஜனவரி ஜனாதிபதித் தேர்தலில் தாம் தோற்கடிக்கப்பட்ட போது, அதற்கான பிரதான குற்றப் பத்திரத்தை சர்வதேச தரப்புகள் மீது சுமத்தினார் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

அந்தப் பிரதான சர்வதேச தரப்புகளில் முக்கியமாக இந்தியத் தரப்பு மீது குற்றச்சாட்டு விரல் நீட்டப்பட்டது. இலங்கையில் அப்போதைய எதிரணியை ஒன்றிணைத்துத் தங்களுக்கு எதிரான கூட்டமைப்பை ஆதரித்து, அவற்றுக்கு ஒத்துழைத்து, உதவிய சர்வதேச தரப்புகளில் இந்தியா பிரதானமானது என மஹிந்த தரப்பினர் குற்றம் சுமத்தி வந்தனர்.

மஹிந்தவை ஆட்சிப்பீடத்தில் இருந்து அகற்றியதில் இந்தியப் பங்களிப்பு அதிகமானது என்றே இலங்கை மக்களில் கணிசமானோர் நம்புகின்றனர்.

அந்தப் பின்புலச் சூழலில் இப்போது கோட்டாபய ராஜபக்ஷவுடன் பேச விழையும் புதுடில்லியின் நோக்கத்தைப் பொருத்திப் பார்ப்போருக்குப் புதிய அர்த்தங்கள் தோன்றக் கூடும்.

அடுத்த ஆண்டு இறுதியில் நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலில் கூட்டு எதிரணியின் வேட்பாளராக கோட்டாபய ராஜபக்ஷ நிறுத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படும் சூழலில் புதுடில்லியின் அந்த முயற்சியைப் பொருத்திப் பார்க்க வேண்டியிருக்கின்றது. கூட்டு எதிரணியின் செல்வாக்கு தெற்கில் நிலை நிறுத்தப்பட்டு வளர்ந்து வருகையில், அதன் அடுத்த ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளராக நிறுத்தப்படக்கூடிய ஒருவரை அழைத்துப் பேசுகின்ற முயற்சியின் பின்புலத்தில் சூட்சுமங்கள் அதிகம் பொதிந்து கிடக்கவே வாய்ப்புண்டு.

'சோழியன் குடுமி சும்மா ஆடாதல்லவா?'

இங்கு ஆட்சி ஏற்றமும் இறக்கமும் புதுடில்லிக் கணிப்பீட்டின்படிதானோ...?

---

மஹிந்த, கோட்டா, பொன்சேகாவைக் கொல்லச் சதி

# 9 வருடங்கள் தடுப்பில் இருந்த 2 கைதிகளை விடுவித்துத் தீர்ப்பு

கொழும்பு, மார்ச் 28

2009ஆம் ஆண்டு கொழும்பில் இடம்பெற்ற சுதந்திர தின நிகழ்வின்போது முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா ஆகியோரைக் கொலை செய்ய சதித்திட்டம் தீட்டிய குற்றச்சாட்டில் 9 ஆண்டுகளாகத் தடுத்துவைக்கப்பட்டிருந்த அரசியல் கைதிகள் இருவர் நிரபராதிகள் என விடுவித்துக் கொழும்பு சிறப்பு மேல் நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்தது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்கள் எனக் கூறப்பட்ட கனகரத்தினம் ஆதித்தன் மற்றும் கந்தவனம் கோகுலநாதன் ஆகிய இருவருமே இவ்வாறு விடுவிக்கப்பட்டனர்.

இவர்கள் இருவரும் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால், 2009 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டனர். இருவருக்கும் எதிராகச் சட்டமா அதிபரால், கொழும்பு மேல் நீதிமன்றத்தில் 2011ஆம் ஆண்டு குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. எனினும் இந்த வழக்கு பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழான வழக்குகளை விசாரிக்க அமைக் கப்பட்ட சிறப்பு மேல் நீதிமன்றம் அமைக்கப்பட்ட பின்னரே விசா ரணைக்கு எடுக்கப்பட்டது.

சந்தேகநபர்கள் சார்பில் மன்றில் முன்னிலையான சிரேஷ்ட சட்டத்தரணி கே.வி.தவராசா, மேற்படி வழக்கை விசாரணை செய்வதையே கடுமையாக எதிர்த்தார்.

வழக்கின்பிரதிவாதியானகனகரட்ணம் ஆதித்தன், தன்னுடைய சுயவிருப்பின் பேரில், உதவிப் பொலிஸ்அத்தியட்சகருக்கு வழங்கினார் எனக் கூறப்படும் குற்ற ஒப்புதல்வாக்குமூலத்தைமட்டும்அரச சாட்சியமாகக்கொண்டுகொழும்பு மேல்நீதிமன்றில் இரண்டு வழக்குகளும் யாழ்ப்பாண மேல்நீதிமன்றில் ஒரு வழக்குமாக, மூன்று வழக்குகள், சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த மூன்று வழக்குகளிலும், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர், முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா ஆகியோரைக் கொலை செய்யச் சதித்திட்டம் தீட்டினர் என ஒருகுற்றச்சாட்டுப்பத்திரம்உள்ளது.

இதேவேளை, இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவர் பசீர் அலி மொஹமட் என்பவருக்கு, 2006 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 14ஆம் திகதியன்று மரணத்தைவிளைவிப்பதற்கு உடந்தையாய் செயற்பட்டனர் எனவும் ஒரு குற்றச்சாட்டுப்பத்திரமும் உள்ளது.

இதேவேளை, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில், (எல்.ரீ.ரீ.ஈ) அமைப்பில், 1995ஆம் ஆண்டு, இணைந்து கிளிநொச்சியில் ஆயுதப் பயிற்சி பெற்றனர் எனவும் ஒரு குற்றச்சாட்டுப் பத்திரம் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு, விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, குற்ற ஒப்புதல் வாக்குமூலம், அரச சட்டத்தரணியால் அரச தரப்புச் சான்றாக முன்வைக்கப்பட்டது.

இந்தக் குற்ற ஒப்புதல் வாக்குமூலம், பிரதிவாதியால், சுயமாக வழங்கப்படவில்லையென யாழ்ப்பாண மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன், அந்தக் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை, 2015ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29ஆம் திகதியன்று நிராகரித்தார்.

இந்தநிலையில், அந்தவழக்கு, மேலதிக விசாரணைக்கு, மீண்டும் எடுத்துக்கொள்ளப்பட்ட வேளையில், வழக்கைத் தொடர்ந்து நடத்துவதற்கு வேறு சாட்சியங்கள் இல்லையென அரச சட்டத்தரணியால் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

அதனையடுத்து, வழக்கின் பிரதிவாதியானகனகரத்தினம்ஆதித்தன், 2015ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 17ஆம் திகதியன்று நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டார்.

சட்டமா அதிபரால், அரசியல் கைதிகளுக்கு எதிராக ஒரு குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை மட்டுமே சான்றாகக் கொண்டு நாட்டிலுள்ள பல மேல் நீதிமன்றங்களில்தாக்கல்செய்யப்பட்டவழக்குகளில், அந்தக்குற்றஒப்புதல்வாக்குமூலத்தை சான்றாக ஏற்க மறுத்து, பிரதிவாதியை ஒரு மேல் நீதிமன்றம் விடுதலை செய்திருந்தால், மற்றைய மேல்நீதிமன்றங்களில் அதே பிரதிவாதிக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளைச் சட்டமா அதிபர் திணைக் களம் மீளப்பெறுவதே நடைமுறையாகும்.

இந்த நடைமுறை, பயங்கரவாதத் தடைச்சட்டம் 1979ஆம் ஆண்டு நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்ட நாளிலிருந்து, கடந்த 35 ஆண்டுகளாக நடைமுறையாக இருக்கின்றது.

ஆனால், சட்டமா அதிபர், இந்த நீதிமன்றில் (கொழும்பு சிறப்பு மேல் நீதிமன்றம்) தாக்கல் செய்த இரண்டு வழக்குகளையும் மீளப் பெறாமல், யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்ட, எதிரிகளின் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை, இந்த வழக்கின் உண்மை விளம்பல் விசாரணைக்கு மீண்டும் எடுத்துக்கொள்ள வேண்டுமென கோரிக்கையை முன்வைப்பதை நான் கடுமையாக ஆட்சேபிக்கின்றேன் என்று மூத்த சட்டத்தரணி தவராசா மன்றில் சமர்ப்பணம் செய்திருந்தார்.

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தின் தீர்ப்பு இந்த நீதிமன்றத்தை கட்டுப்படுத்தாது, இந்த வழக்கை இந்த நீதிமன்றம் விசாரணைக்குஎடுத்துக்கொள்ளவேண்டும் என அரச சட்டத்தரணி தனது வாதத்தில் குறிப்பிட்டார்.

வாதப்பிரதிவாதங்களை அவதானித்த, கொழும்பு விசேட மேல் நீதிமன்ற நீதிபதி, இந்த வழக்கை, சட்டமா அதிபர் மீளப்பெறவில்லையெனில் வழக்கை முன்கொண்டு நடத்தவேண்டும் எனத் தெரிவித்து, வழக்கு விசாரணைகளை நடத்த உத்தரவிட்டிருந்தார்.

இந்த நிலையில் சட்ட மா அதிபரால் முன் வைக்கப்பட்ட குற்றப் பத்திரத்தின் அடிப்படையில் அதில் குறிப்பிடப்பட்ட சாட்சியங்கள் மற்றும் எதிரி தரப்புச் சாட்சியங்கள் நீதிமன்றில் முன்வைக்கப்பட்டன.

வழக்குத் தொடுநர் மற்றும் எதிரிகள் தரப்பு சமர்ப்பணங்கள் கடந்த தவணையில் முன்வைக்கப்பட்டமையை அடுத்து தீர்ப்புக்காக நேற்றுதிகதியிடப்பட்டிருந்தது.

பிரமுகர்களைக் கொலை செய்ய சதித் திட்டம் தீட்டியதாக எதிரிகள் இருவர் மீது முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளை வழக்குத் தொடுநர் தரப்பு நியாயமான சந்தேகங்களுக்குஅப்பால் நிரூபிக்கத் தவறியுள்ளது. அதனால் எதிரிகள் இருவரும் குற்றச்சாட்டுகளிலிருந்து விடுவிக்கப்படுகின்றனர் என்று கொழும்பு சிறப்பு மேல் நீதிமன்ற நீதிபதி சம்பத் அபயகோன் தீர்ப்பளித்தார்.

எதிரிகள் தரப்பில் செல்வி எஸ்.தர்மராஜாவின் அனுசரணையில் சிரேஷ்ட சட்டத்தரணி கே.வி. தவராசா முன்னிலையானார்.

நீதிமன்றால் விடுவிக்கப்பட்டவர்களில் ஒருவர் கூட்டமைப்பின் முன்னாள் வன்னி எம்.பியான கனகரத்தினத்தின் மகன் என்பது குறிப்பிடத்தக்கது.

---

# ஏப்ரலில் புத்தாண்டுக்கு முன்னர் அமைச்சரவையில் அதிரடி மாற்றம்

## சு.கவினரின் பதவிகளில் கை வைப்பார் மைத்திரி

அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரது அமைச்சுப் பதவிகளில் மாற்றத்தை ஏற்படுத் தும் திட்டத்தைவிரைவில்அமுல்படுத்த ஜனாதிபதிமைத்திரிபாலசிறிசேன தீர்மானித்துள்ளார்.

இதற்கமையஎதிர்வரும்சித்திரைப் புத்தாண்டு தினத்திற்கு முன்னர் அமைச்சரவை மாற்றத்தை ஏற்படுத்த ஜனாதிபதி தீர்மானித்திருக்கிறார் எனத் தெரிய வருகின்றது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் பிரதான இரண்டு கட்சிகளும் அடைந்தபின்னடைவை அடுத்து, அரசுக்குள் மாற்றம் ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும் என்று பல தரப்பிலிருந்தும் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வந்தன.

இதனைச்சமாளிப்பதற்காககடந்த பெப்ரவரி மாதம் அமைச்சரவையில் மாற்றத்தை ஏற்படுத்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் நடவடிக்கை எடுத்தனர்.

அமைச்சரவை முழுமையாக மாற்றமடையும் என அனைவரும் எதிர்பார்த்த போதிலும், ஐக்கிய தேசியக் கட்சியினரது அமைச்சுப் பதவிகளில் ஒரு சிலரது பதவிகளை மட்டுமே ஜனாதிபதி மாற்றியிருந்தார்.

மேலும், அமைச்சரவையில் பதவிகளை வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரது பதவிகளிலும் மாற்றம் ஏற்படுத்தப் படும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்த போதிலும் இதுவரை அந்த மாற்றம் ஏற்படுத்தப்படவில்லை.

இந்தநிலையிலேயே எதிர்வரும் ஏப்ரல்மாதமுதல்வாரத்தில்அமைச்சரவை மாற்றத்தை ஏற்படுத்த ஜனாதிபதி எதிர்பார்த்துள்ளார் என்றும் அரச தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

---

### நாளை

29.03.2018
வியாழக்கிழமை
நட்சத்திரம் : மகம் காலை 8.07வரை
திதி : திரியோதசி மு.இ 9.03 வரை
சுபநேரம் : 7.43 – 9.13 வரை
இராகுகாலம் : 1.43 – 3.13 வரை

# கட்சி ரீதியாக பிரிந்து தேர்தலில் போட்டியிட்டபோதும் ஒற்றுமையாக மக்கள் சேவையை நிறைவேற்ற வேண்டும்



## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 28

கட்சி ரீதியாக பிரிந்து தேர்தலில் போட்டியிட்ட போதும், வெற்றியின் பின்னர் மக்கள் சேவையை நிறைவேற்றுகின்ற போது அரசியல் கட்சி பேதமின்றி செயற்பட வேண்டும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கடந்த உள்ளூராட்சி தேர்தலின்போது பொலன்னறுவை மாவட்ட உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் பதவிப்பிரமாணம்செய்யும்நிகழ்வு நேற்றுமுன்தினம் முற்பகல் பொலன்னறுவை றோயல் கல்லூரி கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் ஜனாதிபதி மேலும் உரையாற்றியவை வருமாறு:-

வெற்றி குறித்த உற்சாகத்தில் யார் எப்படி நடந்து கொண்டாலும் கடந்த உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிட்ட எந்தவோர் அரசியல் கட்சிக்கும் அளிக்கப்பட்ட வாக்குகளில் 40 வீதத்திற்கு அதிகமாக பெற்றுக்கொள்ள முடியவில்லை.

இந்த தேர்தல் நாடாளுமன்றத் தேர்தலாக இருந்திருப்பின் எந்தவொரு அரசியல் கட்சிக்கும் ஆட்சி அமைப்பதற்கான பலம் கிடைத்திருக்காது என்பது அறிக்கைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு கிடைத்த வாக்குகளுடன் ஒப்பிடுகின்றபோது எந்தவோர் அரசியல் கட்சிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உதவியின்றி ஆட்சியமைக்க முடியாது.

இந்தத் தேர்தல் பெறுபேறுகள் குறித்து எவரும் குழப்பமடையவோ, குதூகலிக்கவோ தேவையில்லை. இந்த பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை எதிர்காலத்தில் தெளிவான வெற்றியை நோக்கி முன்னெடுத்துச் செல்கிறோம்.

இதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எவ்வித குறையுமின்றி மேற்கொள்ள கட்சித் தலைவர் என்றவகையில் அர்ப்பணிப்புடன் உள்ளேன்.

சிறந்த அரசியல் கலாசாரத்திற்கான ஒழுக்கப் பண்பாடுகளுடன் புதிய உறுப்பினர்கள் செயற்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய ஜனாதிபதி, தமது பொறுப் புக்களை மக்களுக்காக உரிய முறையில் நிறைவேற்ற வேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக் காட்டினார்.

இந்த நிகழ்வில் தமன்கடுவ நகர சபை, தமன்கடுவ பிரதேச சபை, திம்புலாகலை பிரதேச சபை, வெலிகந்த பிரதேசசபை, ஹிங்குராங்கொடை பிரதேச சபை, லங்காபுர பிரதேச சபை, மெதிரி கிரிய பிரதேச சபை மற்றும் எலஹர பிரதேச சபை ஆகிய உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் பதவிப்பிரமாணம் செய்தனர்.

புதிய உறுப்பினர்களுக்கு ‘மகாத்மா காந்தி’ என்ற நூலும் நெல்சன் மண்டேலாவின் சுயசரிதை தொடர்பான நூலும் ஜனாதிபதியினால் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பிரதேச அரசியல் பிரதிநிதிகள் பலர் கலந்துகொண்டனர்.

(க)

# உலகின் சிறந்த தொடர்பு கொண்ட துறைமுகங்களில் கொழும்பு துறைமுகம் 13 ஆவது இடத்திற்குத் தெரிவு



கொழும்பு, மார்ச் 28

ட்வ்ரி குளோபல் கொள்கலன் துறைமுகம் தொடர்பான சுட்டெண் (Drewry Global Container Port Connectivity Index) மதிப்பீட்டிற்குஅமைவாககொழும்புத் துறைமுகம் உலகின் சிறந்த தொடர்புகளைக் கொண்ட 20 துறை முகங்களில் 13 ஆவது இடத்திற்கு தெரிவாகியுள்ளது.

18 ஆவது இடத்தில் இருந்த கொழும்புத் துறைமுகம் கடந்த வருடத்தின் முதல் காலாண்டு பகுதியில் இவ்வாறு 5 துறைமுகங்களை பின்தள்ளி, முன்னேற்றமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது இந்தப் பட்டியலில் புதிதாக சேர்க்கப்பட்டிருந்த ஜேபேல் அலி மற்றும் அல் ஜெசீரா துறைமுகமும் இடம்பெற்றுள்ளன.

துறைமுக மற்றும் நடவடிக்கைகள் தொடர்பான தகவல்கள், உலகின் கொள்கலனைக்கையாளும்துறைமுகங்கள், மற்றும் அவை தொடர்பில் குறிப்பிட்ட இலக்கை அடையும் துறைமுகங்கள் குறித்து இந்த துறைமுக புள்ளிவிவரம் கணிப்பீடுகளை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஹற்றன் – டிக்கோயா நகரசபை முதல்வர் வாக்கெடுப்பில் முறுகல்





கொழும்பு, மார்ச் 28

மலையகப் பிரதேசமான நுவரெலியா மாவட்டத்தின் ஹற்றன் - டிக்கோயா நகர சபைக்கான முதல்வரை தெரிவு செய்வதற்காக நேற்றுமுன்தினம் நடைபெற்ற வாக்கெடுப்பின்போது முறுகல் ஏற்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் தலைமையிலான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கு ஆதரவு வழங்கிய முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியைச்சேர்ந்த உறுப்பினர் ஒருவர் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவளிக்க முன்வந்ததையடுத்து இந்தக் குழப்பம் ஏற்பட்டிருக்கின்றது.

எவ்வாறாயினும் மஹிந்த அணியினருடன் இணைந்து ஹற்றன் - டிக்கோயா நகர சபைக்கான ஆட்சியை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கைப்பற்றியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# ரணிலுக்கு எதிரான பிரேரணை ஒழுங்குப் பத்திரத்தில் இணைப்பு



கொழும்பு, மார்ச் 28

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

எந்தவொரு நம்பிக்கையில்லாப் பிரேரணையும் சபாநாயகரிடம் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கலந்துரையாடி ஒழுங்குப் பத்திரத்தில் சேர்ப்பது நாடாளுமன்ற சம்பிரதாயமாகும்.

இதற்கமையவே பிரதமருக்கு எதிரான பிரேரணையும் கையளிக்கப்பட்டு 5 நாள்களுக்குள் ஒழுங்குப் பத்திரத்தில் சேர்க்கப்பட்டிருப்பதாக நாடாளுமன்ற பிரதிப் பொதுச்செயலாளர் நீல் இத்தவெல தெரிவித்தார்.

இதற்கமைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீது எதிர்வரும் ஏப்ரல் 4 ஆம் திகதி முற் பகல் 9.30 தொடக்கம் இரவு 9.30 வரை முழுநாள் விவாதமாக இடம்பெறவுள்ளது என்றும் அவர் கூறினார்.

இதேவேளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை உட்பட பல விடயங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக கட்சித் தலைவர்கள் இன்று கூடவுள்ளனர்.

இந்த விசேட கூட்டம் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இன்று முற் பகல் இடம்பெறவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# “இறைவனை விட்டு அகன்றாலும் அவர் எம்மைக் கைவிடுபவர் அல்லர்”



தவக்கால சிந்தனை

மனித இயல்புகளுக்குள் இருந்து விடுபட முடியாதவாறு சிக்கிக்கொண்டுள்ள நாம் பல்வேறு சந்தர்ப்பங்களில் எமை அறிந்தும் அறியாமலும் இறைவனை விட்டு தூரமாகிச் சென்று விடுகின்றோம்.

இறைவனின் அன்பைப் புறக்கணித்து செயற் படுவதுடன் பாவபழிகளையும் எமதாக்கிக் கொள்கின்றோம். இறைவனின் ஆழமான அன்புக்குச் சொந்தக்காரர்களாக நாம் அன் றாட நடவடிக்கைகளின் போது நிலை மறந்து இறைவனை வெறுத்துச் செயற்பட்டிருக்கின்றோம்.

எனினும் இரக்கம் கொண்ட இறைவன் எமை எந்த நேரத்திலும் மன்னித்து ஏற்கும் தேவன் ஒருபோதும் எம்மைக் கைவிட்டு விடுவதில்லை. அவரது அன்பின் பெருக்கால் அரவணைத் துக் காத்து வருகின்றார். எனவே கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களான நாம் பிறரை அன்பு செய்து வாழ்வதற்கும் இறைவனின் மீது நிலையான அன்பு விசுவாசம் கொள்வதற்கும் வேண்டிய வரத்தை இத்தவக்காலத் திலே வரமாகப் பெற்றிடுவோம் ஆமென்....

- ஜே.ஜீ.ஸ்டீபன்

காலைக்கதிர் Kalaikkathir



## பெண் ஒருவர் சடலமாக மீட்பு

களுவாஞ்சிக்குடி - குருமண் வெளி கிராமத்தில் குடும்பப் பெண்ணொருவர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குருமண்வெளி பிள்ளையார் கோவில் வீதியைச் சேர்ந்த முத்துலிங்கம் கோசலை (வயது 42) என்ற ஒரு பிள்ளையின் தாய் ஒருவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலம் பிரேதபரிசோதனைகளுக்காக களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பெண் சில காலமாக கடன் வழங்கும் நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட நுண்கடன்களை மீளச் செலுத்த முடியாமல் நெருக்கடிக்குள்ளாகியிருந்தார் எனக் கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ப)

# ஆனந்தசுதாகரனுக்கு பொது மன்னிப்பு கோரி திருகோணமலையில் கையெழுத்து வேட்டை



திருகோணமலை, மார்ச் 28

ஆயுள் சிறைத் தண்டனை அனுபவித்து வரும் கிளிநொச்சியைச் சேர்ந்த சச்சிதானந்தம் ஆனந்தசுதாகரனுக்கு பொது மன்னிப்பு வழங்கக் கோரி கையெழுத்து சேகரிக்கும் நிகழ்வு திருகோணமலையில் இடம்பெற்றுள்ளது.

இந்த நிகழ்வு திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரிக்கு முன்னால் உள்ள வீதியில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றுள்ளது.

2008ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு மகஸின் சிறையில் ஆயுள் சிறைத் தண்டனை அனுபவித்து வரும் இரு பிள்ளைகளின் தந்தையான சச்சிதானந்தம் ஆனந்த சுதாகரனுக்கு மனிதாபிமான அடிப்படையில் பொது மன்னிப்பு வழங்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டு ஜனாதிபதிக்கு அனுப்பவுள்ள மகஜரில் கையெழுத்து இடும் நடவடிக்கை திருகோணமலை மக்களினால் இரவு, பகல் பாராது முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் இளைஞர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், பொது மக்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு இதில் கையெழுத்திட்டுள்ளனர். (ப)

# யானைகள் அட்டகாசம்





மட்டக்களப்பு, மார்ச் 28

மட்டக்களப்பு - போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நுழைந்த யானைகள் அட்டகாசம் செய்துள்ளன.

இச்சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

கண்ணபுரம் மேற்கு பகுதியில் உள்ள வீடு ஒன்றை யானைகள் உடைத்தபோது அங்கிருந்த ஐந்து பேர்கொண்ட குடும்பத்தினர் மயிரிழையில் தப்பிச் சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கையில்:-

வீட்டின் ஒரு பகுதியை இடித்து தள்ளியுள்ள யானைகள், அங்கிருந்த எட்டுக்கும் மேற்பட்ட நெல் மூடைகளை உண்டுவிட்டுச் சென்றுள்ளன.

யானைகள் வீட்டை உடைத்த போது வீட்டில் குழந்தைகளுடன் உறங்கிக்கொண்டிருந்தோம். தெய்வாதீனமாக உயிர்தப்பியுள்ளோம்.

அந்த பகுதியில் மரவள்ளிச் செய்கைகளும், வாழை மரங்களும் யானைகளினால் அழிக்கப்பட்டுள்ளன என குறிப்பிட்டுள்ளனர்.

கண்ணபுரம் பகுதி தொடர்ச்சியாக யானைகளின் தாக்குதலுக்குள்ளாகி வருவதாகவும், இதுவரையில் மக்களை பாதுகாப்பதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். (ப)

### ஏறாவூர் இரட்டைப் படுகொலை:

# பிணையில் விடுவிக்கப்பட்ட சந்தேகநபருக்கு கத்திக்குத்து

ஏறாவூர் முகாந்திரம் வீதியில் இடம்பெற்ற இரட்டைப் படுகொலை சந்தேகநபர்களில் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த ஒருவர் மீது நேற்று முன்தினம் மாலை கத்திக்குத்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என ஏறாவூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஏறாவூர், அப்துல் மஜீத் மாவத்தை ஐயங்கேணியைச் சேர்ந்த உஸனார் முஹம்மது தில்ஷாத் (வயது 29) என்பவரே கத்திக்குத்து தாக்குதலுக்கு இலக்காகி மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஏறாவூரில் வைத்தே கத்திக்குத்து இடம்பெற்றுள்ளது எனவும், மோட்டார் சைக்கிளில் வந்தவர்களே இதனை மேற்கொண்டு விட்டு தலைமறைவாகியுள்ளனர்.

ஏறாவூர் நகர பிரதேசத்தில் முகாந்திரம் வீதியிலுள்ள வீட்டில் வசித்து வந்த தாயான நூர்முஹம்மது உஸைரா மற்றும் அவரது திருமணமாகிய மகளான ஜெனீராபானு மாஹிர் ஆகியோர் கடந்த 2016ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11ஆம் திகதி அவர்களது வீட்டில் உறங்கிக் கொண்டிருந்தபோது படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட 6 சந்தேகநபர்களும் 2016 செப்ரெம்பர் மாதத்திலிருந்து தொடர்ச்சியாக ஒரு வருடம் நீடிக்கப்பட்டு பின்னர் விளக்கமறியல் உத்தரவில் இருந்து வந்தனர்.

இதனையடுத்து அவர்களில் இருவர் கடந்த வருடம் செப்ரெம்பர் மாதத்திலும், மற்றைய இருவரும் கடந்த வருடம் ஒக்ரோபர் மாதத்திலும், மேலும் ஒருவர் கடந்த வருடம் டிசெம்பர் 06ஆம் திகதியும் பிணையில் விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ப)

# அம்பாறை மாவட்ட பொலிஸ் உபதேசக் குழு ஒன்றுகூடல்

அம்பாறை மாவட்ட பொலிஸ் உபதேச குழுக்களின் ஒன்றுகூடல் கிங்ஸ் ஜே ஹோட்டல் மண்டபத்தில் இடம்பெற்றுள்ளது.

இந்த ஒன்றுக்கூடல் நேற்றுமுன்தினம் நடைபெற்றுள்ளது. இதில் அம்பாறையில் இயங்கும் 17 பொலிஸ் நிலையங்களின் உபதேச குழு அங்கத்தவர்கள் மற்றும் அதன் நிலைய பொறுப்பதிகாரிகள் கலந்து கொண்டு கருத்தரங்கு ஒன்றை நடத்தியுள்ளனர்.

இதன்போது, உபதேச குழுவின் ஆலோசனைகளும், வழிகாட்டல்களும், பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு மிக தேவை. இதன் மூலமே பிரதேசத்தின் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கு முடியும் என பிரதி பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இறுதியாக நிகழ்வில் கலந்து கொண்டவர் களுக்கு சேவையை பாராட்டி சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்டப் பிரதி பொலிஸ்மா அதிபர் நுவன் வெதசிங்க, பொலிஸ் அத்தியட்சகர் சமன்ந்த விஜயசேகர, ஆசிய நிலையத்தின் நிகழ்ச்சித் திட்ட உத்தியோகத்தர் றொசான் சாஜஹான் மற்றும் பிரதேச பிரமுகர்கள், மதகுருமார்கள் என பலர் கலந்து கொண்டனர். (பு)

# ஐ.தே.க. உறுப்பினர்களின் சத்தியப்பிரமாண நிகழ்வு



மட்டக்களப்பு, மார்ச் 28

மட்டக்களப்பு மாநகர சபை, உள்ளூராட்சிச் சபைகளுக்கு தெரிவான ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களின் சத்தியப்பிரமாண நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

இந்த நிகழ்வு நேற்றுமுன்தினம் மட்டக்களப்பு கோப்பின் மண்டபத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் பட்டிருப்பு தொகுதி அமைப்பாளர் எஸ் .கணேசமூர்த்திதலைமையில்நடைபெற்றுள்ளது.

இதன்போது, மட்டக்களப்பு மாநகர சபை, மண்முனை பற்று பிரதேச சபை, மண்முனை மேற்கு பிரதேச சபை மற்றும் பட்டிருப்பு தொகுதி ஆகிய பிரதேச சபைகளுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் சத்தியப்பிரமாணம் செய்துள்ளனர்.

இந்த நிகழ்வில் ஐக்கிய தேசியக் கட்சியின் மாவட்ட முகாமையாளர் வி.கே. லிங்கராஜா , தபால் சேவைகள், முஸ்லிம் சமய கலாசார அமைச்சின் கிழக்குமாகாண இணைப்பாளர் எச். எம்.முஸ்தபா, மாவட்ட சட்ட ஆலோசகர் கே.ஸ்ரீகுமார் மற்றும் மாநகர சபை, பிரதேச சபை உறுப்பினர்கள் கட்சி ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ப)

# சேதமடைந்த நாணயத்தாள் வைத்திருப்பவரே ஏற்படும் நட்டத்தை பொறுப்பேற்கவேண்டும்

## மத்திய வங்கி அதிகாரி அறிவிப்பு



சிதைக்கப்பட்ட அல்லது உரு மாற்றப்பட்ட நாணயத்தாள்கள் மார்ச் 31 ஆம் திகதியின் பின்னர் ஒருவரிடம் இருக்குமாயின், அதனால் ஏற்படக்கூடிய நட்டத்தை நாணயத்தாள் வைத்திருப்பவரே ஏற்றுக்கொள்ள வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மத்திய வங்கியின் நாணயத்தாள் பிரிவைச் சேர்ந்த அதிகாரி தீபா செனவிரத்ன தெரிவித்தவை வருமாறு:-

நாணயத்தாள்கள் வேண்டுமென்றே சிதைக்கப்பட்டு அல்லது உருமாற்றப்பட்டு இருக்கும் என்பதன் பொருள் நாணயத்தாள்களில் எழுத்து இலக்கக் கோடு இடுதல் ஆகியவற்றின் மூலம் நாணயத்தாள்களுக்கு வேண்டுமென்றே பாதிப்பை ஏற்படுத்தலாகும்.

நாணயத்தாள்களின் தொடர் இலக்க கையெழுத்து வெளியிடப்பட்ட திகதி பாதுகாப்பு அடையாளம் (பாதுகாப்பு இலச்சினை) ஆகிய நாணயத் தாள்களில் இருக்கவேண்டிய இலட்சணங்கள் ஆகும்.

வேண்டுமென்றே சிதைக்கப்பட்ட அல்லது உருமாற்றப்பட்ட நாணயத்தாள்கள் புழக்கத்தில் இருந்து நீக்கப்படும்.

இருப்பினும், வெள்ளம், தீ போன்ற இயற்கை அனர்த்தங்களால் அல்லது நாளாந்த பாவனையின் போது பாதிப்புக்குள்ளாகும் நாணயத்தாள்களை மாற்றிக் கொள்வதற்கு நிர்ணய திகதி கிடையாது.

இவ்வாறான நாணயத்தாள்களில் 75 சதவீதமான பாதிப்பு இருக்குமாயின் அவ்வாறான நாணயத்தாள்களின் முழுமையான பெறுமதியாக புதிய நாணயத்தாள்கள் வழங்கப்படும்.

50 வீதமான பாதிப்பு இருக்குமாயின் குறிப்பிட்ட நாணயத்தாள்களுக்கு அரைவாசி பங்கு பெறுமதிக்கான நாணயத்தாள்கள் வழங்கப்படும்.

முழுமையாக பாதிப்புக்குள்ளான நாணயத்தாள்கள் அதன் உரிமையாளருக்கு வழங்கப்படமாட்டாது என்றும் மத்திய வங்கியின் நாணயத்தாள் பிரிவைச் சேர்ந்த அதிகாரி தீபா செனவிரத்ன மேலும் சுட்டிக்காட்டினார்.

எதிர்வரும் 31 ஆம் திகதியின் பின்னர் வேண்டுமென்றே சிதைக்கப்பட்ட அல்லது உருமாற்றப்பட்ட நாணயத் தாள்கள் ஒருவரிடம் இருக்குமாயின் அதனால் ஏற்படக் கூடிய நட்டத்தை நாணயத்தாள் வைத்திருப்பவரே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ஏ.ரி.எம். இயந்திரத்தின் மூலம் பணம் பெற்றுக்கொள்ளும் போது அதன் பொறுப்பு வங்கிக்கே உரித்தாகும்.

அத்துடன், சி.டி.எம். இயந்திரத்தின் மூலம் பணத்தை வைப்புச் செய்யும் அந்த நாணயத்தாளுக்கான பொறுப்பு வைப்புச் செய்பவருக்கே உரித்தாகும்.

பணத்தைப் பெற்று கொள்ளும் போது இவ்வாறான நாணயத்தாள்கள் கிடைக்கப் பெற்றால் அதாவது பாதிக்கப்பட்ட நாணயத்தாள்கள் ஏ.ரி.எம். இயந்திரத்தில் பொருத்தப்பட்டுள்ள சி.சி. ரி.வி. கமராவில் அதன் காட்சிகளை பதிவுசெய்ய வேண்டும். அவ்வாறான நாணயத் தாள்களை சமர்ப்பித்து அதற்கான நாணயங்களை பெற்றுகொள்ளமுடியும்.

அதன் காரணமாக இலங்கை மத்திய வங்கியின் வர்த்தக நிதி திணைக்களம் பொது மக்களிடம் கேட்டுக் கொள்வது என்னவென்றால் நாணயத் தாளில் எழுதுதல் சேதப்படுத்தல் போன்ற பழக்கவழக்கங்களில் இருந்து தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

நாணயத்தாள்களை பயன்படுத்தும்போது மிகவும் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்று பொதுமக்களிடம் அத்திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது. (க)

# இலங்கை நிர்வாக சேவை சங்க 35 ஆவது வருடாந்த மாநாடு ஜனாதிபதி தலைமையில்



கொழும்பு, மார்ச் 28

இலங்கை நிர்வாக சேவை சங்கத்தின் 35 ஆவது வருடாந்த மாநாடு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில்கொழும்பு தாமரைத் தடாக கலையரங்கில் நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்றது.

இதன்போது சங்கத்தின் புதிய உறுப்பினர்களை நியமித்தலும் , சங்கத்தின் புதிய தலைவராக பிரபாத் சந்திரகீர்த்தி தெரிவு செய்யப்பட்டமையுடன், புதிய செயலாளராக ரோஹண டி சில்வா தெரிவுசெய்யப்பட்டார்.

இந்த நிகழ்வில், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்தன, இலங்கை நிர்வாக சேவை சங்கத்தின் முன்னாள் தலைவர் ரஞ்சித் ஆரியரத்ன, முன்னாள் செயலாளர் டபிள்யூ.எம்.எம்.பி. வீரசேக்கர உள்ளிட்ட உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

# துருக்கி தூதுவருடன் ரவூப் ஹக்கீம் சந்திப்பு



துருக்கி நாட்டின் இலங்கைக்கான தூதுவர் துண்கா சுஹதார், நகரத்திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீமை சந்தித்தார்.

அமைச்சரின் இல்லத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் இருதரப்பு உறவுகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

மேலும், அண்மையில் முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இனவாத வன்செயல் குறித்து அவர் தனது கவலையை வெளியிட்டமையுடன், இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பு இந்த விடயத்தில் கூடிய கவனம் செலுத்தி வருகின்றது எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கையில் அபிவிருத்தி நடவடிக்கையில் துருக்கி முதலீடு மேற்கொள்வதற்கு ஆர்வம் செலுத்தி வருவதை அமைச்சர் இதன்போது குறிப்பிட்டார்.

# ஐ.தே.கவின் முக்கிய கூட்டம் நாளை

கொழும்பு, மார்ச் 28

ஐக்கிய தேசியக் கட்சியின் மறுசீரமைப்பு தொடர்பிலான தீர்மானம் மிக்க செயற்குழுக் கூட்டம் நாளை இடம் பெறவுள்ளது என கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

ஏற்கனவே திட்டமிட்டபடி கட்சியின் மறுசீரமைப்பு தொடர்பில் ஆராய்வதற்கு இந்தக் கூட்டம் நடைபெறவிருந்த போதிலும், இந்தக் கூட்டத்தின் போது பிரதமருக்கு எதிராக எதிர்வரும் 4 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையை வெற்றி கொள்வது எப்படி என்பது குறித்தே முக்கிய கவனம் செலுத்தப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

# எரிபொருள் விலை நிவாரணம் மக்களுக்கு வழங்கப்படும் - அரசு

மக்களுக்கான எரிபொருள் விலை நிவாரணங்களைத் தொடர்ந்து வழங்கப்போவதாக அரசு அறிவித்துள்ளது.

உலக சந்தையில் எரிபொருள் விலை அதிகரித்தாலும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் விலையேற்றத்திற்கு அனுமதிக்கவில்லை என அரச தகவல் பணிப்பாளர் நாயகம் சுதர்ஷன குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விலை நிவாரணத்தைத் தொடர்ந்தும் வழங்குதல் என்பது மக்களுக்கான உறுதிமொழியை நிறைவேற்றுவதாகும் என அவர் விடுத்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 95-ஒக்டேன் பெற்றோல் லீற்றரை 128 ரூபாவிற்கு விற்பனை செய்கிறது. இதன் மூலம் லீற்றருக்கு ஏற்படும் இழப்பு 9 ரூபாவைத் தாண்டுகிறது. அதேபோன்று ஒக்டேன் 92 வகை பெற்றோல் 117 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகின்றது. இதன் மூலம் லீற்றருக்கு சுமார் 15 ரூபா வரையிலான நஷ்டம் ஏற்படுகிறது. மண்ணெண்ணெயை 88 ரூபாவைத் தாண்டிய விலையில் விற்பனை செய்ய வேண்டும். ஆனால், பெற்றோலிய கூட்டுத்தாபனம் 44 ரூபாவிற்கு விற்பனை செய்கின்றது.

# மாகம்புர ஊழியர் 135 பேருக்கு நிரந்தர தொழில் ஏனைய ஊழியர்களுக்கு 13 லட்சம் ரூபா நட்டஈடு

கொழும்பு, மார்ச் 28

அம்பாந்தோட்டை மாகம்புர துறைமுகத்தின் 135 ஊழியர்களுக்கு துறைமுக அதிகாரசபையில் நிரந்தர நியமனம் பெற்றுக்கொடுப்பதற்கும் ஏனைய ஊழியர்களுக்கு 13 லட்சம் நஷ்டஈடும் வழங்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டை மாகம்புர துறைமுகம் மீளமைக்கப்படும் போது வழங்கிய வாக்குறுதிக்கு அமைய இலங்கை துறைமுக அதிகாரசபைக்கும் தொழிற்சங்கங்களுக்கிடையில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்பாடு மீது 135 ஊழியர்களுக்கு துறை முக அதிகாரசபையில் நிரந்தர நியமனம் பெற்றுக்கொடுப்பதற்கு



ஏனைய ஊழியர்களுக்கு 13 லட்சம் நட்டஈடும் வழங்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது என இந்த நியமனங்களை வழங்கும் நிகழ்வின்போது துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர் மஹிந்த சமரசிங்ஹ குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை துறைமுக அதிகார சபையின் மஹாபொல துறைமுகம் மற்றும் கடல்சார் கல்லூரியில் நடைபெற்ற இந்த நியமனம் வழங்கும் நிகழ்வின்போது மீன்பிடி மற்றும் நீரியல் வள அமைச்சர் மஹிந்த அமரவீர, துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை பிரதியமைச்சர் நிசாந்த முத்து ஹெட்டிகம மற்றும் இலங்கை துறைமுக அதிகாரசபையின் தலைவர் கலாநிதி பராக்கிரம திசாநாயக்க உள்ளிட்ட அலுவலர்களும் இதன்போது கலந்து கொண்டனர். (க)

# அராலி ஸ்ரீ முருகன் ச.ச. நிலையத்தின் ஆண்டு விழா நிகழ்வுகள் சனியன்று

அராலி ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத்தின் 78 ஆம் ஆண்டு விழாவினை முன்னிட்டு நடத்தப்படும் மாபெரும் சைக்கிளோட்டம், மரதன் ஓட்ட நிகழ்வுகள் எதிர்வரும் சனிக்கிழமை காலை 6 மணிக்கு நிலைய முன்றிலில் ஆரம்பமாகி நடைபெறும்.

மரதன் ஓட்டத்துடன் நிலைய சிறார்களுக்கான ஓட்ட நிகழ்வுகள், மெதுவான மோட்டார் சைக்கிள் ஓட்டம் என்பன இடம்பெறவுள்ளன.

ஆண்டு விழா இறுதி கலை நிகழ்வுகள், சிறப்பு நிகழ்ச்சிகள் சித்திரை புது வருடப்பிறப்பு தினமான எதிர்வரும் 14 ஆம் திகதி இரவு நிலைய கலையரங்கில் இடம்பெறவுள்ளன. என நிலைய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (இ)

# தினசரி ராசி பலன் (28.03.2018)

*2018 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் பங்குனித்திங்கள் 14ஆம் நாள் புதன்கிழமை துவாதசித்திதி இரவு 1.23 மணி வரை பின்னர் திரியோதசி. ஆயிலியம். பகல் 10.01 மணி வரை பின்னர் மகம். சித்தயோகம் முழுவதும்.*

**ராகுகாலம்** - *பகல் 12.15 மணி முதல் 1.46 மணி வரை*

**சுபநேரம்** - *மாலை 04.36 மணி முதல் 06.06 மணி வரை*

**திவசம் செய்ய வேண்டிய திதி**- *பங்குனி மாத வளர்பிறை துவாதசி.*

**பிறந்த நட்சத்திர வழிபாடு:** *மகம்.*

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி**

**மேஷம்** சஞ்சலம் மிகுந்த நாள். வருமானம் குறைவடையும். விரயங்கள், நஷ்டங்கள் விதம் விதமாக ஏற்படும். உடல் நலம் கெடும். கடன் சுமை ஏறும் வியாபாரத்தில் பெரும் நஷ்டம் உண்டாகும்.

**ரிஷபம்** சமபலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் சுமாராக இருக்கும். குடும்பத்தில் ஓரளவு அமைதி நிலவும். புதிய தொழில் முயற்சிகள் தடை, தாமதத்தைத் தரும்.

**மிதுனம்** ஆக்கபூர்வமான நாள். வருமானம் உயரும். வியாபாரத்தில் வெளிநாட்டு நிறுவனங்களின் தொடர்பு கிடைக்கும். உத்தியோகத்தில் இவர்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும்.

**கடகம்** ஆனந்தமான நாள். நிதி நிலைமை வளமாக இருக்கும். குடும்பத்தில் சந்தோஷம் அதிகரிக்கும். வியாபாரத்தில் மறைமுக எதிர்ப்புக்களைத் தாண்டி லாபமீட்டுவார்கள்.

**சிம்மம்** சலனம் மிகுந்த நாள். மனதில் இனம் புரியாத கவலை உண்டாகும். பணவரவு தாமதமாகும். உடலில் உற்சாகம் குறையும். பிள்ளைகளால் கவலைப்பட நேரும். இருப்பிட வசதி குறையும்.

**கன்னி** அதிஷ்டமான நாள். பொருளாதாரம் மேம்படையும். நீண்ட நாள் ஆசைகள் நிறைவேறும். பூர்வீக சொத்து கைக்கு வந்து சேரும். வருமானத்தைப் பெருக்க சில முயற்சிகளை மேற்கொள்வார்கள்.

**துலாம்** சம பலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். வரவுக்கு மீறிய செலவுகள் உண்டாகும். வியாபாரத்தில் மத்திம முன்னேற்றம் காணப்படும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும்.

**விருச்சிகம்** ஆக்கபூர்வமான நாள். வருமானம் வளமாக இருக்கும். குடும்ப உறவு அன்புடையதாக இருக்கும். நீண்ட நாள் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவார்கள்.

**தனுசு** அலைச்சல் மிகுந்த நாள். உத்தியோகபூர்வமாக வெளியூர் அலைச்சல்கள் அதிகமாகும். சிலருக்கு தொழில் இடமாற்றத்தால் குடியிருக்க வாடகை வீடு தேடித் திரிவார்கள்.

**மகரம்** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. வரவும், செலவும் சரிசமமாக இருக்கும். வியாபாரம் சுமாராக நடந்து வரும். பிரிந்திருந்த உறவினர்கள் கடும் முயற்சியால் மீண்டும் இணையும் வாய்ப்புண்டாகும்.

**கும்பம்** யோகமான நாள். தனலாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தர்கள் பாராட்டு உயர்வு போன்ற நற்பலன்கள் பெறுவார்கள். வீடு, வாகன யோகம் உண்டாகும். அரசு வழியால் ஆதாயம் உண்டாகும்.

**மீனம்** இனிமையான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். குடும்பத்தில் இனிய நல்லுறவு நிலவும். தூர தேசத்திலிருந்து நற் செய்திகள் கிடைக்கும். சிலர் புண்ணியஸ்தல யாத்திரையை மேற்கொள்வார்கள்.

**சந்திராட்டம நாள்: மூலம், பூராடம், உத்தராடம் முதலாம் பாதங்களில் பிறந்தோர் சுப கருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

# கண்டி வைத்தியசாலைகளின் மருத்துவர்கள் பணிப் பகிஷ்கரிப்பு!

கொழும்பு, மார்ச் 28

கண்டி போதனா வைத்தியசாலை உட்பட மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளிலுள்ள மருத்துவர்கள் ஆரம்பித்த வேலை நிறுத்தப் போராட்டம் இரண்டாவது நாளாக நேற்றும் தொடர்ந்தது.

கண்டி மாவட்ட சுகாதாரப் பணிப்பாளரின் செயற்பாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்து மாவட்டத்திலுள்ள அனைத்து வைத்திய சாலைகளிலும் உள்ள மருத்துவர்கள் நேற்று முன்தினம் பகல் வேலை நிறுத்தப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

இந்தப் போராட்டம் நேற்றும் தொடர்ந்தது எனத் தெரிவிக்கப்படுகிறது.

மருத்துவர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் காரணமாக வைத்தியசாலைகளில் நோயாளர்கள் பெரும் அசௌகரியத்திற்கு உள்ளாகியிருந்தனர் எனக் குறிப்பிடப்படுகிறது.

எவ்வாறாயினும் எதிர்கொண்டுள்ள நெருக்கடி தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேச்சு நடத்தப்படும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவிக்கின்றது. (க)

*நீலகண்டன் மறைவு:*

# அஞ்சலி பிரார்த்தனை நிகழ்வு நல்லூரில்

யாழ்ப்பாணம், மார்ச் 28

அகில இலங்கை இந்து மாமன்றம், திருக்கேதீஸ்வரம் ஆலய திருப்பணிச்சபை ஆகியவற்றின் தலைவராகவும் கொழும்பு இந்து வித்தியா விருத்திச் சங்கத்தின் கௌரவ செயலாளராகவும் விளங்கி கடந்த பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதி அமரத்துவமடைந்த சட்டத்தரணி கந்தையா நீலகண்டனுக்கான அஞ்சலி பிரார்த்தனை நிகழ்வு நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் ஸ்ரீதுர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ள இவ் வைபவத்தில் துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவிகளின் திருமுறை வழிபாடு, நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்த தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளின் பிரார்த்தனையுரை, சமய, சமூக நிறுவன பிரதிநிதிகளின் உரை ஆகியனவும் இடம்பெறவுள்ளன. (இ)

# மணவாளக்கோலம்

யாழ்ப்பாணம், மார்ச் 28

யாழ். வண் வடகிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தான மணவாளக்கோல உற்சவத்தை முன்னிட்டு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு சங்காபிஷேகம் ஆரம்பமாகி தொடர்ந்து மூலமூர்த்தி பூஜை வசந்த மண்டப பூஜை, திருவூஞ்சல் என்பன நடைபெற்று விநாயகப் பெருமான் உள் வீதி, வெளிவீதி வலம் வருவார். (இ

# நாளை மின் தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க் கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை-

**மன்னார் பிரதேசத்தில் -** பறையனாலங்குளம், மடுச்சந்தி, மல்லவராயர் கட்டையடம்பன், கட்டையடம்பன், தம்பனைக்குளம், பண்ணைவெட்டுவான், பண்ணைவெட்டுவான் தொழில்நுட்பக் கல்லூரி, இசை மலைத்தாழ்வு, கற்கடந்தகுளம், நீராவிபுரம்,செட்டியார் கட்டையடம்பன், முருங்கன் விதைகள் உற்பத்தி நிலையம், மாதர் கிராமம், பெரிய குஞ்சுக்குளம், பெரிய முறிப்பு ஆகிய இடங்களிலும் - மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

# தெங்கு உற்பத்தித்துறையை பாதுகாப்பதற்கு நடவடிக்கை



கொழும்பு, மார்ச் 28

இலங்கையில் இதுவரையில் *21 ஆயிரத்து 616 ஹெக்டேயர்* தென்னை பயிர்ச்செய்கை அழிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் தெங்கு உற்பத்தித் துறையைப் பாதுகாக்க உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு அகில இலங்கை கமத்தொழில் சம்மேளனம் மற்றும் தெங்கு உற்பத்தித் துறையை பாதுகாக்கும் சங்கங்களின் ஒன்றியம் வலியுறுத்தியுள்ளன.

எதிர்காலத்தில, தெங்கு உற்பத்தியில் பெரும் வீழ்ச்சி ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன எனவும், இதனால் தெங்குசார் உற்பத்தித்துறைகள் பெரும் வீழ்ச்சியை எதிர் நோக்கக்கூடும் எனவும் தெரிவித்துள்ளது. (க)

# பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 28

வடமாகாண ஆசிரிய ஆலோசகர் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் எதிர்வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் ஆசிரிய ஆலோசகர்களின் சேவை உள்ளீர்ப்பு, வடமாகாண ஆசிரிய ஆலோசகர்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்படவுள்ளன. அதனைத் தொடர்ந்து புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெறும். (இ)

# இசையரங்கு

மாதகல், மார்ச் 28

மாதகல் பாணகவெட்டி அம்மன் மஹோற்சவம் கடந்த 19 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

நாளை வியாழக்கிழமை நடைபெறும் தேர்த்திருவிழாவில் முற்பகல் 11 மணி தொடக்கம் ஆலய முதன்மை மண்டபத்தில் கலாபூஷணம் க.லோகேஸ்வரனின் இசையரங்கு பக்க வாத்திய சகிதம் இடம்பெறும். (இ)

# ஈழத்துச் சிதம்பரத்தில் திருமுறையரங்கு

காரைநகர், மார்ச் 28

காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் பங்குனி உத்தர மஹோற்சவ பெருவிழா கடந்த புதன்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. நாளை வியாழக்கிழமை தேர்த்திருவிழாவில் காலை 9 மணியளவில் விசேட நிகழ்வாக அண்மையில் காரை பாரிவள்ளல் சு.சிவஞானம் அவர்களால் அமைக்கப்பட்ட சிவனடியார் மண்டபத்தில் கலைமாமணி க.லோகேஸ்வரனின் திருமுறையரங்கு பக்கவாத்திய சகிதம் இடம்பெறும். (இ)

# அகில இலங்கை கம்பன் கழகம் நடத்தும்

# கொழும்பு கம்பன் பெருவிழா

## நாளை கோலாகல ஆரம்பம்

கம்பன் கழகத்தின் பணிகள் ஆரம் பிக்கப்பட்டு இவ்வாண்டுடன் 38 வருடங்கள் பூர்த்தியாகின்ற நிலையில்–

கொழும்புக் கம்பன் கழகத்தின் இவ்வாண்டுக் கம்பன்விழா நாளை 29 ஆம் திகதி முதல் தொடர்ந்து 30,31, ஏப்ரல் 1 ஆகிய திகதிகளில் வெள்ளவத்தை இராம கிருஷ்ணமிஷன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கம்பன் விழாவின் முதல் நாளான நாளை 29 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு இராமகிருஷ்ண தோட்டம், இல.12 இல் அமைந்துள்ள ஸ்ரீ ஐஸ்வர்ய லஷ்மி கோயிலிலிருந்து கம்பன் திருவுருவப்படமும் சீதா இராம விக்கிரகங்களும் ஊர்வலமாக விழா மண்டபம் நோக்கி எடுத்து வரப்படவுள்ளன.

இவ் ஊர்வலத்தில் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் வருகைதரும் பிரமுகர்களும் இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், பிரித்தானியா, டுபாய் ஆகிய நாடுகளிலிருந்து வருகை தரவுள்ள அறிஞர்களும் பிரமுகர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இலங்கையின் பிரபல நாதஸ்வர, தவில் வித்துவான்களின் மங்கள இசையும், கல்லூரி மாணவர்களின் கீழைத்தேய வாத்திய இசையும், மங்கையர்களின் நிறைகுட பவனியும் ஊர்வலத்தை அலங்கரிக்கவுள்ளன.

தொடர்ந்து மாலை 5.30 மணிக்கு திருக்கேதீஸ்வரர் ஆலயத் திருப்பணிச் சபையைச் சார்ந்த திருமதி அ. கயிலாச பிள்ளை மங்கல விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைக்க, ஸ்ரீ ஐஸ்வர்ய லஷ்மி திருக்கோயில் அறங்காவலர் சபைத் தலைவரான செல்வி மாலா சபாரத்தினம் தலை மையில் விழாவின் முதல் நாள் நிகழ்ச் சிகள் நடைபெறவுள்ளன. இந்நிகழ்வில் மலேசிய நாட்டு இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத் துறைப் பிரதி அமைச்சரான டத்தோ எம். சரவணன் தொடக்கவுரையாற்றிச் சிறப்பிக்கவுள்ளார்.

**விழாவில் கலந்துகொள்ளும் வெளிநாட்டு அரசியல் பிரமுகர்கள்**


மலேசிய நாட்டு இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத் துறைப் பிரதி அமைச்சரான டத்தோ எம். சரவணன், புதுச்சேரி மாநில முன்னாள் முதலமைச்சரும் தற்போதைய புதுவை சட்டசபை சபாநாயகருமாகிய வெ. வைத்திலிங்கம், புதுச்சேரி சட்டசபையின் துணைச் சபாநாயகர் வி. பி.சிவக்கொழுந்து ஆகியோர் இம்முறை விழாவில் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

**விழாவில் கலந்துகொள்ளும் நம்நாட்டு அரசியல் பிரமுகர்கள்**

எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன், நகர அபிவிருத்தி மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம், தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன், நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான ஆறுமுகம் தொண்டமான், நாடாளுமன்ற உறுப்பினர்களான தர்மலிங்கம் சித்தார்த்தன், ம. சுமந்திரன், வடமாகாணசபை எதிர்க் கட்சித் தலைவர் சி. தவராசா, தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச்செயலாளர் வீ. ஆனந்தசங்கரி, வடமாகாணசபை உறுப்பினர் கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் இவ்வாண்டுக் கம்பன் விழாவில் கலந்துகொள்கின்றனர்.

**நூல் வெளியீடும், இறுவட்டு வெளியீடும்:**

இவ்வாண்டுக் கம்பன் விழாவில் கம்பன் கழக வெளியீடான கம்பனில் விளங்கிடும் விலங்குகள் எனும் நூலும், சிங்கப்பூர் கவிஞர் கி. வரதராஜன் எழுதிய கம்பனின் இராமன் மானுடனா மாலவனா? எனும் நூலும், 2017 ஆம் ஆண்டு நடைபெற்ற கொழும்பு, யாழ் கம்பன் விழா, இசைவிழா நிகழ்ச்சிகளின் இறுவட்டுக்களும் வெளியிடப்படவுள்ளன. இவற்றின் முதற்பிரதிகளை இலக்கியப்புரவலர் ஹாசிம் உமர் மற்றும் தெஹிவளை ஆஞ்சநேய தேவஸ்தான அறங்காவலர் ஸ்ரீலஸ்ரீ சந்திரசேகர சுவாமிகள், தினக்குரல் நிறுவுநர் எஸ்.பி.சாமி, நாவலர் நற்பணி மன்ற நிறுவுநர் என். கருணையானந்தன் ஆகியோர் பெற்றுக்கொள்ளவுள்ளனர்.




**சமூக நிதியுதவி:**

இவ்விழாவில் தமிழ்நாட்டு பிரபல வர்த்தகர் ஏ.எல். சிதம்பரம் அவர்கள் நிறுவிய அமரர் எல். அலமேலு ஆச்சி ஞாபகார்த்த அறக்கட்டளை நிதி சமூக நிறுவனம் ஒன்றிற்கும் அமரர் சி.கே. இலங்கைராஜா ஞாபகார்த்த அறக்கட்டளை நிதி குடும்பம் ஒன்றிற்கும், அமரர் வித்துவான் வேலன் ஞாபகார்த்த அறக்கட்டளை நிதி நான்கு உயர்கல்வி மாணவர்களுக்குமாக மூன்று நிதியுதவி அறக்கட்டளைகளை கழகம் வழங்கவுள்ளது.

## 'கம்பன்புகழ் விருதை' இம்முறை பெறுகின்றார் பிரபல ஸக்ஸபோன் கலைஞர் கத்ரி கோபால்நாத்

**'கம்பன் புகழ் விருது' பெறும் பிரபல ஸக்ஸபோன் கலைஞர்**

கொழும்புக் கம்பன் கழகம் உலகளாவி புகழ்பெற்ற சான்றோர் ஒருவருக்கு கம்பன் புகழ் விருதினை ஆண்டுதோறும் வழங்கி வருகிறது. வி.ரி.வி. பவுண்டேஷன் நிறுவியுள்ள வி.ரி.வி. தெய்வநாயகம்பிள்ளை நினைவு அறக்கட்டளை வழங்கும் இக் கம்பன்புகழ் விருது, இவ்வாண்டு புகழ்பெற்ற ஸக்ஸபோன் இசைக் கலைஞர் பத்மஸ்ரீ கத்ரி கோபால்நாத் (தமிழ்நாடு) அவர்களுக்கு வழங்கப்படவுள்ளது. விருதுக் கேடயம், பொன்னாடை, ரூபா இரண்டு இலட்சம் பொற்கிழி ஆகியவற்றுடன் கூடிய இவ்விருது, கம்பன்விழாவின் நிறைவு நாளான ஏப்ரல் முதலாம் திகதி மாலை வழங்கப்படவுள்ளது.

**சான்றோர் கௌரவம் பெறும் பெருமக்கள் அறுவர்:**

தம் சுயநலமற்ற செயற்பாடுகளால் நம் நாட்டுக்குப் பெருமை சேர்த்த பெருமக்கள் அறுவரை ஆண்டுதோறும் கொழும்புக் கம்பன்கழகம் கௌரவித்து வருகிறது. அவ்வரிசையில் இவ்வாண்டு கௌரவத்துக்குரியவர்களாக, இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன், இலங்கை சர்வோதயம் நிறுவுநர் ரி. ஆரியரட்ண, மேல் மாகாண சபை ஆளுநர் கே. சி. லோகேஸ்வரன், வரலாற்று ஆய்வாளர் மாத்தளை அல்ஹாஜ் ஏ.ஏ.எம். புவாஜி, சமூக சேவையாளர் திருமதி கெத்சி சண்முகம், வடமாகாணசபை எதிர்க்கட்சித் தலைவர் சி. தவராசா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவ்விருதுக்குரியவர்களுக்கான விருதுகள் விழாவின் நிறைவு நாளில் சகல மரியாதைகளுடனும் வழங்கப்படவுள்ளன.

**இவ்வாண்டுக்கான அறக்கட்டளை விருதுகள் பெறுவோர்**

கம்பன் விழாவில் வருடாந்தம் ஐந்து அறக்கட்டளை விருதுகள் வழங்கப்பட்டு

## தொடர்ந்து நான்கு தினங்கள் வெள்ளவத்தையில்

வருகின்றன. இவ்வாண்டு நாவலர் நற்பணி மன்றத்தின் தலைவர் என். கருணைஆனந்தன்நிறுவியுள்ளநாவலர் விருதினை புகழ்பெற்ற அறிஞரான சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் அவர்களும், தமிழ்நாடு திருக்குவளை இராமஸ்ரீனிவாசன் மங்கையர்க்கரசி நினைவு அறக்கட்டளையினர், நிறுவியுள்ள விபுலாநந்தர் விருதினை புகழ்பெற்ற தவில் வித்துவான் 'லயஞான சிரோமணி', ஆர். புண்ணியமூர்த்தி அவர்களும், அமரர் கவிக்கோ அப்துல் ரகுமான் (தமிழ்நாடு) அவர்கள் நிறுவிய மகரந்தச்சிறகு விருதினை சிங்கப்பூர் நாட்டின் சிறந்த கவிஞர்களில் ஒருவரான அ.கி. வரதராஜன் அவர்களும் –

புகழ்பெற்ற தமிழ்ப் பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன் அவர்களின் நினைவாகக் குடும்பத்தினர் நிறுவியுள்ள 'நுழைபுலம்' ஆய்வு விருதினை மூத்த ஊடகவியலாளர் கலாபூஷணம் அருணா செல்லத்துரை அவர்களும், புகழ்பெற்ற தமிழகப் பேராசிரியர் சாலமன் பாப்பையா அவர்கள் நிறுவியுள்ள ஏற்றமிகு இளைஞர் விருதினை சின்மய மிஷன் யாழ்ப்பாண வதிவிட ஆச்சாரியார் சிதாகாஷானந்த சுவாமிகளும் பெற்றுக் கொள்கின்றனர்.

கேடயம், பொன்னாடை, ரூபா இருபதாயிரம் பொற்கிழி ஆகியவற்றுடன் கூடியதாக இவ் விருதுகள் அமைகின்றன.

**இளையோர் ஊக்குவிப்புப் போட்டிகளுக்கான பரிசளிப்பு:**

அமரர் துரை. விஸ்வநாதன், அமரர் பொன். பாலசுந்தரம், அமரர் இலக்கிய வித்தகர் இ. நமசிவாய தேசிகர் ஆகியோரின் ஞாபகார்த்தமாக நடாத்தப்பட்ட பேச்சு, கவிதை, மனனப் போட்டிகளில் வெற்றி பெற்ற போட்டியாளர்களுக்கான தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்களும் பரிசில்களும் விழாவின் மூன்றாம் நாளன்று (31.03.2018) மாலை வழங்கப்படவுள்ளன. (10 ஆம் பக்கம் பார்க்க...)




# கொழும்பு கம்பன் பெருவிழா

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

**கம்பன் விழா நிகழ்ச்சிகள்:**

இவ்வாண்டுக் கம்பன்விழாவில் பட்டி மண்டபம், எழிலுரை, சுழலும் சொற்போர், கவியரங்கம், கோல உரையாடல், விவாத அரங்கம், சிந்தனை அரங்கு, வழக்காடு மன்றம் ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெற வுள்ளன.

**விழாவில் கலந்துகொள்ளும் பிரமுகர்கள், அறிஞர்கள்:**

இவ்வாண்டு விழா நிகழ்ச்சிகளில் புலவர் இரெ. சண்முகவடிவேல், புலவர் மா. இராம லிங்கம், பேராசிரியர் மு. இராமச்சந்திரன், இலக்கியச்சுடர் த. இராமலிங்கம், திரைப்பட இயக்குநர் பாரதி கிருஷ்ணகுமார், தமிழக அரசின் கம்பர் விருதாளர் பால இரமணி, பேராசிரியர் ரி. ரெங்கராஜா ஆகிய தலை சிறந்த அறிஞர்களும், இலக்கிய ஆர்வல ரும் பிரபல நல்லி புடைவை நிறுவன அதி பரும் சிறந்த கொடையாளருமான நல்லி சின்னசாமி செட்டி, சிங்கப்பூர் கவிஞர்க ளான இலந்தை சு.ராமசாமி மற்றும் அ.கி.வரதராஜன் ஆகிய பிரமுகர்களும் புதுவைக் கம்பன் கழகம், இராமேஸ்வரம் கம்பன் கழகம், சிங்கப்பூர் கம்பன் கழகம், மலேசிய கண்ணதாசன் அறவாரியம், லண்டன் சைவ முன்னேற்றச் சங்கம், ஆகி யவற்றின் உறுப்பினர்களும், நம்நாட்டைச் சார்ந்த பிரபல பேராசிரியர்கள், அறிஞர்கள், நிர்வாகிகள், சமுதாயப் பிரமுகர்கள், வர்த் தகப் பெருமக்கள் முதலிய பெரியோர்கள் பலரும் கலந்து கொள்கின்றனர்.

**விழாவில் கலந்துகொள்ளும் புகழ்பெற்ற வைத்திய நிபுணர்கள்**

கின்னஸ் நூலில் பெயர் பொறித்த உலகப் புகழ் பெற்ற கல்லீரல் மாற்று அறுவைச் சிகிச்சை நிபுணரும் கிளினிகல் குளோபல் வைத்தியசாலை கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சைப் பிரிவு இயக்கு நரும் இஸ்லாமிய தமிழறிஞருமான டாக் டர் முகமட் ரேலா, குழந்தை சத்திர சிகிச்சை நிபுணரும் கம்ப இலக்கிய நூல்களின் ஆசிரியருமான டாக்டர் பிரியா இராமச்சந் திரன் அவர்களும் இவ்வாண்டு விழாவில் கலந்துகொள்கின்றனர்.

**புத்தகக் கண்காட்சி :**

விழா நடைபெறும் நான்கு நாள்களிலும் மண்டப வாயிலில் அகில இலங்கைக் கம்பன்கழகம் மற்றும் பூபாலசிங்கம் புத்தக சாலை ஆகியன புத்தகக் கண்காட்சியை நடத்தவுள்ளன. இக் கண்காட்சியில் சிறப் புத் தள்ளுபடியில் புத்தகங்கள் மற்றும் இறுவட்டுக்கள் விற்பனை செய்யப்படும்.

**இரசிகர்களுக்கு வேண்டுகோள்:**

கம்பன் விழா நிகழ்ச்சிகள் அனைத்தும் நேர ஒழுங்கின்படி நடத்தப்படவுள்ளமை யால் இரசிகர்கள் குறித்த நேரத்தில் வருகை தந்து விழாவைச்சிறப்பிக்க வேண்டு மென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

கழக முகவரிப் பட்டியலில் பதிவு செய் யப்பட்டோருக்கு அழைப்பிதழ்கள் நேரடி யாக அனுப்பி வைக்கப்படுகின்றன. மற் றைய தமிழ் இரசிகர்களுக்கு ஊடகங்கள் மூலம் விழாவிற்கான அழைப்பினை கம்பன்கழகம் மனமகிழ்வுடன் விடுக்கி றது. ★

### தாயை இழந்து நிற்கும் பிள்ளைகளுக்காக

# ஆனந்தசுதாகரனை விடுதலை செய்க ஜனாதிபதி மைத்திரிக்கு சுப்யான் கடிதம்



யாழ்ப்பாணம், மார்ச் 28

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட மக்கள் பணிமனையின் சார்பில் அதன் தலைவர் மௌலவி பி.ஏ.எஸ். சுப் யான், ஆயுள் கைதியான ஆனந்த சுதாகரனுக்கு பொதுமன்னிப்பு வழங்கி மனிதாபிமான அடிப்படை யில் விடு தலை செய்யுமாறு ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேனவுக்கு, கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில்–

கடந்தவாரம் வெகுஜன ஊடகங் கள் மூலம் இலங்கையிலும் சர்வதேச ரீதியிலும் உள்ள மனிதா பிமானமுள் ளவர்களை கண்ணீர் வடிக்க வைத்த சம்பவமே ஆயுள் கைதியான ஆனந்த சுதாகரன் தனது மனைவியின் இறு திச் சடங்கில் கடந்து கொண்டு விட்டு சிறைச்சாலை வாகனத்தில் ஏறும் போது எட்டு வயது மகளும் தனது தகப்பனின் கையைப் பிடித்த வாறு அதில் ஏறும் காட்சியாகும்.

இதனைத் தாங்களும் பார்க்கத் தவறியிருக்க மாட்டீர்கள் என்றே கரு துகின்றேன்.

கடந்த காலங்களில் நாட்டுக்கு எதிரான வன்முறைகளில் ஈடுபட்ட வர்கள் எனப் பகிரங்கமாகத் தெரிந்த பலர் இன்றும் சுதந்திரமாக நடமாடிக் கொண்டிருக்கின்ற அதேநேரத்தில் சிறை வைக்கப்பட்டவர்கள் பலர் பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப் பட்டுள்ளனர்.

எனவே, ஆனந்தசுதாகரனின் இரு பிள்ளைகளின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு, தங்களுக்குரிய உயர்வான அதிகாரத்தை இம் மனிதா பிமான செயற் பாட்டுக்கு பயன்படுத்தி ஆனந்த சுதாகரனுக்கு பொதுமன் னிப்பு வழங்கி விடுதலை செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொள்கி றேன்.– என்றுள்ளது. (இ)







பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவின் கிளாலி கிராமத்தில் கடற்றொழிலை வாழ்வாதாரமாகக் கொண்டு வாழ்ந்துவரும் இருபது பயனாளி களுக்கு தேசிய நல் லிணக்க அமைச்சின் ஏற்பாட்டில் வலைகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு கிராம அலுவலர் பிரபாகரன் தலைமையில் கிளாலி கடற்றொழிலாளர் கூட்டு றவு சங்க மண்டபத்தில் ஆரம்பமாகியது.

இங்கு கிளிநொச்சி, யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் மற்றும் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை உறுப்பினர்கள்,கிராம அலுவலர், பச்சிலைப் பள்ளி கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க சமாசங் களின் தலைவர், கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க முகாமையா ளர், உறுப்பினர்கள் மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (இ)

# தோல்வி கண்ட அரசியல்வாதிகளை மீண்டும் ஆட்சிபீடத்தில் அமர்த்துவது பிரதமர் மீதான நம்பிக்கையில்லா பிரேரணையின் உண்மையான நோக்கம்

## நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவிப்பு

தோல்வி கண்ட அரசியல்வாதிகளை பின்கதவால் மீண்டும் ஆட்சி பீடத்தில் அமர்த்துவது நம்பிக்கையில்லாப் பிரேரணையின் உண்மையான நோக்கம் என்று நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை பெயரளவில் பிரதமருக்கு எதிராகக் கொண்டுவரப்பட்டுள்ளது. ஆனால் இதன் உண்மையான இலக்கு ஜனாதிபதியே.

ஜனாதிபதிக்கு பாதுகாப்பாக அமையும் பிரதமரையும், ஐக்கிய தேசியக் கட்சியையும் தோற்கடித்து அதன் மூலமாக அதிகாரத்தைக் கைப்பற்றுவது சம்பந்தப்பட்ட தரப்புக்களின் நோக்கம் என்று அமைச்சர் மங்கள சமரவீர குறிப்பிட்டார்.

இதேவேளை, காணாமற் போனவர்களது குடும்ப சங்கத்தின் தலைவர் பிரிட்டோ பெர்னாண்டோ கருத்து வெளியிடுகையில்-

நம்பிக்கையில்லாப் பிரேரணையில் யார் கைச்சாத்திட்டிருந்தாலும், இதன் உண்மையான நோக்கத்தைக் கண்டறிய வேண்டும் என்று குறிப்பிட்டார்.



கடந்த கால திருட்டுக்கள் பற்றி விசாரிக்க பிரத்தியேக நீதிமன்றத்தை ஸ்தாபிக்கும் தருணத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படுகிறது எனவும் அவர் கூறினார்.

இதுதொடர்பில் நவ சமசமாஜக் கட்சியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகுகருணாரட்ன கருத்து வெளியிடுகையில்-

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவளிக்கும் வகையில் வலுவான சக்தி ஒன்று அணிதிரண்டுள்ளது என குறிப்பிட்டார்.

---

## இரத்மலானையில் மோட்டார் குண்டு மீட்பு; அதிரடிப் படையினர் சுற்றிவளைப்பு!

கொழும்பு, மார்ச் 28

இரத்மலானை பகுதியில் மோட்டார் குண்டொன்று மீட்கப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொரப்பன பாலத்தின் அருகில் மோட்டார் குண்டு ஒன்றின் பாகங்களை நேற்றுக் காலைதாம் மீட்டனர் என கல்கிஸை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பாலத்திற்கு அருகில் பயணித்த நபர் ஒருவர் குண்டு ஒன்றின் பகுதி காணப்படுகிறது என பொலிஸ் அவசர இலக்கத்திற்கு தகவல் வழங்கியுள்ளார்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற கல்கிஸை பொலிஸார் அதனை மீட்டுள்ளனர்.

தற்போது அந்தப் பகுதியில் தேடுதல் நடவடிக்கையை மேற்கொள்ளும் நோக்கில் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் அழைக்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

---

## இனவாதத்தைத் தூண்ட முயற்சித்த நாய்கள்!

கொழும்பு, மார்ச் 28

கண்டியில் ஏற்படவிருந்த பெரும் இனவாத மோதலை சி.சி.ரீ.வி. கமராவின் உதவியால் தடுப்பதற்கு முடிந்தது என ஹத்துரலியத்த பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் கண்டியில் ஏற்பட்ட இன மோதல் சம்பவங்களை அடுத்து பொலிஸ் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருந்தது. அன்றையதினம் இரவு ஹத்துரலியத்த நகர வர்த்தகரின் கடைக்கு முன்னால் மிருகக் கழிவுகள் அடங்கிய பொதி ஒன்று வைக்கப்பட்டிருந்தது.

அடுத்த நாள் காலை கடையை திறப்பதற்காக வந்த கடையின் உரிமையாளர் பொதியை அவதானித்தவுடன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்.

பதற்றமான சூழலில் உடனடியாக செயற்பட்ட பொலிஸ் அதிகாரி அந்த இடத்தை சோதனையிடுவதற்காக குழுவொன்றை அனுப்பி வைத்தார். இந்த செயற்பாட்டை செய்தவர்களைக் கண்டுபிடிப்பதற்காக அந்தக் கடையில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரீ.வி. கமரா சோதனையிடப்பட்டுள்ளது.

அந்த கமரா காட்சியில் நாய் ஒன்று மிருகக் கழிவுகள் அடங்கிய பொதியை வாயினால் கவ்விக் கொண்டு வந்து கடைக்கு முன்னால் விட்டுச் சென்றுள்ளது.

சி.சி.ரீ.வி. கமரா இல்லாமல் போயிருந்தால் இது இனவாதத்தினால் மேற்கொள்ளப்பட்ட செயலாக மாறி மேலும் பல பிரச்சினைகளை ஏற்படுத்தியிருக்கும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இனவாதத்தை தூண்டிவிடும் அளவிற்கு நாய்களும் திறமையாக உள்ளன வென பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

---

திடீர் தேடுதல்:

## 13 ஹோட்டல்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 28

பலப்பிட்டி நகரத்தில் மேற்கொள்ளப்பட்ட திடீர் தேடுதல் நடவடிக்கையின்போது காலாவதியான உணவுப் பொருள்களை விற்பனை செய்த மற்றும் அசுத்தமான முறையில் செயற்பட்டு வந்த 13 ஹோட்டல்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

காலி மாவட்டத்தில் சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகம் மற்றும் பலப்பிட்டி பொது மக்கள் சுகாதார சேவை அலுவலகம் ஆகியன இணைந்து இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.



---

## மகாவலி நீரில் மீன் உற்பத்தித் திட்டம்

கொழும்பு, மார்ச் 28

மகாவலி நீர்த்தேக்க நீரில் மீன்வளத்தை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டத்தை ஆரம்பிக்குமாறு அமைச்சர் மஹிந்த அமரவீர கடற்றொழில் மற்றும் நீர்வள அதிகாரிகளுக்கு நேற்றுமுன்தினம் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இந்த வருட இறுதிக்குள் நாட்டில் நன்னீர் மீன் உற்பத்தியை 2 லட்சத்து 38 ஆயிரம் மெற்றிக் தொன்களாக அதிகரிப்பதே இதன் நோக்கமாகும்.

மொறஹாகந்த நீர்த்தேக்கத்தின் நீர் வடமத்திய மாகாணத்தில் மகாவலி நீர்த்தேக்கத்திற்கு விடப்பட்டுள்ளது.

இதற்கமைவாக இந்த நீர்வளத்தைக்கொண்டு சிறுபோக உற்பத்தி நடவடிக்கையை நிலையாக மேற்கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## மஹிந்தவை மீண்டும் ஆட்சிக்கு கொண்டு வருவோம்: கோட்டாபய



கொழும்பு, மார்ச் 28

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை மீண்டும் ஆட்சிக்குக் கொண்டு வருவோம் என முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அவருக்கெதிரான வழக்கு விசாரணையில் கலந்துகொண்டதன் பின்னர் கருத்துத் தெரிவிக்கும்போதே முன்னாள் பாதுகாப்பு செயலாளர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தற்பொழுது நாட்டில் மீண்டும் பாதாள உலக குழுவின் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. பழைய நிலைமைகள் மீண்டும் உருவாகியிருக்கின்றன.

தற்போதைய அரசு எங்களை சிறைப்படுத்தும் முயற்சியிலேயே ஈடுபட்டு வருகிறது. எமக்கு அது பற்றி பிரச்சினை இல்லை. மஹிந்த ராஜபக்ஷவை மீண்டும் ஆட்சிக்கு கொண்டு வருவோம் எனவும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய மேலும் தெரிவித்துள்ளார்.


---

## மன்னார் மாவட்டத்தில் வறட்சியால் 83 ஆயிரத்து 163 பேர் பாதிப்பு

கொழும்பு, மார்ச் 28

மன்னார் மாவட்டத்தின் மன்னார் நகரம், நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு, மடு போன்ற பிரதேசங்களில் மொத்தமாக 83 ஆயிரத்து 163 பேர் வறட்சியினால் பாதிக்கப் பட்டுள்ளனர்.

இந்த வருடம் மார்ச் மாதம் 21 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் மன்னார் மாவட்டத்தில் 24 ஆயிரத்து 254 குடும்பங்களைச் சேர்ந்த 83 ஆயிரத்து 163 பேர் வறட்சியால் பாதிப்படைந்துள்ளனர் என மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.



அடுத்த இரண்டு மாத காலப்பகுதியில் மொத்தமாக வறட்சியினால் 35 ஆயிரத்து 680 குடும்பங்களைச் சேர்ந்த 1 லட்சத்து 24 ஆயிரத்து 449 பேர் பாதிக்கப்படக்கூடும் என்று குறிப்பிட்டுள்ளது.

இவர்களுக்கான நிவாரணங்களைப் பெற்றுகொடுப்பதற்காக மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. தற்போதைய வளங்களாக 4 டிரக்டர் பவுஸர்கள், 156 தண்ணீர் தாங்கிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

மன்னார் மாவட்டத்தின் எதிர்கால வறட்சி நிலையை நிர்வகிக்க 7 லொறி பவுஸர்கள் 10 டிரக்டர் பவுஸர்கள் மற்றும் 286 குடிதண்ணீர் தாங்கிகள் தேவை என்றும் மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

(க)

காலைக்கதிர்
Kalaikkathir



# 'ரிவர்ஸ் ஸ்விங்'கின் பின்னால் ஒளிந்திருக்கும் அறிவியல்

## பிரதமரே தலையிடும் வகையில்

# ஆஸி. தனக்குத்தானே வைத்துக்கொண்ட ஆப்பு!

மு.பிரதீப் கிருஷ்ணா



ஆஸ்திரேலியா மொத்தமும் அப்சட்டாக இருக்கிறது. அனுபவமற்ற வீரர் ஒருவர் ஒழுக்கமற்ற செயலில் இறங்க, அது 'எங்கள் திட்டம்' என்று கப்டன் அப்ரூவர் ஆகிவிட, ஆஸ்திரேலிய பிரதமரே அதைப் பற்றி நேரடியாக பேட்டி கொடுத்தார். கப்டன், துணைக் கப்டன் ராஜினாமா... இருவர் சஸ்பென்ஷன் லீடர்ஷிப் குழு மீது விசாரணை என இரண்டு நாளில் ஏகப்பட்ட களேபரங்கள்.

மற்ற நாட்டு வீரர்களெல்லாம், இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி ஆஸி அணி மீதான தங்களின் வன்மத்தைக் கொட்டிக்கொண்டிருக்கின்றனர். ஐ.பி.எல் நிர்வாகம் முதல் ராஜஸ்தான் றோயல்ஸ் வரை அடுத்து என்ன செய்வது எனக் காத்துக்கொண்டிருக்கின்றன. ஒரே ஒரு சம்பவம் சாம்பியன்களின் வரலாற்றைப் புரட்டிப் போட்டுவிட்டது. இத்தனை சம்பவங்களுக்குமான அடிப்படைக் காரணம் – ரிவர்ஸ் ஸ்விங்!

பேங்க்ராப்ட் என்ன செய்தார் என்பதைப் பற்றி மொத்த உலகமும் போதுமான அளவு விவாதித்துவிட்டது. இதைச் செய்த முதல் ஆள் இவரா என்றால் இல்லை. முன்பு இதுபோன்ற தருணங்களில் இப்படி பிரச்சினை பெரிதானதா என்றால் அதுவும் இல்லை. அப்படியிருக்கையில் இப்போது மட்டும் ஏன்? இதை அறிந்து கொள்வதற்கு முன்னால், 'அதை அவர் ஏன் செய்தார்' என்ற கேள்விக்கு நாம் பதில் அறிந்துகொள்வது அவசியம். அதற்கு ரிவர்ஸ் ஸ்விங் (Reverse swing) பற்றி அறிந்துகொள்வதும் அவசியம்.

கூக்ளி, தூஸ்ரா, லெக் பிரேக், ஓஃப் பிரேக் என ஸ்பின்னர்களுக்கு எக்கச்சக்க ஆயுதங்கள் உண்டு. அதைப் போல் வேகப்பந்துவீச்சாளர்களுக்கு பௌன்ஸ், யோர்க்கர், ஸ்விங் போன்றவற்றைச் சொல்லலாம். ஆனால், ஓவரின் ஆறு பந்துகளையும் பௌன்ஸராக வீச முடியாது. ஒன்று அல்லது இரண்டுதான். அதேபோல் யோர்க்கரை ஒவ்வொருமுறையாகவும் துல்லியமாக வீசிவிட முடியாது. ஃபுல் டொஸ்ஸாக மாறி வீணாகவும் வாய்ப்புண்டு.

ஆக, ஃபாஸ்ட் பௌலர்கள் நம்பக்கூடிய ஒரே ஆயுதம் ஸ்விங் மட்டுமே. அதுவும் பந்து புதிதாக இருக்கும்வரை மட்டுமே இன்ஸ்விங் அல்லது அவுட்ஸ்விங் செய்ய முடியும். பந்து பழசாகிவிட்டால் ஸ்விங் செய்வது இயலாத காரியம். பழைய பந்திலும் எப்படியாவது பேட்ஸ்மேனைத் திக்குமுக்காடச் செய்யவேண்டும் என்ற பௌலர்களின் எண்ணம்தான் ரிவர்ஸ் ஸ்விங் என்ற ஆயுதத்தை அறிமுகப் படுத்தியது.

'conventional swing' எனப்படும் சாதாரண ஸ்விங்குக்கு பந்து புதிதாக இருக்கவேண்டும். அப்படி இருக்கும்போது, (வலது கை பேட்ஸ்மேன்களுக்கு) ஷைனிங்காக இருக்கும் பக்கம் கையின் வலதுபுறம் இருந்தால் அவுட்ஸ்விங்கும், இடது புறம் இருந்தால் இன்ஸ்விங்கும் ஆகும். இதற்கு நேர் எதிரானதுதான் ரிவர்ஸ் ஸ்விங். ஷைனிங் பகுதி வலது புறமிருந்தால் இன்ஸ்விங்கும், இடது புறமிருந்தால் அவுட்ஸ்விங்கும் ஆகும். 'conventional swing' ரிவர்ஸாக நடப்பதால் அதற்கு ரிவர்ஸ் ஸ்விங் என்று பெயர்.

ரிவர்ஸ் ஸ்விங் மன்னன் எனப் புகழப்பட்ட பாகிஸ்தான் ஜாம்பவான் வாசிம் அக்ரம், ஸ்விங் என்பது ஓர் அறிவியல் என்று கூறுவார். ஆம், உண்மையில் அதன் பின்னால் அறிவியல்தான் ஒளிந்திருக்கிறது. பந்தை ரிவர்ஸ் ஸ்விங் செய்யவேண்டுமென்றால், அதற்கு ஒரு கண்டிஷன் இருக்கிறது. பந்தின் இரு பகுதிகளின் எடையிலும் எடையில் அப்படி இருக்கும்போது, எடை அதிகமாக இருக்கும் பகுதியை (ஷைனிங் பகுதி) வலதுபுறம் வைத்து வீசினால் அவுட்ஸ் விங் ஆவதற்குப் பதிலாக இன்ஸ்விங் ஆகும். காரணம், எடை அதிகமாக இருக்கும் பகுதியை விட, குறைவாக இருக்கும் பகுதியில் காற்றோட்டம் அதிகமாக இருக்கும்.

அது பந்தை உள்நோக்கித் தள்ளுவதால், இன்ஸ்விங் ஆகும். பந்து காற்றில் இருக்கும்போதே உள்நோக்கி நகரத் தொடங்குவதால், (உதாரணமாக) ஆஃப் ஸ்டம்புக்கு வெளியே ரிலீஸ் ஆகும் பந்து, பிட்ச் ஆகும்போதே மிடில் ஸ்டம்ப் லைனுக்கு நேராக பிட்ச் ஆகும். ஷைனிங் பகுதியைக் கவனித்து, அவுட்ஸ்விங் ஆகும் என நினைக்கும் பேட்ஸ்மேன், பிட்ச் ஆகும் இடத்தினாலும், அதன்பின் ஆகும் இன்ஸ்விங்கினாலும் ஏமாந்து போவார். இதனால்தான், ரிவர்ஸ் ஸ்விங், பௌலர்களின் மிகப்பெரிய ஆயுதமாகக் கருதப்படுகிறது.

சரி, அதெப்படி பந்தின் ஒரு பகுதி எடை அதிகமாகவும், மற்றொரு பகுதி குறைவாகவும் இருக்கும்..? பொதுவாக, ஆட்டத்தின் நடுவில் பழையதாகும் போது, பந்து அதன் ஷைனிங் தன்மையை இழக்கும். எடை குறையும். ஒரு பகுதியின் எடையைக் கூட்டுவதற்காகத்தான் ஃபீல்டிங் அணியினரும், பௌல ரும் தொடர்ச்சியாக பந்தில் எச்சிலைத் துப்புவதும் தடவுவதுமாக இருப்பார்கள். அதனால், இரண்டு பகுதிகளுக்கான எடையிலும் வித்தியாசம் ஏற்படும்.

இதுவும் ஒரு கட்டத்தில் பௌலர்களுக்குப் பிரச்சினையாகப்பட்டது. இப்படிச் செய்வதற்குப் பந்து மிகவும் பழையதாக வேண்டும். 60 ஓவர் வரையிலாவது பயன்பட்டிருக்கவேண்டும். ஆனால், அதற்கு முன்பு..? 20-25 ஓவர்களுக்கு மேல் சாதாரண ஸ்விங் முறைகளும் எடுபடாது. அதனால், ரிவர்ஸ் ஸ்விங் செய்ய அதுவரை கடைபிடித்து வந்த முறைகளையும் ரிவர்ஸாகச் செய்யத் தொடங்கினர்.




எதற்காக, பழையதாகும் வரை காத்திருந்து, ஒரு பகுதியின் எடையைக் கூட்டவேண்டும்? பேசாமல் கொஞ்சம் புதிதாக இருக்கும்போதே இன்னொரு பகுதியின் எடையைக் குறைத்துவிட்டால்...? இந்தச் சிந்தனை எழுந்த பிறகுதான் Ball tampering என்ற வார்த்தை புழக்கத்துக்கு வந்தது. வீரர்கள், பந்தின் ஒரு பக்கத்தை ஏதேனும் பொருள் கொண்டு தேய்ப்பதன் மூலம், அதன் ஷைனிங் தன்மையை இழக்கச் செய்து, எடையைக் குறைப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

ஷூவில் இருக்கும் ஆணி, ஜிப், போத்தல் மூடிகள், விரல் நகம் என எத்தனையோ பொருள்களைக் கொண்டு இதை நடைமுறைப் படுத்தத் தொடங்கினார்கள். ஆட்டத்தின் எந்த தருணத்திலும் ரிவர்ஸ் ஸ்விங் பந்துகள் பேட்ஸ்மேன்களைத் தாக்கின. கொஞ்சமும் எதிர்பாராத பேட்ஸ்மேன்கள் இதனால் திக்குமுக்காடிப் போனார்கள். 90-களில் பாகிஸ்தான் கிரிக்கெட்டில் கோலோச்சியதற்கு மிகப்பெரிய காரணம் இதுதான். ஏனெனில், இது 'மேட் இன் பாகிஸ்தான்'.

இதை அறிமுகம் செய்து வைத்தவர், பாகிஸ்தான் பௌலரான சர்ஃபராஸ் நவாஸ்.

அந்தக் காலகட்டத்தில் பாகிஸ்தான் அணி மீது தொடர்ச்சியாக ball tampering புகார் வைக்கப்பட்டது. இம்ரான் கான் காலத்தில் தொடங்கி, பின்னர் வாசிம் அக்ரம், வக்கார் யூனுஸ் என்று ரிவர்ஸ் ஸ்விங்கில் இவர்கள் மிரட்ட, இவர்களை சர்ச்சைகள் தொடர்ந்து கொண்டே இருந்தன. 'Looking after the cricket ball' என்று அக்ரம் தான் விளையாடிய காலத்தில் சொன்ன ஒரு வாசகம் மிகவும் பிரசித்தி பெற்றது.

அதாவது பந்தின் தன்மையை ரிவர்ஸ் ஸ்விங்குக்கு ஏற்றதுபோல் பராமரிப்பது. அதில் மொத்த அணிக்கும் பங்கு இருந்ததாகக் கூறினார் அக்ரம். ஆனால், அவர்கள் பந்தை எப்படிக் கையாண்டார் கள் என்பது பற்றியும், அவர்களின் ரிவர்ஸ் ஸ்விங் மந்திரத்தைப் பற்றியும் வெளியே சொல்ல மறுத்துவிட்டார்.

அவருக்கு அடுத்த தலைமுறை வீரரான ஷோயப் அக்தர், தான் அடிக்கடி பந்தை சேதப்படுத்தியதாக 'Controversially yours' என்ற தன் சுயசரிதையில் குறிப்பிட்டார். எல்லா ஆடுகளங்களும் பேட்டிங்குக்குச் சாதகமாக இருக்கும்போது, பௌலர்களான நாங்களும் இங்கு பிழைக்கவேண்டுமே! என்று அதற்கான காரணத்தைக் குறிப்பிட்டிருந்த அக்தர், கிட்டத்தட்ட அனைத்து பாகிஸ்தான் பௌலர்களுமே பந்தை சேதப்படுத்தியதாக எழுதியிருந்தார். அக்தர் பந்தை சேதப்படுத்திய குற்றத்துக்காக இரண்டு முறை தண்டிக்கப்பட்டவர். இவ்வளவு ஏன், 1990-ல் பாகிஸ்தான் அணியுடன் நடந்த டெஸ்ட் போட்டியில் பந்தை சேதப்படுத்தியதாக நியூஸிலாந்து வீரர்கள் கிறிஸ் பிரிங்கிள், மார்ட்டின் குரோவ் ஆகியோரும் ஒப்புக்கொண்டனர்.

நான் பேட்டிங் செய்தபோது, எதேச்சையாக பந்தை கையில் எடுத்துப் பார்த்தேன். அப்போது பந்தின் ஒரு பகுதி மிகவும் கடுமையாக அடி வாங்கியிருந்தது. பாகிஸ்தான் வீரர்கள் ரிவர்ஸ் ஸ்விங் செய்வதற்காக வேண்டுமென்றே பந்தை சேதப்படுத்தியது தெரிய வந்தது. அதனால், அந்தத் தொடரின் 3-வது போட்டியில் நாங்களும் அதைப் பயன்படுத்தினோம் என்று 2006 ஆம் ஆண்டு ஒரு பேட்டியில் கூறினார் மார்ட்டின் குரோவ். இதையெல்லாம் வைத்துப் பார்க்கும் போது, அக்ரம் கூறிய 'Looking after the cricket ball' என்பது ball tampering தான் என்று ஒருவகையில் தெளிவாகிறது.

அக்ரம் சொல்லியதன்மூலம், இந்த ball tampering அனைத்து வீரர்களுக்குமே வேலையாகக் கொடுக்கப் பட்டிருக்கிறது என்பதும் புரிகிறது. பௌலர் மட்டுமே செய்தால், அதன் தன்மையை மாற்ற தாமதமாகும். அனைவரும் அதில் ஈடுபட்டால், பந்து சீக்கிரம் பழசாகும். அதனால், அந்தப் பொறுப்பு ஃபீல்டர்களின் தலையிலும் விழுகிறது. மார்கஸ் டிரஸ்கோதிக், ஃபாஃப் டுப்ளெஸ்ஸி முதல் இப்போது பேங்க்ராஃப்ட் வரை அதன் பலிகடாதான். இப்போது பேங்க்ராஃப்ட் பந்தைச் சேதப்படுத்தியதன் நோக்கம் புரிகிறதா..?

ஆனால், ஆஸ்திரேலியா செய்ததன் நோக்கம், 'தென்னாபிரிக்காவை வீழ்த்த வேண்டும். இந்தத் தொடரை வெல்ல வேண்டும்' என்பது மட்டுமே ஆஸ்திரேலியாவின் நோக்கம். இப்படிப்பட்டவர்கள் வெற்றிக்காக அடுத்து எந்த அளவுக்கும் செல்வார்கள். அதற்காக பாகிஸ்தானியர்கள் செய்ததை நியாயப்படுத்த வில்லை.

அதுவும் தவறுதான். ஆனால், ஆஸ்திரேலியர்கள் செய்திருப்பது மன்னிக்க முடியாத தவறு. ரிவர்ஸ் ஸ்விங் என்பது ஒரு கலை. அக்ரம் சொன்னதுபோல அது அறிவியல். அறிவியலில் புகுத்தப் படும் திருட்டுத்தனங்கள் மோசமான பின்விளைவை மட்டுமே கொடுக்கும். ஆஸ்திரேலிய கிரிக்கெட் அதற்கு மிகச் சிறந்த உதாரணம். ★



**3) பின்வரும் வாக்கியங்களில் பொருத்தமான இடங்களில் நிறுத்தற் குறிகளை எழுதுக**

**1.ஐயோ அம்மா அந்த வேளையில் பெரியக்காவினால் என்ன செய்யமுடியும்**

..........................................................................................................

**2.மாமன்னரே நீங்கள் நேற்று இரவு கண்டகனவு யாது?**

..........................................................................................................

**4) ஒவ்வொரு தமிழ் சொல்லுக்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை (ஆங்கில எழுத்துக்களில் ) எழுதுக**

1.ஞாயிற்றுக்கிழமை ..................................

2.கறுப்பு ..........................................

3.நண்பன் ..............................................

**5) பின்வரும் தாவர இலைகளில் மூன்று ஒத்த வடிவத்தை உடையன. வேறுபட்ட வடிவத்தை உடைய தாவர இலை எது?**

1.வெற்றிலை 2.மிளகு 3.வட்டக்கண்ணி 4.திப்பிலி

**6) தேசப்படங்களில் நதிகளை காட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் நியம நிறம் எது?**

1.கபிலம் 2.நீலம் 3.ஊதா 4.பச்சை

**7) பின்வரும் பொருள்களிடையே பித்தளைப் பாத்திரங்களைத் துப்புரவாக்கி மினுக்குவதற்கு மிகப் பொருத்தமானது எது?**

1.பழுப்புளி 2.தேங்காய்ப்பூ 3.தேயிலைச் சக்கை 4.சுட்டஉமி

**8) விளக்குத்திரி வழியாக விரைவில் மேல் நோக்கி செல்லும் எண்ணெய் வகை எது?**

1.தேங்காய்எண்ணெய் 2.கடுகுஎண்ணெய் 3.பசுநெய் 4.மண்ணெண்ணெய்

9) "ஆலையிலே சோலையிலே ஆலங்காடிச் சந்தையிலே

கிட்டிப் புள்ளும் பம்பரமும் கிறுகியடிக்க பாலாறு பாலாறு"

**மேலே தரப்பட்டுள்ள பாடல் எந்த விளையாட்டுடன் தொடர்புடையது**

1.எல்லே 2.கிட்டியடித்தல் 3.பம்பரமாட்டல் 4.நீச்சற்போட்டி

**10) ஒரு பேருந்தில் உள்ள ஆண் பயணிகளின் எண்ணிக்கை அதில் உள்ள பெண் பயணிகளின் எண்ணிக்கையின் மூன்று மடங்காகும். அடுத்த தரிப்பிடத்தில் 4 பெண்கள் பேருந்தில் ஏறியபின்னர் ஆண்களின் எண்ணிக்கையும் பெண்களின் எண்ணிக்கையும் சமமாகும். இப்போது பேருந்தில் உள்ள பயணிகளின் எண்ணிக்கை யாது?**

1.8 2.12 3.32

**11) 2007 ஆம் ஆண்டில் 365 நாட்களும் 2008 ஆம் ஆண்டில் 366 நாள்களும் உள்ளன. 2007ம் ஆண்டில் ஜனவரி 01 ஆந் திகதி திங்கட்கிழமையாகும். 2008 ஆம் ஆண்டில் ஜனவரி 01 ஆந் திகதி செவ்வாய்க்கிழமையாகும். இதற்கேற்ப 2009 ஜனவரி 01 ஆம் திகதி**

1.திங்கட்கிழமை 2.புதன்கிழமை 3.வியாழக்கிழமை





**கீழ்வரும் வினாக்கள் ஒவ்வொன்றும் பின்வரும் பந்தியிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதனுடன் தொடர்புடையது. வெற்றிடங்கள் ஒவ்வொன்றுக்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க**

நிமலன் இசையில் மிகுந்த விருப்பத்தைக் கொண்டுள்ளான். ஆகவே பெற்றோர்கள் அவனை அதற்காக 22)......................{1.பயிற்சியளிப்பதற்கு 2.உற்சாகப்படுத்துவதற்கு 3.வழிப்படுத்துவதற்கு} இசைவகுப்பிற்கு அனுப்பினர். நிமலன் மிகவும் விருப்பத்துடன் வகுப்பிற்குத் தவறாமல் சென்றுவயலின் 23)..................{1. பாட 2.வாசிக்க 3.அடிக்க}நன்றாக கற்றான். அவனுடைய பெற்றோர் தமது மகனைப் பற்ற மிகவும் 24)................. {1.மகிழ்ச்சி 2.கவலை 3.இரக்கம்}அடைந்தனர்.

- **கீழே தரப்பட்டுள்ள எழுத்து நிரைகள் ஒவ்வொன்றிலும் ஒருநல்ல இயல்பைக் காட்டும் ஒரு கூற்று மறைந்துள்ளது. அக்கூற்றின் எழுத்துக்களிடையே சேர்க்கப்பட்டுள்ள பொருத்தமற்ற எழுத்துக்களை நீக்கும் போதுகிடைக்கும் கருத்துள்ள கூற்றைப் புள்ளிக்கோட்டில் எழுதுக**

25) நாம் க பொ ப ய் ப் பே ங் ச த் மா ச் ட்டோ க ம்

..........................................................................................................

26) நாம் மு ங் தி ல ப யோ ச ர் க ஞ் ளை ம ந் தி க ப் க போசி ம்

..........................................................................................................

- **2009 ஆம் ஆண்டுக்கான ஜனவரி 01 ஆம் திகதி வியாழக்கிழமை ஆகும். இதற்கேற்ப கீழ் வரும் வினாக்களுக்கு விடைதருக.**

**27) 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் உள்ள புதன்கிழமைகளின் எண்ணிக்கையையும் வியாழக்கிழமைகளின் எண்ணிக்கையும் முறையே**

1.4,4 2.4,5 3.5,4 4.5,5

**28) 2009 ஆம் ஆண்டில் 365 நாள்கள் உள்ளன. அவ்வாண்டில் எத்தனை வியாழக்கிழமைகள் உள்ளன.**

1 .48 2. 50 3. 52 4. 53

- **பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிலும் உள்ள விபரங்களினால் குறிப்பிடப்படும் சொல்லை எழுதுக**

29) முதலெழுத்து சந்தியில் உண்டு. ஆனால் பந்தியில் இல்லை.
இரண்டாம் எழுத்து பக்தியில் உண்டு. ஆனால் பகுதியில் இல்லை
மூன்றாம் எழுத்து அகதியில் உண்டு. ஆனால் அகழியில் இல்லை

..........................................................................................................

**30) முதலெழுத்து தருமத்தில் உண்டு. ஆனால் கருமத்தில் இல்லை**
இரண்டாம் எழுத்துபவளத்தில் உண்டு. ஆனால் பவனத்தில் இல்லை
மூன்றாம் எழுத்துபருவத்தில் உண்டுஆனால் சருவத்தில் இல்லை
நான்காம் எழுத்துதிரவத்தில் உண்டுஆனால் அரவத்தில் இல்லை


..........................................................................................................

- △ △ + =24 எனவும் -5 = □ △

□ + △ = ⬠ எனவும் தரப்பட்டுள்ளது

31) □ **இற்கு பொருத்தமான பெறுமானம் யாது?**

1.12 2.17 3.29

32)  இதற்கு பொருத்தமான பெறுமானம் யாது?

1.17 2.29 3.58

33) தற்போது கண்ணனின் வயது 12 ஆகும். அவனுடைய வயது சகோதரனின் நான்கு மடங்காகும். கண்ணனின் வயது இன்னும் எத்தனை ஆண்டுகளில் சகோதரனின் வயதின் இரு மடங்காகும்.

1.6 2.10 3.24

34) 200 இன் அரைவாசியின் ¼ உடன் 5 ஐக் கூட்டும் போதுகிடைக்கும் எண் யாது?

1.25 2.30 3.35

35) 41 தொடக்கம் 45 வரையுள்ள எண்ணும் எண்களை எண்ணும் போது இலக்கம் 4 எழுதப்படும் தடவைகளின் எண்ணிக்கை?

1.4 2.5 3.6

36) முரளி ரவிக்கு முன்னரே விளையாட்டு மைதானத்திற்கு வந்த அதேவேளை ரவிக்குப் பின்னரே மைதானத்திலிருந்து வெளியேறினான். மோகன் ரவிக்குப் பின்னரே மைதானத்திற்கு வந்த அதேவேளை முரளிக்கு முன்னரே மைதானத்திலிருந்து வெளியேறினான். கூடுதலான நேரம் மைதானத்தில் இருந்தவர் யார்?

1.மோகன் 2.முரளி 3.ரவி

37) இரு பகுதிகளும் சமமாக இருக்கும் நிரையைத் தெரிவு செய்க


1.3 4 4 6 7 5 8 – 3 4 4 7 6 5 8

2.N M W A Y - M N W A Y

3.3 Y B 2 R –3 Y B 2 R

38) முழு உருவத்தின் பரப்பளவு நிழற்றப்பட்டுள்ள பகுதியின்

1.இரு மடங்காகும்
2.மூன்று மடங்காகும்
3.நான்கு மடங்காகும்



39) இன்று ஞாயிற்றுக்கிழமை நேற்றுமுன் தினத்துக்கும் (முந்தாநாள் ) கடந்த திங்கட்கிழமைக்கு மிடையே எத்தனை நாள்கள் இருந்தன?

1.1 2.2 3.3

40) குகனிடம் இரண்டு ரூபாய் நாணயங்களாகவும் ஐந்து ரூபாய் நாணயங்களாகவும் ரூ.23 உள்ளது. அதில் இருக்கத்தக்க இரண்டு ரூபாய் நாணயங்களின் எண்ணிக்கை யாது?

1.3 2.4 3.6





# கல்விக் கதிர் வெளியீடு

## புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்

தரம்-5

பகுதி - II

வினாத்தாள் 24

1) பின்வரும் கவிதைகளை வாசிக்க

செக்கச் சிவந்தசெங் கதிரோனும்
கிழக்கினில் வந்துவிட்டான் - புவி
மக்கள் கண்விழித்துக் கிளம்பிட
வானில் உதித்துவிட்டான்

கொக்கரக்கோவெனக் கோழியுங் கூவுது
கொக்கோடு பற்பலபுட்களும் மேவுது
சக்கரம் போலவே ஜகம் சுழன்றாடுது
தொங்கிநின்ற இருள் சொல்லாமல் ஓடுது

-பட்டுக்கோட்டைகல்யாணசுந்தரம்-

**இக் கவிதைகளைப் பயன்படுத்திக் கீழே கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

I. **இக்கவிதையில் வருணிக்கப்படும் காட்சி என்ன?**

........................................................................................

II. **பின்வரும் ஒவ்வொன்றினதும் கருத்தை எழுதுக**

a. செக்கச் சிவந்த..............................................................

b. கண்விழித்தல் ..................................................................

III. **இங்கு உள்ள ஓர் உவமானத்தை எழுதுக.**

........................................................................................

IV. **இக் கவிதைகளில் குறிப்பிடப்படும் இரு பறவைகளின் பெயர்களை எழுதுக**

........................................................................................

V. **‘நின்ற இருள் சொல்லாமல் ஓடுது’ என்பதன் மூலம் கவிஞர் வெளிப்படுத்த முயலும் கருத்து யாது?**

........................................................................................

2) **தடித்த எழுத்திலுள்ள சொற்றொடர்களின் கருத்தை எழுதுக**

1.தொழிலாளர் **அல்லும் பகலும்** வேலைசெய்கின்றனர்

........................................................................................

2.குழந்தைகள் **கள்ளங்கபடம்** அற்றவர்கள்

........................................................................................

# ரஷ்ய தூதரகங்களின் 126 அதிகாரிகள் 21 நாடுகளில் இருந்து வெளியேற்றம்



வொஷிங்டன்,மார்ச் 28

ரஷ்ய உளவாளியை விஷம் வைத்துக் கொல்ல முயன்ற விவகாரத்தில்அமெரிக்காவை தொடர்ந்து 21 நாடுகள் ரஷ்ய தூதரக அதிகாரிகளை வெளி யேற்ற உத்தரவிட்டுள்ளன.

முன்னாள் ரஷ்ய உளவாளி செர்கெய் ஸ்கிரியாலும், அவ ரது மகளும் இங்கிலாந்தில் நச்சுத் தாக்குதலுக்கு ஆளாயி னர். இந்த நடவடிக்கையில் ரஷ்ய அதிபர்விளாடிமிர் புடின் மீது குற்றச்சாட்டு முன்வைக் கப்பட்டது. அதற்கு ரஷ்யா மறுப்புத் தெரிவித்தது.

இருந்தும் இங்கிலாந்து தன் நாட்டில் இருந்து ரஷ்ய தூதரக அதிகாரிகள் 23 பேரை வெளி யேற்றியது. ரஷ்யாவுடனான ஒப்பந்தங்களை ரத்து செய் தது. இந்த நிலையில் அமெ ரிக்காவும், ரஷ்யா மீது நட வடிக்கை எடுத்துள்ளது.

அதிபர் டொனால்ட் ட்ரம்ப் 60ரஷ்ய தூதரக அதிகாரிகளை அமெரிக்காவில் இருந்து வெளியேற்றியுள்ளார். உளவுத் துறை அதிகாரிகளாக அறிவிக் கப்பட்டுள்ள அவர்களை 7 நாள் களுக்குள் நாட்டை விட்டு வெளியேற உத்தரவிட்டுள் ளார். மேலும் சியாட் நகரில் உள்ள ரஷ்ய துணைத் தூதர கத்தை மூடவும் உத்தரவிட் டுள்ளார்.

அமெரிக்கா மற்றும் இங்கி லாந்தை தொடர்ந்து உக்ரைன், கனடா, ஜேர்மனி, பிரான்ஸ், போலந்து, செக் குடியரசு, லுதுவேனியா, நெதர்லாந்து, டென்மார்க், இத்தாலி, அல் பேனியா, ஸ்பெயின், சுவீடன், கரோடியா, ருமேனியா, பின் லாந்து, எஸ்டோனியா, லாத் வியா ஆகிய 20 நாடுகளும் ரஷ்யத் தூதரக அதிகாரிகளை வெளியேற உத்தரவிட்டுள் ளன.

21 நாடுகளில் இருந்தும் ரஷ்ய தூதர்களில் மொத்தம் 126 அதிகாரிகள் வெளியேற் றப்பட்டுள்ளனர்.

## 3ஆண்டுகள் கடந்த ஏமன் போர்:

# ஹவுத்தி ஆதரவாளர்கள் பிரமாண்டமான பேரணி



சனா, மார்ச் 28

ஏமனில் உள்நாட்டுப் போர் மூன்று ஆண்டுகள் கடந்த நிலையில் ஹவுத்தி ஆதரவாளர்கள் பிரமாண்ட பேரணி யில் ஈடுபட்டனர்.

ஏமனின் தலைநகர் சனாவில் நேற்றுமுன்தினம் (திங்கட்கிழமை) சவுத்தி கிளர்ச்சியாளர்களின் ஆதர வாளர்கள் சுமார் 10ஆயிரம் பேர் பேரணி சென்றனர். பேரணியின் போது ஏமனின் கொடி மற்றும் ஹவுத்தி தலைவர் அப்துல் மாலிக்கின் புகைப் படங்களை ஏந்திச் சென்றனர்.

பேரணியில் பங்கு கொண்ட போராட் டக்காரர் ஒருவர் கூறும் போது, 'மூன்று வருட ஆக்கிரமிப்பு' என்றார்.

ஏமனில் கடந்த மூன்று ஆண்டு களாக நடைபெறும் போரின் கார ண மாகக் கடந்த பத்து வருடங்களில் இல் லாத மோசமான பஞ்சத்தை ஏமன் எதிர்கொள்ளப் போகிறது என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

தென்மேற்கு ஆசிய நாடான ஏமன் நாட்டில் சன்னி பிரிவைச் சேர்ந்த அதி பர் மன்சூர் ஹைதிக்கும் ஷியா பிரிவைச் சேர்ந்த ஹவுத்தி கிளர்ச்சிப் படைக்கும் இடையே கடந்த 2015 மார்ச் முதல் உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகி றது. இதில் அதிபர் மன்சூர் ஹைதிக்கு ஆதரவாகச் சவுதி அரேபியா செயற் படுகிறது. ஹவுத்தி கிளர்ச்சிப் படைக்கு ஈரான் ஆதரவு அளிக்கிறது.

சவுதி அரேபியா தொடர்ந்து ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் மீது குறிவைத்து ஏமனில் தாக்குதல் நடத்தி வருகிறது. ஈரான் கிளர்ச்சியாளர்களுக்கு ஆத ரவு அளித்து வருவது குறிப்பிடத்தக்கது.

# பாக். நிறுவனங்கள் மீது அமெ. பொருளாதாரத் தடை



அணு ஆயுத வர்த்தகத்தில் ஈடுபட்டு வருகின்றன எனக் கூறும் அமெரிக்காவின் தொழில் மற்றும் பாதுகாப்பு, வர்த்தக அமைப்பு பாகிஸ்தானின் 7 நிறுவனங்கள் மீதும் பொருளாதாரத் தடை விதித்துள்ளது.

உலகளாவிய பயங்கரவாத ஒழிப்பு நடவ டிக்கையில் அமெரிக்காவின் கூட்டாளியாகப் பாகிஸ்தான் உள்ளது. ஆனால், அந்த நாடு பயங்கரவாதிகளுக்கு எதிராக எந்தவொரு உறுதியான நடவடிக்கையும் எடுக்காமல், எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை ஊக்கு வித்து வருவதுடன், பயங்கரவாதிகளுக்கு ஆதரவுக் கரம் நீட்டி வருகிறது என அமெ ரிக்கா கருதுகிறது.

இதனால் அந்த நாட்டுக்கு வழங்கி வந்த 200 கோடி டொலர் நிதி உதவியை அமெ ரிக்கா அதிரடியாக நிறுத்திவிட்டது. மேலும் சொந்த மண்ணில் உள்ள பயங்கரவாதிகள் மீது பாகிஸ்தான் தீர்க்கமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென அமெரிக்கா தொடர்ந்து வலியுறுத்துகிறது. இதன் காரணமாக சமீப காலமாக இரு நாடுகளுக்கு இடையேயான உறவில் சிக்கல் நீடித்து வருகிறது.

இந்த நிலையில், அமெரிக்கா மற்றும் பிற நாடுகளில் செயற்பட்டு வரும் பாகிஸ்தானைச் சேர்ந்த 7 நிறுவனங்கள் அணு ஆயுத வர்த் தகத்தில் ஈடுபடுகின்றன என அமெரிக்காவுக்கு சந்தேகம் எழுந்தது. அதனைத் தொடர்ந்து, அமெரிக்காவின் தொழில் மற்றும் பாதுகாப்பு, வர்த்தக அமைப்பு அந்த 7 நிறுவனங்கள் மீதும் பொருளாதாரத் தடை விதித்துள்ளது

# வடகொரிய அதிபர் சீனாவுக்கு ரகசியப் பயணம்?



வடகொரிய அதிபர் கிம் ஜாங் உன் முதல் முறை யாக சீனாவுக்கு ரகசிய பயணம் மேற்கொண்டுள் ளார் எனத் தகவல்கள் வெளியாகி உள்ளன

வட கொரிய அதிபர் கிம் ஜாங் உன் தொடர்ந்து அணு ஆயுத சோதனை நடத்திவருவதற்கு பல நாடுகள் கண்டனம் தெரிவித்து வருகின்றன. அதன் காரணமாக அந்நாட்டின் மீது ஐக்கிய நாடுகள் சபை பொருளாதாரத் தடை விதித்தது.

இதேபோல், அமெரிக்காவின் எச்சரிக்கைகளை காதில் வாங்கிக் கொள்ளாத வடகொரியா அணு ஆயுத சோதனைகளை தொடர்ந்து நடத்தி வருகிறது.

இதற்கிடையே, தென்கொரியா முயற்சியால் அமெ ரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப்பை வடகொரியா அதி பர் கிம் ஜாங் உன் அடுத்த மாதம் சந்திக்க உள்ளார் என செய்திகள் வெளியாகின.

இந்த நிலையில், வடகொரிய அதிபர் கிம் ஜாங் உன் முதல் முறையாக சீனாவுக்கு இரகசியப் பயணம் மேற்கொண்டுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

இதுதொடர்பாக சீன செய்தி நிறுவனம் வெளியிட் டுள்ள செய்தியில் –

வடகொரியா அதிபர் கிம் ஜாங் உன் ரகசியமாக சீனா வந் தடைந்தார். கடந்த 2011ஆம் ஆண்டு வட கொரிய அதிப ராக பொறுப்பேற்ற அவர், நாட்டை விட்டு வெளியேறி எந்த நாட்டுக்கும் சென்றதில்லை. முதல் முறையாக சீனா வந் துள்ளார். அங்கு சீன அதிபர் மற்றும் பிரதமரை சந்திக்க வுள்ளார். அவரது வருகையை முன்னிட்டு பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. கிம் ஜாங் உன்னின் இந்த சீனப் பயணம் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப் படுகிறது என அந்த நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

# பொய்யான செய்தி வெளியிட்டால் சிறை; மலேசியாவில் சட்டப் பிரேரணை தாக்கல்

மலேசியாவில் பொய்யான செய்தி களை வெளியிடும் நபர்களுக்கு 10 ஆண்டுகளுக்கு மேல் சிறைத் தண் டனை விதிக்க வகை செய்யும் புதிய பிரேரணையை பிரதமர் நஜீப் ரசாக் தலைமையிலான அரசு பிரரேணை தாக்கல் செய்துள்ளது.

மலேசியாவில் பொய்யான செய்தி களை சமூக ஊடகங்கள் மற்றும் ஊடகங்கள் மூலம் வெளியிடுபவர் களுக்கு கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும் என புதிய பிரேரணை நாடாளுமன்றத்தில் நேற்றுத் தாக்கல் செய்யப்பட்டது. இதனை பிரதமர் நஜப் ரசாக் அரசு சார்பாக தாக்கல் செய்யப்பட்டது.

பொய்யான தகவல்களை வெளி யிடுபவர்களுக்கு 10 ஆண்டுகளுக்கு மேல் சிறை மற்றும் அபராதம் விதி க்கப்பட வேண்டும் என பிரேரணை யில் கூறப்பட்டுள்ளது.

இந்த சட்டத்தின் மூலம் மக்களின் பேச்சு சுதந்திரம் மற்றும் கருத்தை தெரிவிக்கும் உரிமை பாதுக்காக் கப்படும்.

பொய்யான செய்தி என்பது செய்தி, தகவல், அறிக்கை என எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம். அது வீடியோ மற்றும் ஓடியோவாக இருக்கலாம்.

வெளிநாடுகளைச் சேர்ந்தவர்க ளுக்கும் இந்தச் சட்டம் பொருந்தும். அவர்கள் வெளியிடும் செய்தி மலே சியர்களை பாதிக்கும் எனில் அவர் களும் இந்தச் சட்டத்தின்படி தண்டிக் கப்படுவர்.



## சசிகலாவுக்கு திடீர் உடல்நலக்குறைவு

சசிகலாவுக்கு திடீர் உடல்நலக்குறைவு ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

கணவர் நடராஜனின் இறுதிச் சடங்கிற்காக பரோல் மூலம் கடந்த 20ஆம் திகதி, சிறையிலிருந்து வந்த சசிகலா தஞ்சாவூரில் தங்கியிருக்கிறார்.

பரிசுத்தம் நகரில் உள்ள கணவருக்குச் சொந்தமான வீட்டில் கடந்த ஆறு நாள்களுக்கு மேலாகத் தங்கியிருக்கிறார். அவரைச் சந்திக்க தினமும் பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் மற்றும் ஆதரவாளர்கள் வருகின்றனர். காலை மாலை, வருபவர்களைச் சந்திப்பதை.வழக்கமாகக் கொண்டுள்ளார்.

இந்த நிலையில், இவருக்கு திடீர் உடல்நலக் குறைவு ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது (ப)

## மே 12 இல் கர்நாடகாவில் சட்டசபைக்கான தேர்தல்

### தலைமை தேர்தல் ஆணையர் அறிவிப்பு

புதுடில்லி,மார்ச் 28

கர்நாடக மாநிலத்தில் வரும் மே மாதம் 12ஆம் திகதி சட்டசபைத் தேர்தல் நடைபெறும் என தலைமைத் தேர்தல் ஆணையர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக இந்திய தலைமை தேர்தல் ஆணையர் ஓம்பிரகாஷ் ராவத் கூறியவை வருமாறு:-

கர்நாடக மாநிலத்தில் தற்போது நடைபெற்று வரும் காங்கிரஸ் அரசின் பதவிக்காலம் மே 28ஆம் திகதியுடன் நிறைவடைவதால் தேர்தல் நடத்தப்படுகிறது.

கர்நாடக மாநில சட்டப்பேரவைக்கு மே மாதம் 12ஆம் திகதி தேர்தல் நடைபெற உள்ளது. வேட்பு மனுத் தாக்கல் ஏப்ரல் 17ஆம் திகதி தொடங்குகிறது. வேட்பு மனுக்கள் தாக்கல் செய்ய ஏப்ரல் 24ஆம் திகதி கடைசி நாள். மே 12ஆம் திகதி ஒரே கட்டமாக தேர்தல் நடத்தப்படும். 15ஆம் திகதி வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும்.

புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் அடையாள அட்டைகள் 99 வீதம் தயாராக உள்ளன. இந்தத் தேர்தலுக்காக மாநிலம் முழுவதும் 56ஆயிரத்து 696 வாக்குச்சாவடிகள் அமைக்கப்படும் என்று தெரிவித்துள்ளார். (ப)



### சொத்துக்களை பிரிப்பதில் மோதல்;

## பரோல் முடியும் முன்பே சிறைக்குச் செல்லும் சசி



தனது கணவர் மறைவால் சிறையிலிருந்து வெளியே வந்த சசிகலா, சொத்துக்காக உறவினர்கள் போடும் சண்டை கடும் அதிருப்தியை ஏற்படுத்தியமையால் பரோல் முடியும் முன்னர் சிறை செல்லவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

புதிய பார்வை ஆசிரியரும் சசிகலாவின் கணவருமான நடராஜன் இறந்த பின்னர், அவரின் சொத்துக்களை பிரிப்பதில் நடராஜன் உறவினர்களுக்கு இடையே கடும் போட்டி ஏற்பட்டுள்ளது எனக் கூறப்படுகிறது.

சிறையில் இருந்து 15 நாள்கள் பரோலில் வெளிவந்த சசிகலா தற்போது தஞ்சையில் உள்ள நடராஜனின் பூர்வீக வீட்டில் தங்கியிருக்கிறார். அங்கிருந்து தனது கணவருக்கு செய்ய வேண்டிய சடங்குகளை அவர் முன்னின்று நடத்தி வருகிறார்.

இந்த நிலையில், நடராஜனுக்கு தமிழகம் உள்ளிட்ட பல இடங்களில் பல சொத்துக்கள் இருக்கின்றன. அவைகளை பிரிப்பதில் நடராஜனின் உடன் பிறந்த வர்களுக்கும், சசிகலா தரப்பினருக்கும் ஏற்பட்ட போட்டி மோதலாக மாறியுள்ளது.

இதனால் எரிச்சல் அடைந்த சசிகலா பரோல் முடிவதற்கு முன்னரே சிறைக்குச் சென்றுவிடும் முடிவில் உள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. (ப)

## காவிரி மேலாண்மை சபை அமைக்கத் தடையில்லை

### தலைமை தேர்தல் ஆணையர் விளக்கம்



புதுடில்லி, மார்ச் 28

காவிரி மேலாண்மை சபை அமைப்பதற்கும் கர்நாடக சட்டமன்றத் தேர்தலுக்கும் தொடர்பு இல்லை என தலைமை தேர்தல் ஆணையர் தெரிவித்துள்ளார்.

கர்நாடக சட்டப்பேரவை தேர்தல் மே 12ஆம் திகதி நடைபெறும் என தலைமை தேர்தல் ஆணையர் ஓம்பிரகாஷ் ராவத் நேற்று அறிவித்துள்ளார். தேர்தல் நடத்தை விதிமுறைகள் உடனடியாக அமுலுக்கு வந்திருக்கின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

அப்போது, தேர்தல் நடத்தை விதிகள் அமுலில் இருப்பதால் காவிரி மேலாண்மை சபை அமைப்பதில் சிக்கல் ஏற்படுமா? என நிருபர்கள் கேள்வி எழுப்பினர்.

இதற்குப் பதிலளித்த தலைமை தேர்தல் ஆணையர், கர்நாடக சட்டமன்றத் தேர்தலுக்கும் காவிரி மேலாண்மை சபை அமைப்பதற்கும் தொடர்பு இல்லை என்றும், காவிரி மேலாண்மை சபை அமைக்கத் தடையில்லை என்றும் தெரிவித்தார்.

தேர்தல் நடத்தை விதிகள் நீதிமன்றத் தீர்ப்புக்கு பொருந்தாது. எனவே, உச்ச நீதிமன்ற தீர்ப்பை அமுல்படுத்துவதில் தேர்தல் ஆணையம் குறுக்கிடாது.

காவிரி மேலாண்மை சபை விவகாரத்தில் தேர்தல் ஆணையர் தெளிவாக கூறியிருக்கின்றமையால் இனி மத்திய அரசின் கையில்தான் முடிவு உள்ளது. (ப)

### மாணவி பாலியல் துஷ்பிரயோகம்:

## வாலிபர்களைச் செருப்பால் அடிக்க வீதி வீதியாக இழுத்துச் சென்ற பொலிஸ்





போபால்,மார்ச் 28

மத்தியப்பிரதேச மாநிலத்தில் மாணவியை பாலியல் பலாத்காரம் செய்த வாலிபர்களை செருப்பால் அடித்து தெருத்தெருவாக கொண்டு சென்ற சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மத்தியப்பிரதேச மாநிலம் தலைநகரான போபாலில் தவறு செய்த குற்றவாளிகளுக்கு பொலிஸ் அளித்த தண்டனை அனைவரிடமும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. போபாலில் வசிக்கும் கல்லூரி மாணவியை அவருடன்படிக்கும்சக மாணவர்தனது நண்பர்களுடன் இணைந்து பாலியல் பலாத்காரம் செய்துள்ளார். கடந்த சனிக்கிழமை இரவு நடைபெற்ற இந்தச் சம்பவத்தை அடுத்து மாணவி அடுத்த நாள் பொலிஸில் புகார் அளித்தார். புகார் அளிக்கப்பட்ட ஒரு மணி நேரத்தில் குற்றவாளிகள் கைது செய்யப்பட்டனர்.

பெண்ணை மிரட்டி கூட்டுப் பாலியல் பலாத்காரம் செய்த அவர்களைக்கடந்தஞாயிற்றுக்கிழமை பொலிஸார் தெருத் தெருவாக அழைத்துச் சென்றனர். குற்றவாளிகளை தெருக்களில் நின்ற பெண்கள் அனைவரும் செருப்பால் அடித்தனர். மேலும், கையில் கிடைத்த பொருள்கள் கொண்டு கடுமையாகத் தாக்கினர். அடித்து அவர்களைத் தோப்புக்கரணம் போட வைத்தனர். இது பொது மக்களிடையே பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

குற்றவாளிகளுக்கு இது போன்ற தண்டனைகள் அளிப்பதன் மூலம் பெண்களுக்கு நம்பிக்கை அதிகமாகும். அவர்கள் குற்றவாளிகளுக்கு எதிராக தயங்காமல் புகார் அளிப்பர். மேலும், குற்றம் செய்பவர்களுக்கு இது அச்சத்தை ஏற்படுத்தும். இந்த நடவடிக்கை பெண்களுக்கு எதிராக நடைபெறும் குற்றங்களை குறைப்பதற்காக எடுக்கப்பட்டு வருகிறது' என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ப)

## மியாமி ஓபன் டென்னிஸ்:

# 4ஆவது சுற்றில் வீனஸ் வில்லியம்ஸ்



மியாமி ஓபன் டென்னிஸ் போட்டியில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் முன்னாள் வீராங்கனையான அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸ் 4ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

மியாமி ஓபன் சர்வதேச டென்னிஸ் போட்டி அமெரிக்காவில் நடந்து வருகிறது. இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவில் 3ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் முன்னாள் வீராங்கனையும், தற்போது உலக தரவரிசையில் 8ஆவது இடத்தில் இருப்பவருமான அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸ், நெதர்லாந்து வீராங்கனை கிகி பெர்டென்ஸ்ஸைச் சந்தித்தார்.

விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் முதல் செட்டில் 5:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்ற வீனஸ் வில்லியம்ஸ் தொடர்ச்சியாக அடுத்த 7 போட்டிகளில் தோல்வி கண்டு முதல் செட்டை இழந்தார். அடுத்த செட்டை எளிதாகக் கைப்பற்றிய வீனஸ், கடைசி செட்டில் 1:4 என்ற கணக்கில் சரிவில் இருந்து மீண்டு வந்து அந்த செட்டை சொந்தமாக்கினார். முடிவில் 37 வயதான வீனஸ் வில்லியம்ஸ் 5:6, 6:3, 7:5 என்ற செட் கணக்கில் கிகி பெர்டென்ஸ்ஸை வீழ்த்தி 4ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

## பந்தை சேதப்படுத்திய விவகாரம்:

# ஆஸ்திரேலிய பயிற்சியாளர் லீமேன் பதவி விலகுகிறார்



தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்கள் பந்து சேதப்படுத்திய விவகாரத்தில் அந்த அணியின் பயிற்சியாளர் டேரான் லீமேன் பதவி விலகவுள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் தென்னாபிரிக்கா சுற்றுப்பயணம் மிகுந்த சர்ச்சையை ஏற்படுத்தி இருக்கிறது. வீரர்கள் அறையில் இரு நாட்டு வீரர்கள் மோதல், களத்தில் மோதல், ரசிகர்களுடன் வாக்குவாதம் என பல சர்ச்சைகளில் ஆஸ்திரேலியா சிக்கி இருந்தது.

அத்தோடு புதிதாக பந்தை சேதப்படுத்திய பிரச்சினையில் சிக்கியது அவமானத்தை ஏற்படுத்தியது. கப்டன் ஸ்டீவன் ஸ்மித்தின் உதவியுடன் புதுமுக வீரர் பான்கிராப்ட் பந்தை சேதப்படுத்தினார். இது வீடியோவில் தெளிவாகத் தெரிந்தது.

பந்தை சேதப்படுத்தியதை இருவரும் பகிரங்கமாக ஒப்புக்கொண்டனர். இதனால் ஆஸ்திரேலிய பிரதமர் மற்றும் அந்நாட்டு கிரிக்கெட் சபை கடும் அதிர்ச்சி அடைந்துள்ளது.

பந்தைச் சேதப்படுத்திய விவகாரத்தில் ஸ்டீவன் ஸ்மித்தின் கப்டன் பதவியும், வோர்னரின் துணை கப்டன் பதவியும் பறிக்கப்பட்டன. சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸில் ஸ்மித்துக்கு ஒரு டெஸ்டில் விளையாட தடை விதித்தது. அத்தோடு 100 வீத அபராதமும் விதிக்கப்பட்டது. பான்கிராப்ட்டுக்கு 75 வீத அபராதம் விதிக்கப்பட்டது.

இந்த நிலையில் இந்த சர்ச்சை தொடர்பாக ஆஸ்திரேலிய பயிற்சியாளர் லீமேனும் பதவி விலகுகிறார். இதை இங்கிலாந்து பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

ஆஸ்திரேலியா – தென்னாப்பிரிக்கா மோதும் 4ஆவது டெஸ்ட் போட்டி வெள்ளிக்கிழமை தொடங்குகிறது. இந்த டெஸ்ட் போட்டிக்கு முன்பு லீமேன் பயிற்சியாளர் பதவியை ராஜினாமாச் செய்கிறார் என்று அந்தப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

# ஸ்மித்தை மன்னியுங்கள்



## கிளார்க் வேண்டுகோள்

பந்து சேதப்படுத்திய விவகாரத்தில் ஸ்டீவ் ஸ்மித்தை மன்னிக்க வேண்டும் என்று அந்நாட்டு முன்னாள் கப்டன் மைக்கேல் கிளார்க் வலியுறுத்தி உள்ளார்.

பந்தை சேதப்படுத்திய விவகாரம் தொடர்பாக விசாரணை நடத்துவதற்காக ஆஸ்திரேலியா கிரிக்கெட் சபைத் தலைமை நிர்வாகி ஜேம்ஸ் சதர்லேண்ட், தென்னாபிரிக்க புறப்பட்டார். அவர் நாளை சம்பந்தப்பட்ட வீரர்கள், பயிற்சியாளர் லீமேன் ஆகியோரிடம் விசாரணை மேற்கொள்வார்.

இந்த விசாரணைக்கு பிறகே ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபையின் நடவடிக்கை இருக்கும். இருவருக்கும் ஆயுட்காலத் தடை அல்லது நீண்ட தடை விதிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன் காரணமாக ஸ்மித்தும், வோர்னரும் ஐ.பி.எல். போட்டியில் ஆட முடியுமா? என்பது சந்தேகமே.

இந்த நிலையில் ஸ்டீவன் ஸ்மித்தை மன்னிக்க வேண்டும் என்று அந்நாட்டு முன்னாள் கப்டன் கிளார்க் வலியுறுத்தியுள்ளார். இது தொடர்பாக அவர் கூறியவை வருமாறு:–

பந்தை சேதப்படுத்திய விவகாரத்தில் ஸ்டீவன் ஸ்மித்துக்காக வருந்துகிறேன். அவர் செய்தமை எந்த விதத்திலும் நியாயமானது கிடையாது. கடுமையான விளைவுகளை சம்பந்தப்பட்ட வீரர்கள் எதிர்கொள்ள வேண்டும் என்பதில் எந்தவித மாற்று கருத்தும் இல்லை.

அவர்களை குற்றம் சாட்டியமை போதுமானது. அவர்கள் செய்த தவறை மன்னிக்க வேண்டும். இதுபோன்ற தவறுகள் இனி நடக்கக் கூடாது. நேர்மையான கிரிக்கெட்டை வரும் காலங்களில் நாம் கொண்டு வருவதற்கான பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

# தேசியக் கொடியை ஏந்தும் பளுதூக்கல் வீரர்




ஆஸ்திரேலியாவின் கோல்ட் கோஸ்ட் நகரில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 4ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள 21ஆவது பொதுநலவாய விளையாட்டு விழாவில் தொடக்க விழாவின்போது இலங்கை சார்பில் முன்னணி பளுதூக்கல் வீரரான சிந்தன கீதால் விதானகே தேசியக் கொடியை ஏந்திச் செல்லவுள்ளார் எனத் தேசிய ஒலிம்பிக் குழு அறிவித்துள்ளது.

13 வகையான போட்டிகளுக்காக இலங்கை சார்பில் 80 வீரர்களும், பயிற்றுவிப்பாளர்கள் உள்ளிட்ட 40 அதிகாரிகள் உள்ளடங்கலாக சுமார் 150 பேர் இம்முறை போட்டித் தொடரில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தவுள்ளனர்.

இதேவேளை, இலங்கை பளுதூக்கல் அணியின் அனுபவமிக்க வீரரும், பொதுநலவாய நாடுகள் விளையாட்டு விழாவில் தங்கப் பதக்கம் வென்றவருமான சின்தன கீதால் விதானகே, இம்முறை பொதுநலவாய நாடுகளின் விளையாட்டு விழாவின் ஆரம்ப நிகழ்வுகளில் இலங்கை அணியின் அணி வகுப்புக்கு தலைமை தாங்குகிறார்.

# தெற்காசிய கனிஷ்ட மெய்வன்மை சம்பியன்ஷிப் இம்முறை இலங்கையில்




தெற்காசிய கனிஷ்ட மெய்வன்மை சம்பியன்ஷிப் போட்டிகள் இம்முறை இலங்கையில் நடத்தப்படவுள்ளன.

அந்த வகையில் மூன்றாவது தெற்காசிய கனிஷ்ட மெய்வன்மை சம்பியன் ஷிப் தொடர் எதிர்வரும் மே மாதம் 5 மற்றும் 6ஆம் திகதிகளில் கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது என இலங்கை மெய்வன்மை சம்மேளனம் உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளது.

தெற்காசிய கனிஷ்ட விளையாட்டுப் போட்டிகள் கடந்த 2007ஆம் ஆண்டு முதன்முதலாக இலங்கையில் நடத்தப்பட்டன.

அதனையடுத்து இறுதியாக 2013ஆம் ஆண்டு இந்தியாவின் ராஞ்சியிலும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

இதனையடுத்து போட்டிகளை நடத்துவதற்கான வாய்ப்பு இலங்கைக்கு வழங்கப்பட்ட போதிலும் நிதிப் பற்றாக்குறை, போதிய மைதான வசதிகள் காணப்படாமை உள்ளிட்ட காரணங்களால் அத்தொடரை நடத்த முடியாமல் போனது.

எனினும், கடந்த வருடம் குறித்த போட்டித் தொடரை இந்தியாவில் நடத்துவதற்கு தெற்காசிய ஒலிம்பிக் சம்மேளனம் நடவடிக்கை எடுத்திருந்த போதிலும் பல்வேறு காரணங்களால் இந்தியா விலகிக் கொண்டது.

இந்த நிலையில், சுமார் 4 வருடங்களாக நடைபெறாமல் இழுபறி நிலையில் இருந்த தெற்காசிய கனிஷ்ட மெய்வன்மை சம்பியன் ஷிப் தொடர் எதிர்வரும் மே மாதம் 5 மற்றும் 6ஆம் திகதிகளில் சுகததாஸ விளையாட்டரங்கில் நடத்துவதற்கு அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir



## தமிழ்த்...



(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அரசியல்,சமூகம் மற்றும் சுற்றுச்சூழல் செயற்பாட்டு இயக்கமாகத் தொழிற்பட்டுவரும் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைமைப் பணிமனை யாழ்ப்பாணத்தில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை திறந்து வைக்கப்பட்டது. அரசடி வீதி, கந்தர்மடத்தில் அமைந்துள்ள இந்தப் பணிமனையை வடக்கு முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்துள்ளார்.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவரும் வடக்கு மாகாணசபை உறுப்பினருமான பொ.ஐங்கரநேசனின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் பா.கஜதீபன்,ம.தியாகராஜா ஆகியோரும் பொதுமக்களும் கலந்து கொண்டனர். (ஐ)

## ஈ.பி.டி.பியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பருத்தித்துறை நகரசபை ஈ.பி.டி.பி. வழங்கிய ஆதரவால் கூட்டமைப்பு வசமானது. அதன் தலைவராக கூட்டமைப்பின் யோ.இருதயராசாவும், பிரதித் தலைவராக மதினி நெல்சனும் தெரிவு செய்யப்பட்டனர்.

அதேபோன்று, ஈ.பி.டி.பி. மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகியவற்றின் ஆதரவுடன் வல்வெட்டித்துறை நகர சபையையும்தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு நேற்றுக் கைப்பற்றியது. அதன் தலைவராகக் கோணலிங்கம் கருணானந்தராஜாவும், பிரதித் தலைவராக ஆறுமுகம் ஞானேந்திராவும் தெரிவாகினர்.

ஊள்ளூராட்சி மன்றங்களுக்கான தலைவர் தெரிவுகள் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டநிலையில், பருத்தித்துறை நகர சபைக்கான தெரிவு நேற்று இடம்பெற்றது. இதன்போது கூட்டமைப்பு யோ.இருதயராசாவைத் தலைவராகப் பிரேரித்திருந்தது. அதேபோன்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பாலசுப்பிரமணியத்தை பிரேரித்தது.

பருத்தித்துறை நகர சபையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி 06 ஆசனங்களையும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 05 ஆசனங்களையும், ஈ.பி.டி.பி. 02 ஆசனங்களையும் பெற்றிருந்தன. அதேபோன்று தமிழர் விடுதலைக் கூட்டணியானது 01 ஆசனத்தையும், சுயேச்சை குழு 01 ஆசனத்தையும் வென்றிருந்தன.

இவ்வாறான நிலையில் நேற்று இடம்பெற்ற தலைவர் தெரிவின்போது கூட்டமைப்புக்கு ஈ.பி.டி.பியின் இரு உறுப்பினர்களும் ஆதரவாக வாக்களித்தனர். தமிழர் விடுதலைக் கூட்டணி, சுயேச்சைக் குழு உறுப்பினர்கள் இருவர் நடுநிலைமை வகித்தனர்.

இதற்கமையகூட்டமைப்பின் இருதயராசாவுக்கு 07 வாக்குகளும், முன்னணியின் பாலசுப்பிரமணியத்துக்கு 06 வாக்குகளும் கிடைத்தன. இதனையடுத்து, சபையின் ஆட்சி அதிகாரத்தைக் கூட்டமைப்பு கைப்பற்றியது. தலைவராக இருதயராசாவும், பிரதித் தலைவராக மதினி நெல்சனும் தெரிவு செய்யப்பட்டனர்.

இதேவேளை, வல்வெட்டித்துறை நகரசபையிலும் கூட்டமைப்பின் ஆட்சி நிலைநாட்டப்பட்டது. அங்கு தலைவராகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோணலிங்கம் கருணானந்த ராஜாவைப் பிரேரித்தது. அதேவேளை, மீன் சின்னத்தில் போட்டியிட்ட சுயேச்சைக் குழு சபாரட்ணம் செல்வேந்திரனைப் பிரேரித்தது.

இதனை அடுத்துப் பகிரங்க வாக்கெடுப்பு நடத்தப்பட்டபோது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 6 உறுப்பினர்களும். ஈ.பி.டி. பியின் இரண்டு உறுப்பினர்களும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஓர் உறுப்பினரும் கோணலிங்கம் கருணானந்த ராஜாவுக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் இரு உறுப்பினர்களும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஓர் உறுப்பினரும் நடுநிலைமை வகித்தனர். மீன் சின்னத்தில் போட்டியிட்ட சுயேச்சைக்குழுவின் 4 உறுப்பினர்கள் சபாரட்ணம் செல்வேந்திரனுக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

இதனால் 9 உறுப்பினர்களின் ஆதரவுடன் கோணலிங்கம் கருணானந்தராஜா தலைவராகத் தெரிவானர். உப தலைவராகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆறுமுகம் ஞானேந்திராவைப் பிரேரித்தது. ஏனைய கட்சிகள் எவரையும் பிரேரிக்காத நிலையில் ஆறுமுகம் ஞானேந்திரா உப தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இதனை அடுத்து வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர் கோணலிங்கம் கருணானந்த ராஜா சபையை ஒத்திவைத்தார்.

இதேவேளை, சபை அமர்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினரான கந்தசாமி சதீஸ் பங்கேற்றிருக்கவில்லை. (ஐ-7)

## மே 7ஆம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நடத்த அமைச்சரவையில் முடிவெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மே முதலாம் திகதி வெசாக் நிகழ்வுகள் இடம்பெறவுள்ள நிலையிலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

பௌத்த மகா சங்கத்தின் கோரிக்கையை அடுத்தே அரசு இந்தத் தீர்மானத்துக்கு வந்துள்ளது. இதேவேளை, மே முதலாம் திகதியே உலகத் தொழிலாளர் தினம் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கொடிகாமத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தெரிவித்தனர்.

கொடிகாமம் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலொன்றின் அடிப்படையில் பழைய வாய்க்கால் என்னும் பகுதியில் இருந்தே இந்தக் குண்டுகள் நேற்று மீட்கப்பட்டன.

120 எம்.எம்.நீளமுடைய 12 மோட்டார் குண்டுகளும் அவற்றுக்கு பயன்படுத்தப்படும் பியூஸ்களுமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன. பொலிஸார் தமக்குக் கிடைத்த தகவலையடுத்து பொலிஸ் விஷேட அதிரடிப்படையினருக்கு அறிவித்து இந்தக் குண்டுகள் மீட்கப்பட்டன.

குண்டுகள் மீட்கப்பட்ட பகுதியில் முன்னர் இராணுவ முகாம் அமைந்திருந்ததாகவும், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தாம் மேற்கொண்டு வருகின்றனர் எனவும் கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-7)

## ஈ.பி.டி.பி. செய்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொள்ளவேண்டும். இந்த விசாரணைகளுக்கு வடக்கு மாகாண சபை முழுமையான ஆதரவை வழங்கும்.

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

## ஈ.பி.டி.பி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பங்கேற்றார்.

இதன்போது, உள்ளூராட்சி மன்றங்களில் ஈ.பி.டி.பியுடன் இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சியமைத்து வருகின்றமை தொடர்பில் ஊடகவியலாளர்கள் முதலமைச்சரிடம் கேள்வி எழுப்பினர். இதற்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் ஈ.பி.டி.பியுடன் தாங்கள் பேரம் பேசவில்லை என்றும், ஈ.பி.டி.பி. தமக்கு நேரடியான ஆதரவு தரவில்லை என்றும் ஊடகங்களுக்குக் கூறியுள்ளார். ஆனால் என்னதான் இருந்தாலும் ஒருமித்து நியமனங்கள் நடைபெறவில்லை என்று தெரிகின்றது.

ஆகவே பதவி வகிக்கின்றவர்கள் ஆட்சியைச் சரியான முறையில் கொண்டு நடத்த வேண்டும். சாவகச்சேரி நகர சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு, ஈ.பி.டி.பி. ஆதரவு வழங்கியது என்பது தொடர்பில் சரியாக நான் அறியவில்லை.

என்னவாக இருந்தாலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஈ.பி.டி.பி. கட்சியின் ஆதரவுடன் உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சியை அமைத்திருந்தால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கொள்கைகளை கைவிட்டு விட்டது, சுயநலங்கள்தான் எமக்கு முக்கியம் என்ற கருத்தை ஏற்படுத்தும். இதுதான் என்னுடைய அவதானிப்பாக உள்ளது – என்றார். (ஐ-7)

யாழ்ப்பாணம் கந்தர்மடத்தில் நேற்று நடந்த தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் அலுவலகத் திறப்பு விழாவின் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே முதலமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஈ.பி.டி.பி. கடந்தகாலங்களில் யாழ்.மாநகர சபையை ஆட்சி செய்தபோது புரிந்த ஊழல் தொடர்பில் தற்போது ஆட்சிப் பீடம் ஏறியுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் விசாரணை செய்ய வேண்டும். அதில் உள்ள உண்மைகளைக் கண்டறிய வேண்டும்.

இது தொடர்பில் வடக்கு மாகாண சபையும் தனது பங்குக்கு விசாரணைகளை மேற்கொள்ளும். இந்த விடயத்தை விசாரணை செய்ய ஏற்கனவே வடக்கு மாகாண சபையினால் விசாரணைக் குழு ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. அந்தக் குழு நடத்திய விசாரணைகளில், ஈ.பி.டி.பி கட்சியின் ஆட்சியில் யாழ்.மாநகர சபை நிர்வாகத்தில் ஊழல்கள் நடைபெற்று உள்ளன என்பது கண்டறியப்பட்டது.

எனவே தற்போது ஆட்சியில் உள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஈ.பி.டி.பி. கடந்த காலத்தில் செய்த ஊழல் தொடர்பில் முறையான விசாரணை செய்ய வேண்டும் – என்றார். (ஐ-7)

## படைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அந்தப் பகுதியில் இடம்பெற்ற சட்டவிரோத மரக்கடத்தல் நடவடிக்கையைத் தடுத்து நிறுத்த இராணுவத்தினர் முற்பட்டுள்ளனர். இதன்போது இராணுவச் சிப்பாய் ஒருவர் வைத்திருந்த ஏகே-47 துப்பாக்கியை மரம் கடத்த முற்பட்ட நபர் ஒருவர் பறித்துக்கொண்டு தப்பியோடியுள்ளார் என இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

இந்த நபரை வலைவீசித் தேடும் நடவடிக்கையில் பொலிஸாரும் இராணுவத்தினரும் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

## தொண்டராசிரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விடுத்தார்.

வடக்கு மாகாண சபையின் 119 ஆவது அமர்வு நேற்றுக் கைதடி பேரவைச் செயலகத்தில் நடந்தது. இதன்போது வடக்கு தொண்டராசிரியர்கள் மாகாண சபையை முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்தினர். இதன்போது அவைத் தலைவர் உள்ளிட்ட அமைச்சர்கள், உறுப்பினர்கள் அவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதன் பின்னர் தொண்டராசிரியர்களின் நியமனம் தொடர்பில் அவைத் தலைவர் சபையின் கவனத்துக்குக் கொண்டு வந்தார். தொண்டர் ஆசிரியர்களுக்கு இரு பிரிவுகளாக நியமனம் வழங்குவதால் தங்களுக்கான நியமனம் கிடைக்காமல் போய்விடுமோ என்று அவர்களில் ஒரு பகுதியினருக்கு அச்சம் ஏற்பட்டுள்ளது. அதன் காரணமாகவே அவர்கள் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர் என அவைத்தலைவர் சபையில் சுட்டிக்காட்டினார்.

676 தொண்டர் ஆசிரியர்களுக்கும் நியமனங்கள் வழங்குவதற்கான அமைச்சரவைப் பத்திரம் வெளியிடப்பட்டுள்ளது. ஆயினும், நியமனங்கள் மட்டுமே இரண்டு பிரிவுகளாக வழங்கப்படவுள்ளன. இதனை அவர்கள் விளங்கிக்கொள்ள வேண்டும் என்றும் அவைத் தலைவர் கேட்டுக்கொண்டார்.

வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்துத் தொண்டர் ஆசிரியர்களுக்கும் நியமனம் வழங்கப்படும். இது தொடர்பாக அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுத்து வருகின்றது. எனவே வீணான மனப்பயத்தை விடுத்து நம்பிக்கையுடன் அவர்கள் இருக்கவேண்டும் என்று முதலமைச்சர் விக்னேஸ்வரன் குறிப்பிட்டார்.

அனைவருக்கும் நியமனம் வழங்கப்படுமென முதலமைச்சரே கூறியுள்ளதால் அதற்கான நடவடிக்கைகளைக் கல்வி அமைச்சரும் முதலமைச்சரும் எடுத்து வருகின்றனர். ஆகவே தொண்டர் ஆசிரியர்கள் அச்சப்படாது பொறுத்திருக்க வேண்டுமென்றும் அவைத் தலைவர் கூறினார்.

இதன்போது எழுந்த கல்வி அமைச்சர் சர்வேஸ்வரன் நீண்டதொரு விளக்கத்தைச் சபைக்கு வழங்கினார். .

மாகாண அமைச்சுக்கும் மத்திய கல்வி அமைச்சருக்கும் இடையில் எதிர்வரும் 2 ஆம் திகதி விசேட சந்திப்பு இடம்பெறவுள்ளது. அதில் நிச்சயமாக நல்ல முடிவு எட்டப்படுமென எதிர்பார்க்கின்றோம். எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் நேர்முகத்தேர்வு நடத்த முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. எனவே தொண்டர் ஆசிரியர்கள் நம்பிக்கையுடன் இருக்கவேண்டும் என்றார் கல்வி அமைச்சர் சர்வேஸ்வரன்.

தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதால் அவர்கள் போராட்டத்தைக் கைவிட்டு கொஞ்சக் காலம் பொறுமையாக இருக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்ட அவைத் தலைவர், மாகாண சபை முன்னெடுக்கும் நடவடிக்கைகளை அவர்கள் புரிந்து செயற்பட வேண்டும் என்றும் தெரிவித்தார். (ஐ-7)

## ரணிலைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து வெளியிடும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

கடந்த உள்ளூராட்சிச் சபைத் தேர்தலின் மூலம் மக்கள், நல்லாட்சி அரசுக்கு முக்கிய படிப்பினைகளைத் தந்துள்ளார்கள். அதன்படி நடந்து கொள்ள வேண்டும் என்ற கட்டாயம் இப்போது அரசுக்கு ஏற்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளையும், வாழ்வாதாரச் சிக்கல்களையும் தீர்த்து வைப்பதோடு மட்டுமல்லாது வடக்கு மக்களின் வேதனையை உணர்ந்து அதற்கும் தீர்வுகளை வகுக்க வேண்டும் என்பது அரசின் தேவையாகும்.

எனவே நல்லாட்சி அரசு கடந்த காலப் பிழைகளைத் தவிர்த்து செயற்படவேண்டும். அதற்காக நாம் இந்த நல்லாட்சி அரசை அமைத்தவர்களை மீண்டும் அழைக்கின்றோம்.

எவ்வாறாயினும், இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை வெற்றிபெறும் சாத்தியக் கூறுகள் இல்லை. அதேபோன்று பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு நாம் ஆதரவளிக்கப் போவதும் இல்லை – என்றார். (ஐ)

## சுதாகரனுக்குப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கள் கையொப்பமிட்டு ஜனாதிபதி, பிரதமர், நீதி அமைச்சர் ஆகியோருக்குக்கருணை மனுவை அனுப்பி வைத்துள்ளனர்.

வடக்கு மாகாண சபையின் 119 ஆவது அமர்வு கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்தில் நேற்று நடந்தது. இதன்போது அரசியல் கைதியான ஆனந்த சுதாகரனுக்குப் பொது மன்னிப்பளிக்குமாறு வலியுறுத்திச் சபையால் ஜனாதிபதி மற்றும் பிரதமர், நீதி அமைச்சர் ஆகியோருக்குக் கருணை மனு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக அவைத் தலைவர் அறிவித்தார்.

ஆகவே அந்தக் கருணை மனுவில் சபையின் அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்கள் கையொப்பமிடவேண்டுமென்றும் அவர் கோரினார்.

சபையின் தேநீர் இடைவேளையின்போது கையொப்பங்கள் பெறப்பட்டு உடனடியாகவே அந்தக் கருணை மனு அனுப்பி வைக்கப்பட்டது. (ஐ-7)

## தொண்டர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வடக்கு மாகாணத்தில் 646 பேர் தொண்டர் ஆசிரியர்களாக இருந்து வரும் நிலையில், நேர்முகத் தேர்வு மூலம் 182 பேருக்கு மாத்திரம் நிரந்தர நியமனம் வழங்க அனுமதி வழங்கப்பட்டிருக்கும் நிலையில் அவர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வடக்கு மாகாண சபையின் 119ஆவது அமர்வு கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது அங்கு திரண்ட வடக்கு மாகாணப் பாடசாலைகளில் பல ஆண்டுகளாகக் கடமையாற்றும் தொண்டர் ஆசிரியர்கள் தமது நிரந்தர நியமனத்தை வலியுறுத்தி மாகாண சபை மற்றும் முதலமைச்சர் அலுவலகங்களின் வாயில்களை முற்றுகையிட்டுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமது கோரிக்கையை நிறைவேற்ற மாகாண சபை உறுப்பினர்கள் அனைவரும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என அவர்கள் வலியுறுத்தினர். (ஐ-7)

காலைக்கதிர்
Kalaikkathir



# பிரிட்டன் அனைத்துக் கட்சி நாடாளுமன்ற குழு தலைவருடன் இலங்கை இனப்படுகொலை தொடர்பான கலந்துரையாடல்

பிரித்தானிய அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் குழுவின் தலைவருடன் இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலை தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றுள்ளது. கடந்த சனிக்கிழமை லண்டனில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

தமிழர்களுக்கான அனைத்து கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழுவின் தலைவரைச் சந்தித்த புலம்பெயர் தமிழ் செயற்பாட்டாளர்கள் இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலை தொடர்பாக இலங்கைக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் பற்றி கலந்துரையாடியுள்ளனர்.




இதன்போது நாடு கடந்த தமிழீழ அரசின் முன்னணி செயற்பாட்டாளர் இளவரசன் ஜெயபாலன் தலைமையில் திலக் அன்றூஸ், கஜானன் ஞானசேகரம், கோபாலகிருஷ்ணன் குகச்செல்வம், கோவிந்தப்பிள்ளை லிங்கேஸ்பரன், கிருஸ்ணமூர்த்தி உமாராஜ், பாலசிங்கம் குமரேசன், சிவஞானலிங்கம் சுபாஷ்கர், கணேசபிள்ளை ஜதூர்த்தன், வரதராஜா மோகனரூபன், கௌசிகன் ஸ்ரீகுமார், பிரான்சிஸ் வசந்தராஜன், அஷந்தன் தியாகராஜா, இளையதம்பி கலைவாணன், புஸ்பதரன் புத்திரசிகாமணி, வசந்தகுமாரி சந்திரபாலன், மகேஷ்வரன் வசீகரன் ஆகியோர் இந்தக் கலந்துரையாடலில் பங்கெடுத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இலங்கைக்கு வந்து சேர்ந்தது ஆழ்கடல் ரோந்துக் கப்பல்




கொழும்பு, மார்ச் 28

இந்தியாவில் நிர்மாணிக்கப்பட்ட இலங்கை கடற்படையின் உயர்ரக ஆழ்கடல் ரோந்துக் கப்பல் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

இலங்கை கடற்படைக்காக வரையறுக்கப்பட்ட கோவை கப்பல்தளத்தினால் நிர்மாணிக்கப்பட்ட இந்தக் கப்பல் நேற்று முன்தினம் துறைமுகத்தை வந்தடைந்தது.

இதேவேளை, இந்தியாவிலிருந்து தனது கன்னிவிஜயத்தை மேற்கொண்டு இலங்கைக்கு வருகைதந்த இந்தக் கப்பல் கடற்படை மரபுகளுக்கு அமைய மரியாதை செலுத்தி வரவேற்கப்பட்டுள்ளது.

இந்தக் கப்பலை கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் சிரிமேவன் ரணசிங்க உள்ளிட்ட சிரேஷ்ட கடற்படை அதிகாரிகளும் பார்வையிட்டனர்.

இந்தியாவில் அண்மையில் இடம்பெற்ற நிகழ்வின்போது இலங்கை கடற்படையினருக்கு இக்கப்பல் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டதுடன், எதிவரும் தினங்களில் ஜனாதிபதியிடமிருந்து குறித்த கப்பல் அதற்கான ஆணை அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ள இருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்தக் கப்பலை வரவேற்கும் நிகழ்வில், சிரேஷ்ட கடற்படை அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

# அக்கரபத்தனைப் பிரதேச சபையும் இலங்கை தொழிலாளர் காங். வசம்

கொழும்பு, மார்ச் 28

நுவரெலியா - அக்கரபத்தனை பிரதேச சபைக்கான தலைவர் பதவியையும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கைப்பற்றியுள்ளது.

இதற்கமைய, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பாக தலைவர் பதவிக்கு போட்டியிட்ட சுப்பிரமணியம் கதிர்ச்செல்வன் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

இலங்கையில் கடந்த பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி நடைபெற்று முடிந்த உள்ளூராட்சிமன்ற தேர்தலில் மலையகத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் வெற்றியீட்டியிருந்தது.

இந்த நிலையில், அக்கரப்பத்தனை பிரதேச சபைக்கான தலைவர் மற்றும் உப தலைவர் தெரிவு மத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எச்.எம்.யு.பி. ஹேரத் தலைமையில் நேற்றுக் காலை இடம் பெற்றது.

இதன்போது, திறந்த முறையில் வாக்கெடுப்புக்



களை நடத்த முடிவு செய்யப்பட்டு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பாக சுப்பிரமணியம் கதிர்ச்செல்வனும், ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக வேலு சிவானந்தனும் போட்டியிட்டனர்.

எனினும், எட்டு வாக்குகளைப் பெற்று சபையின் தலைவராக இலங்கை தொழிலாளர் காங்கிராஸ் சார்பாக போட்டியிட்ட சுப்பிரமணியம் கதிர்ச்செல்வன் தெரிவு செய்யப்பட்டார்.

எதிராக போட்டியிட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் வேலு சிவானந்தன் 06 வாக்குகளைப் பெற்றுக் கொண்டார்.

இதேவேளை, அக்கரபத்தனை பிரதேச சபைக்கு உப தலைவரைத் தெரிவு செய்வதற்காக ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் சுப்பிரமணியம் சுதாகரும், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான பொதுஜன பெரமுன சார்பில் ஜயலத் விஜயதுங்கவும் போட்டியிட்டனர்.

இதில் பொதுஜன பெரமுனவில் போட்டியிட்ட ஜயலத் விஜயதுங்க 08 வாக்குகளைப் பெற்று உப தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

எனினும், இந்த வாக்கெடுப்புகளில் சுயேச்சையாக போட்டியிட்டு தெரிவானவர்கள் வாக்களிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# பிரதமர் ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராக வாக்களிக்கும் மனநிலையில் தமிழ் முற்போக்கு கூட்டணி!

கொழும்பு, மார்ச் 28

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராக வாக்களிக்கும் மனநிலையிலேயே தமிழ் முற்போக்கு கூட்டணி உள்ளது என தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கருமமொழிகள் அமைச்சரும், ஜனநாயக மக்கள் முன்னணி, தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை தலவாக்கலையில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-



மனோ தெரிவிப்பு

ஆளும் கட்சியின் பங்காளியாக நாம் இருக்கின்ற பொழுதிலும் ஐக்கிய தேசியக் கட்சி துரோகம் இழைப்பதால் பேச்சு நடத்தி விட்டு முடிவு ஒன்றை எடுக்க நாம் தள்ளப்பட்டுள்ளோம்.

எங்கள் கட்சிக்கும், அவரின் கட்சிக்கும் இடையில் பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. உள்ளூராட்சித்தேர்தலின் பொழுது பல இடங்களில் உறுதியளிக்கப்பட்ட பட்டியலின் அங்கத்துவங்கள் தராமல் ஐக்கிய தேசியக் கட்சி துரோகம் செய்துள்ளது.

கொழும்பில் மட்டுமல்லாது நுவரெலியாவிலும் இரண்டு, மூன்று ஆசனங்களை எங்களுக்குத் தராமல் ஐக்கிய தேசியக் கட்சி ஏமாற்றியுள்ளது.

இதற்கு அவர்கள் உரிய பதில் கூற வேண்டும். உரிய பதில் கிடைத்தால் மாத்திரமே நாங்கள் நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் தீர்மானிப்போம்.

ஆனால், நம்பிக்கையில்லாப் பிரேரணையை பயன்படுத்திக் கொண்டு கீழ்தனமாக கொள்கை மாறி பணத்திற்கு விலை போய், பதவிக்கு விலை போய் நடக்கும் ஒரு கொள்கை எம் கட்சிக்குக் கிடையாது.

அதேபோல், இவ்வாறான நல்ல சிந்தனை, நல்ல கொள்கை, நல்ல எண்ணம், கௌரவமான நடத்தை ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இருக்க வேண்டும். அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இருக்க வேண்டும் என தெரிவித்துக் கொள்கின்றேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(கு)

# உதயங்க மீண்டும் டுபாயில் சிக்கினார்

## இலங்கைக்குக் கொண்டுவர தீவிர முயற்சி



கொழும்பு, மார்ச் 28

ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க, டுபாயில் நேற்று முன்தினம் காலை அந்த நாட்டு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

நிதிக்குற்றப் புலனாய்வுப் பிரிவின் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரவி வைத்தியாலங்கார இதனைத் தெரிவித்தார்.

இலங்கைப் பொலிஸ் நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில், விசாரணைகளை மேற்கொள்வதற்காகவே டுபாய் அதிகாரிகள் உதயங்க வீரதுங்கவைக் கைது செய்துள்ளனர்.

இதையடுத்து, உதயங்க வீரதுங்கவை இலங்கை அதிகாரிகளிடம் ஒப்படைப்பது தொடர்பாக, டுபாய் அதிகாரிகளுடன் நிதிக்குற்றப் புலனாய்வுப் பிரிவு பேச்சு நடத்தி வருகிறது.

முன்னதாக அமெரிக்கா செல்ல முயன்றபோது டுபாய் அதிகாரிகளால் உதயங்க வீரதுங்க அந்த நாட்டு விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.

அவரைக் கொழும்புக்குக் கொண்டு வருவதற்கு மேற்கொண்ட முயற்சிகள் பலனளிக்காத நிலையில், உதயங்க வீரதுங்கவைக் கைது செய்வதற்கான சர்வதேசப் பிடியாணை நீதிமன்றம் மூலம் பிறப்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

வட்டு. கிழக்கு - துறட்டிப்பனை
அருள்மிகு முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்
நூதன பஞ்ச தள இராஜகோபுர
மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்



கும்பாபிஷேகம்
பங்குனி மாதம்
18ஆம் நாள் 01.04.2018
ஞாயிற்றுக்கிழமை
முகூர்த்தம்
காலை 9.10 மணி முதல்
10.25 மணி வரை

அன்னை முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பெற்ற வில்லு மண்டபத்தோடு கூடிய அதிகம்பீரமாகவும், அழகிய சிற்ப வேலைகளும் வர்ண வேலைகளும் அமையப்பெற்ற பஞ்சதள இராஜகோபுரத்திற்கும் புதிதாக வரவழைக்கப்பெற்ற நாகராஜப்பெருமானுக்கும் புதிய மணிக்கோபுரத்திற்கும் 01.04.2018 ஞாயிற்றுக்கிழமை சித்திரை நட்சத்திரமும், அமிர்தசித்தயோகமும் கூடிய காலை 9 மணி 10 நிமிடம் முதல் 10 மணி 25 நிமிடம் வரையுள்ள இடப இலக்கின சுப புண்ணிய வேளையில் பங்குனித் திங்கள் 16ஆம் நாள் (30.03.2018) வெள்ளிக்கிழமை அதிகாலை 6 மணிக்குள் கர்மாரம்பம். பங்குனித் திங்கள் 17ஆம் நாள் (31.03.2018) சனிக்கிழமை காலை 9 மணி முதல் எண்ணெய்க்காப்பு சாத்துதல் ஆரம்பமாகும்.

'கோபுர தரிசனம் கோடி புண்ணியம்'

இங்ஙனம்:
ஆலய பெறுநரும்
இராஜகோபுர திருப்பணிக் குழுவினரும்.




CJ PROMOTERS
Total Event Managment Solution

All kind of promotion
Birthday partys
Wedding ceromoney
Company events
Get to gather
Anniversary promotion
Anniversary parties
Dance Shows
Event Managers
Product Launchers
Promotional Events
Trade and Exhibition Stalls
Video Mapping
BTL Activations
Entertainers
DJs & Karaoke Systems
Games & Events
Indoor/Outdoor Advertising
Stall Designing
Offset/Digital Printing

+94772546511
No 65 Adiyapatham Road
Kalviyankadu Jaffna Sri Lanka
WWW.cjpromoters.simplesite.com
Mail cjpromoters1@gmail.com

# மரண அறிவித்தல்

## திருமதி சரஸ்வதி தர்மலிங்கம்



சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் கந்தரோடையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி தர்மலிங்கம் நேற்று (27.03.2018) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற உடுவில், மானிப்பாய் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் விசுவநாதர் தர்மலிங்கத்தின் அன்பு மனைவியும், சித்திரலேகா (அமெரிக்கா), சித்தார்த்தன் (யாழ். நாடாளுமன்ற உறுப்பினர்) ஆகியோரின் அன்புத் தாயாரும், கமலாம்பிகை, அன்னலட்சுமி, அமரர் குமாரசாமி மற்றும் கைலாயநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற Dr.வன்னித்தம்பியின் மைத்துனியும், Dr.ராமச்சந்திரன், மீனா ஆகியோரின் மாமியாரும், பிருந்தாகௌரி, தேவநந்தன், கலாவாணி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.03.2018) புதன்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லமான "காமதேனு", கந்தரோடை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கந்தரோடை சங்கம் புலவு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கந்தரோடை,**
**சுன்னாகம்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.03.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.